# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 09 திங்கட்கிழமை (26.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 304






14 சிக்கித் தவிக்கும் இலங்கை



24 விதனுக்கு இரு விருதுகள்



25 மீண்டும் வென்றது வாரியர்ஸ்


# போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் தேவை

## பான் கீ-மூன் நேரில் மஹிந்தவிடம் தெரிவிப்பு


கொழும்பு, செப்ரெம்பர் 26

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறுவதற்கு "நம்பகமான உள்நாட்டு பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள்" மிக அவசியம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் வலியுறுத்திக் கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே நம்பகமாக

பக் 27



ஐ.நா. பொதுச் சபையின் 66ஆவது கூட்டத் தொடருக்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசுவதற்கு முன்னர் இருவரும் ஒளிப்படப்பிடிப்பாளர்களுக்கு 'போஸ்' கொடுக்கின்றனர்.

## சோமவன்ஸவுக்கு வலைவீச அரச தரப்பினர் கடும்முயற்சி

கொழும்பு, செப். 26

ஜே.வி.பிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவைத் தொடர்ந்து ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தரப்பினரைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்ள அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக பேச்சுகள் இடம்பெறுகின்றன என்றும் பேச்சுகளின் முடிவில் சோமவன்ஸ அணியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஒரு கூட்டணிக் கட்சியாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அரச வட்டாரம் மேலும் கூறுகின்றது.

பக் 27

## ஜனாதிபதிக்கு அழைப்பாணை அமெ. நீதிமன்றம் அனுப்பியது

கொழும்பு, செப். 26

அமெரிக்காவில் தங்கியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நியூயோர்க் மாவட்ட நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது எனத் தெரியவருகிறது.

கேணல் ரமேஸின் மனைவி நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 'தேவி எதிர் ராஜபக்ஷ' வழக்கிலேயே ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என ஈ.ஐ.என். செய்தி தெரிவித்துள்ளது.

இந்த வழக்கை இலங்கை

பக் 27

## பொலிஸ் அத்தியட்சகரை சுட்டுக் கொன்றார் சகா: அம்பாறையில் சம்பவம்


கொழும்பு, செப். 26

அம்பாறை பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் ஒருவர் மீது ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவரும் நேற்று உயிரிழந்தனர்.

சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனின்றி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முதலில் உயிரிழந்தார். சிலமணிநேரம் கழித்து பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டரும் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நேற்றுக் கூறினார்.

பக் 27

## ஐ.நா. முன்றலில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, செப். 26

ஐக்கிய நாடுகள் தலைமையகத்திற்கு முன்னால் வட அமெரிக்கத் தமிழர்கள் 'பொங்குதமிழ்' ஆர்ப்பாட்டத்தில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

''ஐ.நாவின் வருடாந்தக் கூட்டத்தில் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றியவேளை, பொங்கு தமிழர்களாக எழுச்சிபூண்ட தமிழர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் தமிழின அழிப்பு முகத்தை கொட்டொலிகளாலும், பதாதைகளாலும் அம்பலப்படுத்தினர்'' என்று நாடு கடந்த தமிமீழ அரசின் நாதம் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கொட்டு மழைக்கு மத்தியில் இடம்பெற்ற பொங்குதமிழ் மக்கள் எழுச்சி நிகழ்வில் அமெரிக்கத் தமிழர்களுடன் பெருந்திரளான கனேடியத் தமிழர்களும் இணைந்திருந்தனர்.

தமிழீழ தேசிய அரசின் இந்த ஏற்பாட்டுக்கு வட அமெரிக்க தமிழ் அமைப்புக்கள் பலவும் உறுதுணை வழங்கியிருந்தன. நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் பொங்குதமிழ் சிறப்புரை ஆற்றினார்.

''ஈழத்தமிழ் மக்களது அரசியல் அபிலாசையாகவும், உலகத் தமிழர்களின் விருப்பாகவும் உள்ள தமிழீழத்தை வென்றெடுக்கும் வரை எமது விடுதலைப் போராட்டம் ஓயாது'' என அவர் அங்கு முழக்கமிட்டார்.

சர்வதேச சட்டவழிமுறைகளுக்கூடாக ஈழவிடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலக அரங்கில் முன்னிறுத்தி, விடுதலையை வென்றெடுப்பதற்குரிய செயற்பாடுகளை நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கும் எனவும் அவர் தெரிவித்த

## கொன்ஸ்டபிள் சுட்டுக்கொலை

கொழும்பு, செப். 26


அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சுட்டதில் பொலிஸ்கான்ஸ்டபிள் குருநாகலில் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் பொலிஸ் கொன்ஸ்டபிளை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். காலை 9.30 மணிக்கு குருநாகல் நகரில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த கொன்ஸ்டபிள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார். எனினும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் தெளிவாக காணப்படும்.

# பிளேக்குக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மனித நாகரிகமற்றதொரு செயல்

## கண்டிக்கிறது தீவக மக்கள் ஒன்றியம்

யாழ்ப்பாணம், செப்.26

ஈழத்தமிழர்களின் கருத்தறிய வருகைதந்த அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களின் பிரதிநிதி றொபேட் ஓ பிளேக்கை அவமரியாதை செய்யும் வகையில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை அரச ஆதரவுபெற்ற ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சி செயற்பட்ட முறை குறித்து தமிழ் மக்கள் மிகுந்த வருத்தம் அடைவதோடு அமெரிக்க அரசிடமும் அமெரிக்க குடி மக்களிடமும் மன்னிப்புக் கோரி நிற்கின்றனர்.

தமிழர்களின் பண்பாட்டு மண்ணான யாழ்ப்பாண மண்ணில் செழுமைமிக்க தமிழ் பண்பாட்டையே அவமரியாதை செய்யும் வகையில் குறித்த ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சி நடந்து கொண்டமை மனித நாகரிகத்தை மாசுபடுத்துவதாக அமைந்துள்ளது. இந்தச் செயலை நெரிக்கப்பட்ட குரல் வளைகளுக்கூடாக தீவக மக்கள் ஒன்றியம் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேற்படி ஒன்றியம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தீவகத்தின் இன்றைய நிலை தொடர்பில் சில விடயங்களை இங்கே முன்வைப்பது தீவக மக்கள் விரும்பியிருக்கின்ற மனித விடுதலை, சமூக விடுதலை என்பவற்றை வெளிப்படுத்த உதவியாக இன்னும் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவம் மற்றும் கடற்படைகளினுடைய நெருக்குவாரங்களுக்கு மத்தியில் ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சியின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கின்ற செயற்பாடுகள், அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற செயற்பாடுகள், மனித உரிமை மீறல் செயற்பாடுகள் என்பவற்றால் மௌனமாக்கப்பட்ட மனித சமூகமாக தீவக மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஆள் கடத்தல், கப்பம் சட்டவிரோத வணிகம் என்பவை மூலமாக இவர்கள் புரிந்த பயங்கரவாதச் செயற்பாடுகளால் புத்திஜீவிகளின் உணர்வுகளும், குரல்களும் உறை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமோ, விமர்சன உரிமையோ வழங்கப்படாமையால் சிந்தனையாளர்களும், படித்தவர்களும், சில வசதி படைத்தவர்களும் தீவகத்தை விட்டு வெளியேறி இடம் பெயர்ந்து புலம் பெயரந்தும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

# தொடரும் அவலம்

நெடுந்தீவு, செப். 26

வழமைக்கு மாறாக தன் சேவையைத் தொடர்ந்த ''வடதாரகை'' படகால் நெடுந்தீவுப் பயணிகள் நிர்க்கதியாகி நின்று தவித்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

நேற்று மாலை 3 மணிக்கு நெடுந்தீவில் இருந்து சேவையைத் தொடர வேண்டிய - வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான - 'வடதாரகை' வழமைக்கு மாறாத 130 பயணிகளுடன் 1.50 மணிக்கே புறப்பட்டது.

இந்த நிலையில் வழக்கம் போல் மாலை தமது பயணத்தை மேற்கொள்ள நெடுந்தீவு இறங்குதுறை முகத்தை வந்தடைந்த பயணிகள் ஏமாற்றமடைந்தனர். 2 மணி தொடக்கம் 4 மணிவரை இறங்குதுறைமுகத்தில் காத்திருந்தனர். பின்னர் கடற்றொழில் சமாசத்துக்கு சொந்தமான படகில் பயணி ஒருவருக்கு 125/- வீதம் செலுத்தியே பயணத்தை மேற்கொண்டனர்.

# மீள்குடியமர்வில் திடீர் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 26

இன்று திங்கட்கிழமை கிளாலி கிராம சேவகர் பிரிவுக்கான மீள்குடியேற்றம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. எனினும் அன்றையதினம் குறித்த பகுதியில் சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் அனுமதிக்கப்படவில்லை, இடைநிறுத்தப்படும் பகுதிகளுக்கான மீள்குடியேற்றத் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (10-323)

# மீள்குடியேற்றம் என்கின்ற போர்வையில் மக்கள் வீதியில்; முகாம்கள் விரிவாக்கம்

## ஜனாதிபதியின் ஐ.நா. உரைக்கு சிவசக்தி ஆனந்தன் பதிலடி

கொழும்பு, செப். 26

''மீள்குடியேற்றம் என்ற போர்வையில் மக்கள் நடுத்தெருவில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்; இராணுவ முகாம்கள் துரித கதியில் விஸ்தரிக்கப்படுகின்றன; தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இதுதான் வடக்கு மாகாணத்தின் இன்றைய உண்மையான நிலைமைகள் என்பதை சர்வதேச சமூகத்திற்குத் தெளிவாக எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.'' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அறிவித்துள்ளது.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 66ஆவது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் இன்றைய நிலைமைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் உரையில் குறிப்பாக ''வடமாகாணத்தில் பயங்கரவாதிகள் கடந்த 30 வருட காலமாக அழித்த உட்கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாப்புப் படையினர் நிகழ்காலத்தில் மேம்படுத்தி வருகின்றனர். ஆயுதம் தாங்கிய இராணுவம் வடக்கில் அதிகளவில் ஈடுபடுத்தப்படவில்லை. அங்கு குறைந்தளவிலான படையினரே உள்ளனர். இடம்பெயர்ந்த மக்களுள் 95 சதவீதமானோர் மீளக்



குடியமர்த்தப்பட்டுள்ளனர்'' போன்ற விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

இந்த விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இடம்பெயர்ந்த மக்களுள் 95 சதவீதமானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று சர்வதேச சமூகத்திடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். மீள்குடியேற்றம் என்பதன் அர்த்தம் இன்னும் இலங்கை அரசுக்குப் புரியவில்லை என்பதையே ஜனாதிபதியின் கூற்று எடுத்துக்காட்டுகின்றது என்பதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது.

மீள்குடியேற்றம் என்ற போர்வையில் மக்கள் நடுத்தெருவில் இறக்கிவிடப்பட்டுள்ளனர். அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களில் அடிப்படை வசதிகள் கூட அரசால் செய்துகொடுக்கப்படவில்லை. மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

வீடுகள் இல்லாமல் மக்கள் கொட்டில்கள் அமைத்தே வாழ்கின்றனர். மலசலகூட வசதி கூட இல்லை. காட்டுப் பிரதேசங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதால் பாம்புக்கடி உட்படப் பல்வேறு அவலங்களை இன்று மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் தவிக்கும் நிலையில் அது தொடர்பில் அரசு கவனம் செலுத்தாமல் தமிழர் தாயக பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டு அரங்கேற்றி வருகின்றது.

வடக்கில் குறைந்தளவு படையினரே நிலைகொண்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் எதற்கு இராணுவ முகாம்கள் துரித கதியில் விஸ்தரிக்கப்படுகின்றன? ஏன் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன? - என்ற கேள்விகளைக் கேட்க நாம் விரும்புகின்றோம்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்றோம் என்ற போர்வையில் இராணுவ முகாம்களே வடக்கில் விஸ்தரிக்கப்படுகின்றன. இவைதான் இன்று வடக்கின் உண்மையான நிலைமைகள் என்பதைத் தெளிவாக வெளியுலகுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. (ஒ-சி)

# ஆஸி. தூதுவரின் யாழ். விஜயத்தில் மர்மம் பாதுகாப்புத் தரப்புக்கு வந்துள்ள சந்தேகம்

கொழும்பு, செப். 26

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்தீ குளுக்மானின் அண்மைய யாழ்ப்பாண விஜயம் குறித்து பாதுகாப்பு தரப்பினருக்குச் சந்தேகம் வந்துள்ளதாம்.

உயர் ஸ்தானிகர் குளுக்மான் அண்மையில் வடக்கே விஜயம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்றில் குளுக்மான் மூன்று நாள்கள் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மூன்று நாள்கள் குளுக்மான் குறித்த ஹோட்டலில் தங்கியிருந்தமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் இந்திய ஊடகவியலாளர் சிலர் இலங்கை தொடர்பில் தயாரித்த விவரணமொன்றுக்கு குறித்த மனித உரிமை விவகார சட்டத்தரணி ஆதரவு வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் இந்த விவரணத்தில் குறித்த பெண் சட்டத்தரணி நேர்காணல் வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

# நிகழ்வுகள்

## யாழ். பல்கலையில் இன்று 'உடையார் மிடுக்கு'

யாழ்ப்பாணம், செப்.26

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நடத்தும் ''யாழ்ப்பாண வாழ்வியல் பொருட் கண்காட்சி'' நிகழ்வின் மூன்றாம் நாளான இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நுண் கலைத்துறை நாடகமும் அரங்க கலை மாணவர்களால் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு' நாடகம் க.ரதிதரனின் நெறியாள்கையில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (ஒ-323)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுவிழா இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செய[illegible] மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். அனைத்து ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்விப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-311)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.26

வட்டக்கச்சி விளாத்திக்காடு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சோதி விநாயகர் ஆலயம் முன்பாக இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கமக்கார அமைப்பு தலைவர் அறிவித்துள்ளார். (323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறைச்சாலையில் கைதிகள் தினம் பாடி மகிழ்ந்தனர் அங்குள்ள கைதிகள்

## றோட்டறிக் கழக ஏற்பாட்டில் போட்டிகள்



நேற்றைய நிகழ்வில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் வரவேற்புரை நிகழ்த்துவதையும், கைதி ஒருவர் பாட்டுப்பாட ஏனைய கைதிகள் அமர்ந்திருந்து ரசிப்பதையும் காணலாம். (ஒ-4)

யாழ்ப்பாணம், செப். 26

யாழ். சிறைச்சாலையிலுள்ள கைதிகள் நேற்றையதினம் கைதிகள் தினத்தைக் கொண்டாடினர். யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தான ஏக்கநாயக்க தலைமையில் யாழ். சிறைச்சாலையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

தேசிய சிறைக் கைதிகள் தினம் செப்ரெம்பர் 12 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. யாழ். சிறைச்சாலையில் கடந்த 12 ஆம் திகதி கொண்டாடப் படாததனால் நேற்றைய தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். நகர்மைய றோட்டறிக் கழகம் மற்றும் சுன்னாகம் றோட்டறிக் கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்த நிகழ்வில் கைதிகள் 300 பேர் பங்குபற்றினர். கைதிகளில் இளம் வயதினரே அதிகமாக உள்ளனர். ஆண்கள், பெண்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இன்னிசைக் கச்சேரியில் கைதிகள் தமது திறமையை வெளிக் கொணர்ந்தனர். இது அவர்களுக்கான போட்டியாகவும் அமைந்திருந்தது. மேலும் பல போட்டிகளும் நடைபெற்றன.

யாழ். திருச்சிலுவை கன்னியர் சபையினர் இதற்கான சிற்றுண்டிகளையும் பரிசில்களையும் வழங்கினர். வெளியிலிருந்தும் விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். வெற்றிபெற்றவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அத்தியட்சகருடன் பிரதம சிறைக்காவலர் காமினி பண்டார, சிறைக் கைதிகள் நலன்புரி சங்கச் செயலாளர் பி.சுசிதரன் உள்ளிட்ட பல சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஒ-4)

# முன்னாள் போராளிக்கு திருமணப் பதிவு நேற்று யாழ். சிறைச்சாலையில்

## கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்டு நடந்தது



யாழ்ப்பாணம், செப். 26

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி ஒருவருக்கு யாழ். சிறைச்சாலையில் நேற்று திருமணப் பதிவு இடம்பெற்றது.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தப் பதிவை திருமணப் பதிவாளர் இந்திரா சிவகுமார் மேற்கொண்டார்.

வேலணை, சரவணையைச் சேர்ந்த ம.ஜனகன் யாழ். கொட்டடியைச் சேர்ந்த ஜ.றேணுகா தேவி இருவருக்குமே இந்த திருமணப்பதிவு இடம்பெற்றது. ஏற்கனவே திருமணமான ஜனகன் - றேணுகாதேவி தம்பதியருக்கு இரு பிள்ளைகளும் உள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

ஜனகன் சந்தர்ப்ப சூழ்நிலையினால் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தார். இவரைத் திருமணம் முடிப்பதற்காக றேணுகாதேவி வன்னிக்குச் சென்றார். அங்கு இருவருக்கும் திருமணம் நடந்து முடிந்தது. ஆனால் திருமணப் பதிவு நடைபெறவில்லை.

2009 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். வவுனியா ஜோசப் முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். றேணுகா தேவியையும் இரண்டு பிள்ளைகளையும் விடுவித்த இராணுவத்தினர் ஜனகனை பூஸா முகாமுக்கு மாற்றினர். அங்கு சுமார் 21 மாதங்கள் வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் கொழும்பு சி.ஆர்.பி. முகாமுக்கு மாற்றி களுத்துறை நீதிவான் நீதிமன்றில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த ஜனவரி மாதம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள இவரது மூத்த மகளை பாடசாலையில் சேர்ப்ப தாயின் அவரது பெற்றோரின் திருமணப்பதிவு தேவை என்று பாடசாலைச் சமூகத்தினர் கூறினர்.

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி திருமணப் பதிவை மேற்கொள்ளத் தீர்மானிக் கப்பட்டது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக சி.ஆர்.பி. முகாமிலிருக்கும் ஜனகன் நேற்றைய தினம் யாழ். சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டு திருமணப்பதிவு நிறைவேறியது. இன்னும் சில நாள்களில் அவர் திரும்பவும் கொழும்பு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளார். இவர்களது மூத்த மகளுக்கு வயது 6. மகனுக்கு 2½ வயது.

ஜனகன் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஜனாதிபதி சட்டமா அதிபர், மனித உரிமை அமைப்பிடமும் முறையிட்டுள்ளார்.

எப்போது விடுதலை, விடிவு கிடைக்கும் என்று காத்திருக்கின்றனர் ஜனகன் குடும்பத்தினர். (ஒ-4)

# அமெ. நீதிமன்றில் ஆஜராகத் தயார்; சவால் விடுக்கின்றார் சவேந்திர சில்வா

கொழும்பு, செப். 26

அமெரிக்க நீதிமன்றத்தில் தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார் என்று ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலளிக்குமாறு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு நியூயோர்க்கின் தெற்கு மாவட்டத்தில் உள்ள மன்ஹாட்டன் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பாணை அவரது தனிப்பட்ட வதிவிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அப்போது அவர் அங்கிருக்கவில்லை. வீட்டில் இருந்த ஒருவரே அந்த அழைப்பாணையை பெற்றுக் கொண்டுள்ளார்.

அழைப்பாணை அனுப்பிய அமெரிக்க நீதிமன்றத்துக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா 21 நாள்களுக்குள் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே, தன் மீதோ தனது கட்டளையின் கீழ் இருந்தவர்கள் மீதோ சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உலகின் எந்த நீதிமன்றத்திலும் வழக்கை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார் என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

எவரும் தன் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்த முடியும் என்றும் அவற்றை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறார் என வும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இதுதொடர்பாக நியூயோர்க்கில் தங்கியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் தங்கியுள்ள நேரம் பார்த்து - அவருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என நியூயோர்க்கில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி ஐ.நாவில் உரையாற்றுவதற்கு சற்று முன்னதாகவே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு நியூயோர்க்கில் அளிக்கப்பட்டுள்ள இராஜந்திரப் பாதுகாப்புக் காரணமாக அவரைக் கைது செய்யவோ, தடுத்து வைக்கவோ, அவர் மீது குற்றவியல் வழக்குத் தொடுக்கவோ முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இராஜதந்திரி ஒருவருக்கான பாதுகாப்பு அவர் பணியகத்தில் இருக்கும்போதே செல்லுபடியாகும் என்றும், அவர் பணியாற்றும் இடத்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டால் அது செல்லுபடியாகாது என்று மனித உரிமைகள் சட்ட வாளர் அலி பேடன் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அவரது வசிப்பிடத்துக்கே அழைப்பாணை அனுப்பப்பட்டது என வும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவுக்கான இராஜதந்திரப் பதவியில் உள்ள ஒருவருக்கு எதிராக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ள இந்த விவகாரத்தை ஐ.நா பொதுச் செயலரின் பணியகத்திடம் கொண்டு செல்வது குறித்து நியூயோர்க்கில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் அவசர ஆலோசனை நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

# மாற்றுத் திறனாளிகளுக்கு அமெ. உதவி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் புனர்வாழ்வுக்கென மூன்று மில்லியன் டொலர் நிதியுதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், வருமானத்துக்கான வழியொன்றைத் தேடிக்கொள்வதற்குமான உதவிகளுக்காகவே இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 1,200 மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் பிறப்பலேயே உடல் குறைபாடுகளைக் கொண்டிருந்தவர்கள். போரால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தவர்கள்குறித்த சரியானதொரு கணக்கெடுப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. (உ)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அமைச்சரின் சகாக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 26

நேற்று யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேராவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய அரச அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சகாக்கள் குடாநாட்டில் இடம்பெற்று வரும் பெண்கள் மீதான வன்முறைகள் கசிப்பு உற்பத்தி திருட்டு, கொள்ளை போன்ற சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரின் தலைமையில் சென்ற அமைச்சரின் சகாக்கள் குழுவில் யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவும் அடங்கி யிருந்தார்.

இந்தச் சந்திப்பில் நாவாந்துறை, பாசையூர், கொக்குவில் போன்ற இடங்களில் இடம் பெற்றது போன்ற அசாதாரண நிலைமை இனியும் ஏற்படா திருக்க அமைச்சரின் சகாக்கள் குழுவினர் பொலிஸ் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்தனர் என்று அமைச்சர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் ஏழு பொலிஸ் கண்காணிப்பு அணிகளை நடவடிக்கையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் சமூகவிரோதச் செயற்பாடுகளை இதன்மூலம் கட்டுப்படுத்த முடியும் எனவும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சண்முகம்பிள்ளை

( ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சண்முகம்பிள்ளை நேற்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பார்வதியார் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவசிதம்பரம், காலஞ்சென்றவர்களான மஹாலஷ்மி, சிவகாந்தம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்துமதி, சிவமதி (ஆசிரியை, அராலி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விசுவநாதர், ஏகாம்பரநாதன் (உதவி முகாமையாளர் - இ.போ.ச) ஆகியோரின் அன்பு மாமனும் தயாளினி, விமலினி, வித்தகன், ஷங்குகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.09.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 11 மணியளவில் பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (8595)(45)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிசிலியா இம்மானுவேல் (குணம்)



பாலாவி வீதி, கரம்பன், ஊர்காவற்றுறையை பிறப்பிடமாக கொண்டவரும் லூரியாஸ் வீதி, கொட்டாஞ்சேனையில் வசித்து வந்தவருமாகிய திருமதி சிசிலியா இம்மானுவேல் (குணம்) கடந்த (23.09.2011) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் பொன்னையாபிள்ளை (பிரபல வெயாங்கொடை வர்த்தகர்) - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற G.A. இம்மானுவேல் (OIC, இலங்கை புகையிரத திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும் முன்னாள் யாழ். ஆயர் காலஞ்சென்ற அதிவணக்கத்துக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கிறகறி - எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகளும் திருமதி பிரான்சிஸ்கா அருள்மணி எட்வேட் (Retired teacher, St. - James Girls' School, Jaffna), டென்சில், திருமதி ஜயந்தி புனிதராஜன் (France - முன்னாள் ஆசிரியை, கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் ம.வி.), திருமதி லூசிலா ஜெயரட்ணம் (Netherland - முன்னாள் ஆசிரியை, கரம்பன் சண்முகநாதன் ம.வி), திருமதி பிறிசில்லா எல்மோ (France) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற B.M. எட்வேட் (Former Grade I Principal), புனிதராஜன் (France - முன்னாள் பொறியியலாளர், KKS Cement Corporation ), ஜெயரட்ணம் (Netherland), எல்மோ (France) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற ஆனலட், றெனோல்ட் எட்வேட் (இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை - முன்னாள் முகாமையாளர் இலங்கை வங்கி - நெடுந்தீவு), டேனியா (M.Sc Student, IBMBB, University of Colombo), ஜெறோல்ட் (Netherland), ஜொஷேனா (Netherland), பிறண்டன் (France), மறி சமந்தா (France) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற அக்னேஸ், பயஸ் (Colombo), சிங்கராயர் (Canada- முன்னாள் கட்டட திணைக்கள பொறியியலாளர், வட பிராந்தியம்), விக்டர் (சீதுவை), வயலற் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை, மேபல், மனுவலா, வசந்தா, எட்வேட் துரைசிங்கம், Rev. Sr. James (AC) Rev. Sr. அஞ்சலீனா (HFC) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 50/1, பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (28.09.2011) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கரம்பன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50/1, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (8597)

தகவல்:
றெனோல்ட் எட்வேட்
(இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

# அனுராதபுரத்தில் இடம்பெற்ற ஆசிரியர் சங்க பேராளர் மாநாடு

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 54 ஆவது பேராளர் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை அனுராதபுரம் புதிய நகர் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த பேராளர் மாநாட்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் சீ.ஜயதுங்க, உபதலைவர்களான எஸ்.சிவராஜ்குமார், ஜ.ஜயசிங்க,எச்.எல்.சமீன், வசந்தி திஸாநாயக்க ஆகியோர் உள்ளடங்கிய தலைமைக்குழுவின் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையைத் தொடர்ந்து மாநாட்டினைச் சட்ட பூர்வமானதாக்கும் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து காலஞ்சென்ற தலைவர்களையும் உறுப்பினர்களையும் நினவு கூரும் அக வணக்கம் இடம்பெற்றது. தலைவர் உரையைத் தொடர்ந்து மாநாட்டின் அறிக்கையினைச் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வாசித்தார். தொடர்ந்து 2011-2012 காலப்பகுதிக்கான தலைவராக பிஜந்த பெனான்டோவும், செயலாளராக ஜோசப் ஸ்ராலின் உம், பொருளாளராக நிசாந்த தேசப்பிரியவும் தெரிவு செய்யப்பட்டடனர். இதனைத் தொடர்ந்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்டப்பிரதிநிதிகள் தமது முன்மொழிவுகளை முன்வைத்தனர். இதில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல்வேறு மாவட்டப் பிரதிநிதிகளும் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர். (க-405)

# கடலரிப்பால் ஒலுவில் அழியுமா? மீனவர்கள், மக்கள் அச்சம்

அம்பாறை மாவட்டத்தில் கடலோரக் கிராமங்களில் ஒன்றான ஒலுவில் கிராமம் நாளாந்தம் கடலரிப்பிற்கு உள்ளாகி வருவதால் விரைவில் அழிந்துவிடக் கூடிய ஆபத்து இருப்பதாக மீனவர்களும் கடலோரக் காணி உரிமையாளர்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே நிலப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள தமது கிராமம் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பை கடலரிப்பிற்கு இழந்து விட்டதாக அவர்கள் கூறினர்.

ஒலுவில் பரதேசத்தில் அரசினால் தற்போது புதிய துறைமுகமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. துறைமுகப் பணிகளுக்காக ஒரு பகுதியில் இடம்பெற்று வரும் கடல் நீர் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாகவே தமது பகுதியில் இந்த கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்களும், காணி உரிமையாளர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒலுவில் கடலோரப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் பாதிப்பு ஏற்படுவதை ஏற்றுக் கொண்டுள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர், துறைமுகப் பணிகளின் போது இப்படியான நிலைமை தற்காலிகமாக ஏற்படும் என்றும் காலப்போக்கில் வழமை நிலை வந்துவிடும் என்று துறைமுக அபிவிருத்தி அதிகார சபையினால் தனக்கு பதிலளிக்கப்பட்டதாகக் கூறினார்.(உ)

THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L, A/L, B.A மாணவர்களுக்கு ஆங்கில இலக்கண,SPOKEN ENGLISH வகுப்புகள் By விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக, சண்டிலிப்பாய்.
Tel- 077 6751649

கிளி/முருகானந்த மகா வித்தியாலயம்
ஆசிரியர் தேவை

எமது பாடசாலைக்கு மாலை நேரத்தில் தரம் 6 - 11 வரையான வகுப்புகளுக்கு ஆங்கிலம், தமிழ் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தேவை.
நியாயமான ஊதியம் வழங்கப்படும். தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

# கண்ணீர் அஞ்சலி

எமது ஊரைச் சேர்ந்த

அமரர் சின்னப்பு சிவப்பிரகாசம்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காளி அம்பாள் தேவஸ்தானம்
இந்து இளைஞர் மன்றம், சங்கானை.

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

1Kg 800/=

- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

அவதானம்

ஆகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் நிச்சயம் உண்டு.

அனுப்பப்படும் பொதிகள், ஆவணங்கள் தொடர்பான சகல விபரங்களையும் உங்கள் கையடக்க தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள SMS செய்ய வேண்டிய இலக்கம். 00447720334455

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள், வீசா சேவைகள், கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113 இல. 01 பிறவுண் வீதி
(நிபந்தனைக்குட்பட்டது) நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

- உலகின் எப்பாகத்துக்கும் செல்வதற்கான அனைத்து விமானங்களுக்கான ரிக்கெட்டுக்கள்
- அனைத்து நாடுகளுக்குமான பொதிகள் சேவைகள்
- வாடகை வாகன சேவைகள் (ஒரு மணித்தியாலத்துக்கு ரூபா 550/=)
- இந்தியாவுக்கு தல யாத்திரை ஒழுங்குகள் (திருப்பதி , அன்னை வேளாங்கன்னி உட்பட பல திருத்தலங்களுக்கு 4 பகல் 3 இரவு யாத்திரைகளுக்கான கட்டணம் ரூபா 16875+வரிகள்

இச்சேவைகள் யாவற்றையும்
Nation Popular Travels & Tours
(82, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்)
மூலமாக நெல்லியடியில் வழங்குவோர்

விநாயகா

தொலைத்தொடர்பு நிலையம் & பல்பொருள் விற்பனை நிலையம்,
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி.
தொடர்புகளுக்கு: 0212264690, 0777250918

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/அல்வாய் சிறீலங்கா வித்தியாசாலையின்



மாணவிகள் இ.ராகவி (168 புள்ளிகள்), செ.திவ்வியா (161 புள்ளிகள்) 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற இ.சங்கர்சன், த.சிநேகா ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

இப் பெறுபேறுகளைப் பெற அயராது உழைத்த வகுப்பாசிரியை செல்வி த. குமுதினி அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் முயற்சி தொடர வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்,
பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்கம்.

# 66ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.இ.சி.சுந்தரலிங்கம்
(சுனாமி சுந்தா)
(பிரபல முன்னாள் மூத்த செய்தியாளர், உதயன்)



இவர் தனது அறுபத்தாறாவது பிறந்தநாளை இன்று (26.09.2011) திங்கட்கிழமை சுவிசில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துபவர்கள்:
மனைவி-சு.பாரதாதேவி,
பிள்ளைகள்: சுபா,சுபாஸ், அருந்தவராஜா, சுனேகா, சுகன்யா, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தேவி இல்லம்'
பத்தியவத்தை,
வதிரிமேற்கு

அன்பு மகள்
செ.சுபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய தீர்வே காலத்தின் தேவை

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்றியமையாதது என்பதையே இன்றைய அரசியல் சூழ்நிலைகள் உணர்த்துகின்றன. ஆகவே தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும் - இப்படி மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசு மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் மன்னார் ஆயரின் கோரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த பேச்சுகளை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தற்போது நடத்தி வருகிறது. அதே சமயம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றையும் அரசு அமைக்க உள்ளது.

அரசு - கூட்டமைப்பு பேச்சும், தெரிவுக்குழுவும் காலத்தை இழுத்தடிக்கும் நோக்கம் கொண்டவை என்பதில் சந்தேகம் இல்லை. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டு இறுதி அறிக்கை வெளியிடப்படாமலேயே கிடப்பில் போடப்பட்டு விட்டது. தற்போது அமைக்கப்பட்டுள்ள தெரிவுக் குழு ஓர் அரசியல் தீர்வை முன்வைத்தாலும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக அது இருக்கப்போவதில்லை. இதுவும் கிடப்பில் போடப்படலாம். அல்லது முற்றுமுழுதாக சிங்கள மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்திருப்பதன் பிரதான நோக்கமே பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆதரிக்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வை எட்டுவதுதான்.

இதனைக் கருத்தில் கொண்டே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என்று ஆயர் வலியுறுத்தி உள்ளார்.

பெரும்பான்மைச் சிங்களவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய எந்த ஓர் அரசியல் தீர்வும் தமிழ் மக்களின் குறைந்த பட்ச அரசியல் அபிலாஷைகளையாவது நிறைவு செய்யப் போவதில்லை.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் மன்னார் ஆயரின் கருத்துக்கள் முக்கியமானவை.

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்றியமையாதது என்பதையே இன்றைய அரசியல் சூழ்நிலைகள் உணர்த்துகின்றன. எனவே தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை விரைவில் வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும். அரசியல் தீர்வை வழங்குவதற்கான வாய்ப்புகளும் அனைத்து அதிகாரங்களும் தற்போதைய அரசிடம் உள்ளன. எனவே, ஒருமித்த மனதில் தமிழர்களுக்கு அதிகாரங்கள் வழங்க அரசு முன்வர வேண்டும். பல்லின சமூகத்தினர் வாழும் நாடு இலங்கை. இங்கு அனைவரும் சுமுகமாக வாழ்வதற்கு அரசு வழிசமைத்துக் கொடுக்க வேண்டும்'' - என்று தெரிவித்திருந்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இதுவரை தடையாக இருந்தவை:

1. ஆளும் கட்சி கொண்டுவரும் எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் அரசியல் சுயலாபம் கருதி எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது.
2. விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் பலமான ஆளும் கட்சி ஒன்றை அமைக்க முடியாது போனமை.
3. அரசமைப்பை மாற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறமுடியாது போனமை.
4. கடந்த முப்பது வருட கால ஆயுதப் போராட்டத்தின் போது விடுதலைப்புலிகள் இயக்கம் தனிநாட்டுக் கோரிக்கைக்கு குறைவான எந்த ஓர் அரசியல் தீர்வையும் ஏற்க மறுத்து வந்தமை.

ஆனால் இன்று இந்தத் தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு பதவிக்கு வந்த அரசுகளில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய பலமான அரசியல் நிலையில் இருந்து வருகிறது.

அரசமைப்பை மாற்றக்கூடிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் அரசு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் உடைக்கப்பட்டு பலவீனமாக்கப்பட்டு விட்டன. எந்த ஒரு கோரிக்கையை முன்வைத்தும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பலம் எதிர்க்கட்சிகளுக்கு இப்போது கிடையாது. புலிகள் இயக்கமும் அழிக்கப்பட்டு தமிழ்க் கட்சிகள் தீர்வு ஒன்றுக்கு அரசிடம் கையேந்தும் நிலையே இன்னமும், இப்போதும் தொடர்கிறது.

மொத்தத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அனைத்துத் தடைகளும் தற்பொழுது நீக்கப்பட்டு விட்டன. ஆனால், மன்னார் ஆயர் கூறியது போன்று தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வு மட்டுமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவை. தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் எந்த ஓர் தீர்வும் சமாதானத்தை ஏற்படுத்தமாட்டாது. இதற்கு சிறந்த ஓர் உதாரணம் ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தம். இதனை மனதில் கொண்டு அரசு செயற்பட வேண்டும். அந்த வழியில் கால்பதித்து நடக்குமா?

# பாடசாலை அனுமதிக்குப் பணம் பெறாதவாறு பணிப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 26

வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்று, தரம் 6 இற்கான அனுமதிகளுக்கு பாடசாலை அதிபர்கள் அனுமதிக் கட்டணம் பெறாதவகையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணப் பாடசாலைகளில் ஆளணிகளைச் சமப்படுத்தல் தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று மாகாண கல்விப் பணிமனையில் வடமாகாணத்தின் 34 கோட்டங்களின் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,12 வலயங்களின் திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

அரசால் வழங்கப்படும் இலவசச் சீருடைத் துணி, இலவச பாடநூல்கள் என்பன மாணவர்களுக்கு உரிய வேளையில் கிடைக்க வேண்டும்.

இவற்றைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

அத்தோடு அனைத்து மாணவர்களுக்கும் இருக்கைக்கான தளபாட வசதிகளையும் பூரணமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

தளபாடங்கள் மற்றும் பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் யாவற்றையும் அதிபர்கள் கணக்கெடுத்து வடமாகாணப் கல்விப் பணிமனையில் சேர்க்குமிடத்து போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

ஆசிரியர் ஆளணி சுற்று நிருபத்தை மீளாய்வு செய்யக்கூடிய வகையில் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை அதிபர்களிடமிருந்து பெற்று கல்வி அமைச்சிடம் அனுப்பவேண்டும்.

பாடசாலைகளின் நிர்வாக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், போன்றவற்றில் கோட்டங்களின் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களின் செயற்பாடுகளை வலுவடையச் செய்யவேண்டும். பாடசாலை மாணவர்களுக்கான அனைத்து செயற்பாடுகளையும் வழி நடத்துவது கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் பொறுப்பாகும் என்றார். (ம-311)

# சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்புத்தேவை

## பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர்

சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அபிவிருத்திக்கு அவசியமானது என்று தெரிவித்துள்ளார் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன்.

கடந்த சனிக்கிழமை புலோலி பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்ற சனசமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

சனசமூக நிலையங்களின் நோக்கமும் அதன் கொள்கை நிலைப்பாடுகளும் பிரதேச அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும்.

சனசமூக நிலையங்கள் பிரதேச அபிவிருத்திக்கு உதவும் பட்சத்தில் அபிவிருத்தி உச்சநிலை அடையும். சனசமூக நிலையங்களில் கலாசாரக்குழு, விளையாட்டுக்குழு, சுகாதாரக்குழு என்பவற்றை அமைத்து செயற்படமுன்வர வேண்டும்.

அனைத்து சனசமூக நிலையங்களும் தத்தமது பிரதேச அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்- என்றார்.

இக் கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் சோ. ஜெயவசீகரன், உறுப்பினர்கள் தவயோகநாதன், சுப்பிரமணியம், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா, தவநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-237)

# உரிய காலத்தில் முடிக்கப்படாத ஒப்பந்த அனுமதிகள் ரத்தாகும்

## வடமாகாண ஆளுநர் சந்திரசிறி அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

வடமாகாண சுகாதார அமைச்சின் வேலைத் திட்டங்களை மேற்கொண்டுவரும் ஒப்பந்தகாரர்கள் உரிய திகதியில் ஒப்பந்தங்களை முடிக்காது விட்டால் அவர்களது ஒப்பந்த அனுமதிகள் இரத்துச்செய்வது தொடர்பில் ஆலோசிக்கப்படும் இவ்வாறு வடமாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார அமைச்சின் கலந்துரையாடல் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டம் தொடர்பாக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் ஈ.ஜே.ராஜேந்திரா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர்கள், பிரதேச சபை செயலர்கள் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சுகாதாரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் சகல வேலைத்திட்டங்களதும் தற்போதைய நிலை தொடர்பாகவும் மேற்கொள்ளப் படவேண்டிய வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

'நெல்சிப்' வேலைத்திட்டம் தொடர்பாகவும் இதன்போது ஆளுநரினால் கலந்துரையாடப்பட்டது. சுகாதார அமைச்சின் வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வரும் ஒப்பந்தகாரர்கள் குறித்த ஒப்பந்த திகதியில் முடிக்குமாறும் அவ்வாறு இல்லா விட்டால் அதற்கான அனுமதி இரத்துச் செய்வது தொடர்பில் ஆலோசிக்கப்படும் என்றும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார். (ம-15)

# வண்ணைவேங்கடேச பெருமாள் ஆலய பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப். 26

வண்ணை ஸ்ரீ வேங்கடேச பெருமாள் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஐந்தாம் திகதி காலை புதன்கிழமை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் காலை 9 மணிக்கு சந்திப்பூசையும், காலை 9.30 மணிக்கு ஸ்தம்ப பூசையும், முற்பகல் 10.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும், மாலை 4.15 மணிக்கு சாயரட்சைப் பூசையும், மாலை 4.30 மணிக்கு இரண்டாம் காலப்பூசையும், மாலை 5மணிக்கு ஸ்தம்ப பூசையும், மாலை [illegible]மணிக்கு வசந்த மண்டபப் [illegible] இடம்பெறும். (ம-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் டெங்குத் தாக்கம் தீவிரம் இம்மாதம் 30 பேர் சிகிச்சைக்கு அனுமதி

## யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே அதிக பாதிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று முன்தினம் வரை 258 பேர் டெங்கு நோயின் தாக்கமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 155 பேர் டெங்கு நோயின் தாக்கத்துக்குள்ளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

எனினும் சிகிச்சை பயனளிக்காது இவர்களில் மூன்று பேர் மரணமாகியுள்ளனர். யாழ். சுகாதார சேவைகள் திணைக்கள சுகாதாரக் கல்வித் திட்ட அதிகாரி எஸ். பிரணவன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுவரையான காலப்பகுதியில் கடந்த ஜனவரி மாதமே அதிகளவானோர் டெங்கால் பீடிக்கப்பட்டனர். டெங்கு என்ற சந்தேகத்தில் 60 பேர் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 53 பேருக்கு டெங்கு இருந்ததை கண்டறியப்பட்டது. ஜனவரி மாதத்தில் டெங்கால் ஒருவர் உயிரிழந்தார்.

பதினொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுடன் ஒப்பிடும்போது யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதியிலேயே அதிகமானோர் டெங்கால் பாதிக்கப்பட்டனர். இங்கு இதுவரை 65 இற்கும் மேற்பட்டோர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய், பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலிருந்து ஜனவரி மாதம் ஒருவரும் கடந்த மாதம் இருவருமாக மூன்று பேர் டெங்கு நோயால் மரணமாகியுள்ளனர்.

இந்த மாதம் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் 30 பேர் டெங்கு நோயாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 7 பேருக்கு டெங்கு நோய் இருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மாதம் இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை.

இதேவேளை, சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் ஊடாகவும் தொடர்ந்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# வங்களாவடி - புளியங்கூடலுடனான இல. 778 பஸ்சேவை திடீர் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.26

வேலணை, வங்களாவடி புளியங்கூடல் வீதி வழியாக சேவையை மேற்கொண்டிருந்த 778 இலக்க பஸ் இந்த வழிதடத்தில் போக்குவரத்து சேவை சில நாள்களாக நிறுத்திக் கொண்டதால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருந்த இந்த வீதியை பொதுமக்களின் குறிப்பாக வேலணை மத்திய கல்லூரி மற்றும் அந்தப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கருதி திறந்து வைக்க மக்கள் வலியுறுத்தி வந்தனர். இதனையடுத்து அண்மையில் இந்த வீதி திறக்கப்பட்டது. மீண்டும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கருதி பஸ் சேவையை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதால் இந்தப் பாதையில் பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி காலை 7.15 மணிக்கும் முற்பகல் 11.45 மணிக்கும் யாழ்ப்பாணத்திலிருந்தும் ஊர்காவற்றுறையில் இருந்தும் காலை 9.15 மணிக்கும் பி.ப 14.15 மணிக்கும் இந்த வழிதடத்தில் 778 இலக்க பஸ் சேவை நடைபெற்று வந்தது. இதனால் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பொது மக்கள் நன்மையடைந்திருந்தனர்.

தற்சமயம் இந்தச் சேவை நிறுத்தப்பட்டதால் இந்தப் பாதையில் பயணிக்க வேண்டிய அனைத்து மக்களும் பாதிப்படைந்துள்ளனர்

எனவே குறிப்பிட்ட பஸ் சேவையை மீண்டும் இந்த வழித் தடத்தில் ஏற்படுத்தித்தர வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ம- 325)

# மின்சார சபையின் அசமந்தம்; விசனம் தெரிவிக்கும் மக்கள்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக இடை நிறுத்தப்படும் மின்சாரம் குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தும் கூட வழங்கப்படுவதில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன் மின்சாரம் இல்லாத சமயம் பார்த்துத் திருடர்களும் ஆங்காங்கே தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் மனதில் ஒரு அச்சநிலை உருவாகத் தொடங்கியுள்ளது. மின்சாரம் வழங்கும் நேரம் 5 மணி என்று குறிப்பிட்டாலும் இரவு 7 மணி கடந்தாலும் மின்சாரம் வழங்கப்படுவதில்லை. சாதாரண தரப் பரீட்சை நெருங்கிக் கொண்டு இருக்கும் வேளையில் ஏன் இந்த அசமந்தப் போக்கை மேற்கொள்கிறார்கள் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சைக் காலங்களிலும் மின்சாரம் குறிப்பிட்ட நேரத்தைவிட நேரம் தாழ்த்தியே வழங்கப்பட்டது. இது தொடர்பாக மின்சார சபையினரைத் தொடர்பு கொள்ளும் போது அவர்கள் பொறுப்பாகப் பதில் அளிப்பதில்லை எனவும் விசனம் தெரிவிக்கும் மக்கள் இதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றனர். (ம)

.......




சுகாதார அமைச்சால் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைக் கட்டடத் தொகுதி நிர்மாணப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (ம-135)

# கிறீஸ்பூதப் பாணியில் பாய்ந்தது பன்றி!

யாழ்ப்பாணம், செப்.26

கிறீஸ் பூதப் பாணியில் மறைந்திருந்து திடீரெனப் பாய்ந்து தாக்கியது காட்டுப் பன்றி! பலத்த காயங்களுக்கு இலக்கானார் வழிப்போக்கர். அவருக்கு கால்களில் வெட்டுப்பட்டதைப் போன்று காயங்கள். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் அண்மையில் பளைப்பகுதியில் இடம்பெற்றது. காயமடைந்தவர் என்.சந்திரகுமார் (வயது 36). இவர் அளவெட்டி வாசி.

பன்றியின்மூர்க்கமான தாக்குதலுக்கு இலக்கான இவர், கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-4)

# தனியார் காணிகளை நீண்டகால குத்தகைக்கு பெறும் தென்பகுதியினர்

நாவற்குழி, செப்.26

நாவற்குழி, கைதடிப் பிரதேசங்களில் தனிப்பட்டோரின் காணிகளை நீண்ட காலக் குத்தகைக்குப் பெறுவதில் தென்பகுதி வணிக நிறுவனங்கள் ஆர்வங்காட்டுகின்றன.

யாழ். கண்டி வீதியில் உள்ள இந்தப் பிரதேசத்தில் நில வாடகை குறைவாக இருப்பதாலும் தென்பகுதியுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருப்பதாலும் யாழ். நகர் 10 கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதாலும் தாம் இந்தப் பிரதேசத்தை தெரிவு செய்துள்ளதாக தனியார் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

நாவற்குழியில் ரயில் பாதையும் நிலையமும் இருப்பதால் எதிர்காலத்தில் ரயில் மூலமாக பொருள்களை நகர்த்த முடியுமெனவும் அந்த அதிகாரி கூறினார். (ம-212)

# செயற்கை அவயவங்கள் பொருத்தும் இலவச முகாம் 30 ஆம் திகதி வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் செயற்கை அவயவங்களைப் பொருத்தும் முகாம் இம்மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் அறிவித்துள்ளார். முன்னர் இந்த முகாம் இம்மாதம் 28 ஆம் திகதிவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த முகாம் கடந்த 3 ஆம் திகதி கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவரை சுமார் 650 செயற்கை அவயவங்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் இந்த முகாமின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 20 நிபுணர்கள் இந்த முகாமில் பல்வேறு சேவைகளையும் ஆற்றி வருகின்றனர். இவையாவும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விலைப்பட்டியல் வைக்காத வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப்.26

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாத ஐந்து பேருக்கு யாழ்.நீதிமன்றம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

கொக்குவில் பகுதியில் இவ்வாறு காணப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா ஒவ்வொருவருக்கும் ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இதேவேளைகுறித்தவிலையை விட அதிகரித்த விலையில் குளிர்பானங்களை விற்பனை செய்த மூன்று பேருக்கு யாழ். நீதிமன்றம் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது.

கொக்குவில் பகுதியில் இவ்வாறு செயற்பட்ட மூன்று பேருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. யாழ். நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

# புன்னாலைக்கட்டுவன் அ.த.கவின் மைதானம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி-வடக்கு, செப்.26

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை புனரமைப்புச் செய்யும் முகமாக இந்தத் தொகையை யாழ். மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலையின் மைதானம் கடந்த பல வருடங்களாக உரிய முறையில் பயன்படுத்தப்படாத நிலையில் பழுதடைந்து காணப்பட்ட நிலையில் அதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. (ம-86)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டம்

## 3 மாதங்கள் செயற்படுத்தப்படும்

தென்மராட்சி, செப்.26

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான மூன்று மாத நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த டெங்கு ஒழிப்புத் தொடர்பான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள படையினர், பொலிஸார், உள்ளூராட்சிச் சபைகள், அரச கூட்டுறவுத் திணைக்களங்கள், வங்கிகள், பொது அமைப்புகள் ஆகியவற்றின் பங்களிப்புடன் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு மழை காலத்தில் டெங்கு நுளம்பு பரவாமல் தடுப்பதற்கான வேலைத் திட்டங்களையும் பாடசாலைகள், கிராமங்களில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கைப் பறித்தது போன்று வடக்குக் காணிகளையும் ஆக்கிரமிக்க கங்கணம் கட்டி நிற்கிறது சிங்கள அரசு

## சீறுகிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், செப்.26

தமிழ் மக்களது பூர்வீகக் காணிகள் இராணுவத்தாலும் சிங்கள மக்களாலும் ஆக்கிரமிக் கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தைப் போல் வடக்கையும் பறித்துவிட அரசு கங்கணம் கட்டி நிற்கிறது என்று சீற்றம் தெரிவிக்கிறார் புளொட் அமைப் பின் தலைவர் த.சித்தார்த்தன்.

கோப்பாய்க் கோமான் அமரர் கு.வன்னியசிங்கத்தின் நூற் றாண்டு விழா நினைவுப் பேருரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற் றது. இதன் போதே அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோப்பாய் கோமான் வன் னிய சிங்கத்தை இளம் வயதில் காலன் கொன்று போயிருக்கா விட்டால் தமிழ் மக்களது தலை விதி வேறுபட்ட விதமாக நிர்ண யிக்கப்பட்டிருக்கும்.

தமிழ் மக்களது தலை விதியை சரியான முடிவுக்கு கொண்டு வந்திருக்கக் கூடிய பக்குவம் கோப்பாய்க் கோமானுக்கு இருந்திருக்கிறது.

தமிழ்த் தேசிய உணர்வை வலுப்பெறச் செய்த தமிழரசுக் கட்சியில் மக்கள் உணர்வு களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய மனிதர்கள் இருந்திருக்கிறார்கள். அவ்வா றான மகான்களில் ஒருவர் தான் கோப்பாய் கோமான் வன்னி யசிங்கம்.

தமிழர்களது ஆயுதப் போராட் டம் முகிழ்ந்ததுக்கு நியாயமான காரணங்கள் இருந்தன. ஆனால் பின்னர் அந்தப் போராட்டம் வழி தவறிச் சென்று விட்டது.

ஆயுதப் போராட்டம் ஆரம் பிக்கப்பட்டபோது உள்வாங்கப் பட்டவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் விசுவாசமாக செயற்பட் டவர்கள்.

சாத்வீக போராட்டத்தில் பங்குபற்றி எதுவும் கிடைக் கவில்லை என்ற நிலையில் தான் ஆயுதப் போராட்டம் ஆரம் பிக்கப்பட்டது. அதில் நாம் உள்வாங்கப்பட்டோம்.

ஆயுதப் போராட்டம் தோல் வியடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்து வப்படுத்துகின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற் கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கா விட்டால் இனி எப்போதும் கிடைக்கப் போவதில்லை.

இன்று எமது காணிகள் இராணுவத்தால், சிங்கள மக்க ளால் அபகரிக்கப்படுகின்றன. எப்படி கிழக்குப் பறிபோனதோ அப்படி வடக்கையும் பறித்து விட அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. நாங்கள் காலம் தாழ்த்து கின்ற ஒவ்வொரு கணமும் எமது முடிவை நோக்கி போய்க் கொண்டிருக்கும் காலமாக இருக்கும்.

எனவே எமது தலைவர்கள் காட்டிய சரியான வழியில் சென்று ஒரு சரியான தீர்வைக் காண்பது அவசியமானது - என் றார். (ம-14)

# வீட்டுத்திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டோர் யாழ். அரச அதிபருக்குக் கடிதம்

கட்டைவேலி, செப்.26

புலோலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பல்லப்பைக் கிராமத்தில் மீள் குடியமர்ந்த சிலருக்கு வீட்டுத் திட்டத்தில் புறக்கணிப்புச் செய் யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட் டோர் கடித மூலம் யாழ்.அரச அதிபருக்கு முறையிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

1996 ஆம் ஆண்டு யுத்தத் தில் இந்தக் கிராமத்தை விட்டு நாம் வெளியேறினோம். அத னைத் தொடர்ந்து எமது கிராமம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக் கப்பட்டு எமது வீடுகளில் படையினர் குடியிருந்தனர்.

எமது கிராமத்தில் கடந்த வருடம் நாம் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டோம் இங்கு எமது வீடுகள் அழிக்கப்பட்டி ருந்தன. இதற்கு எமக்கு எவ் வித நிவாரணமும் வழங்கப் படவில்லை.

நிவாரணம் வழங்கப்படா மையால் வீடுகளைப் புனர மைக்கவோ திருத்தவோ எம் மால் முடியவில்லை பாதிக்கப் பட்டவர்களுக்கான வீட்டுத்திட் டத்துக்கு கிராமசேவையாளர் ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலருக்கு விண்ணப்பித் தோம் வீட்டுத்திட்டத்துக்கான எமது விண்ணப்பங்கள் நிரா கரிக்கப்பட்டுள்ளன. வீடுகளைப் புதிதாகக்கட்டவோ, புனரமைப் புச் செய்யவோ உதவிகள் இன்றி அல்லல்படும் எம்மையும் வீட்டுத்திட்டத்தில் இணைத்து புதிய வீடுகளைப் பெற்றுத் தரு மாறு வேண்டுகின்றோம் என் றுள்ளது. (ம-236)

# மாவிட்டபுரம் மக்களுடன் இன்று கலந்துரையாடல்

மாவிட்டபுரம் ஜே/231 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுடனான வீடு, காணி, மதில், வேலி அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலர், வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதால் பிரிவு மக்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-38)

# தம்பாட்டி ஊடாக பஸ் சேவை இடம்பெறாமையால் நெருக்கடி

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்ப்பாணம் - ஊர்காவற் றுறைக்கான வழித்தடத்தில் வடக்கு வீதி வழியாகச் செல் லும் 777 இலக்க பஸ் தம்பாட் டிக் கிராமத்துக்குச் சென்று மீண்டும் தான் செல்லவேண் டிய இடத்துக்குப்புறப்படுவது வழமையாகும். எனினும் ஊர் காவற்றுறையில் இருந்து மாலை 6 மணிக்கு யாழ்ப்பா ணத்துக்கும் யாழ்ப்பாணத்தி லிருந்து இரவு 8 மணிக்கு ஊர் காவற்றுறைக்குப் புறப்படும் இந்த வழித்தடத்தலில் பயணிக் கும் பஸ் தம்பாட்டிக்குச் செல் லாமல் நேரடியாகவே சென்று விடுவதால் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து அங்குசெல்லும் மக்கள் பிரதான வீதியில் இறங்கி தம் பாட்டிக்கு சுமார் ஒரு மைல் தூரத் துக்கு நடந்து செல்ல வேண் டியுள்ளது.

இரவு 8 மணிக்குச் செல்லும் மக்கள் வீதி வெளிச்சம் இன்மை யாலும் வீதி பாதிக்கப்பட்டிருப் பதாலும் நடந்து செல்லும்போது பெரும் கஷ்டங்களை எதிர்கொள் வதாகவும் கூறப்படுகிறது.

தனித்துச் செல்லும் போது அநாவசியமான தொந்தரவு களுக்கும் ஆளாகலாம் என்றும் மக்கள் அச்சமடைகின்றனர்.

ஊர்காவற்றுறையில் இருந்து மாலை 6 மணிக்கும் யாழ்ப்பா ணத்தில் இருந்து இரவு 8 மணிக்கும் புறப்படும் பஸ் வேறு போக்குவரத்து வசதிகளற்ற தம்பாட்டிக் கிராமத்துக்கு அந்த மக்களின் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு சீரான போக்குவரத்துச்சேவையை வழங்க வடபிரதேச போக்குவரத்துச் சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (ம-325)

## திறன் வெளிப்பாடு...



கௌரவிப்பு: அண்மையில் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் 182 புள்ளிகளைப் பெற்று கோப்பாய் கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவி கீர்த்திகா சண்முகவடிவேல் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இவருக்கு விசேட பரிசை அதிபர் இ. குணநாதன் மாணவியிடம் வழங்குகிறார். (ம)

# நீர்வேலியில் கோப்பாய்க் கோமானின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செப்.26

கோப்பாய் கோமன் அமரர் கு.வன்னியசிங்கத்தின் நூற் றாண்டு விழா நினைவுப் பேரு ரையும் 'சாணக்கியம்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நீர்வேலி மகளிர் கிராம அபிவி ருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றன.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வு தமிழரசுக் கட்சியின் கோப்பாய்க் கிளைக்குழுத் தலை வர் சி.திருநாவுக்கரசு தலைமை யில் இடம்பெற்றது.

கோப்பாய் கோமானின் உரு வப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் கோமான் வன்னிய சிங்கமும் தமிழ்த் தேசியமும் என்ற தலைப்பில் விசேட





நினைவுப் பேருரை இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் உப தலைவர் பேராசிரியர் சி.சிற்றம் பலம் நினைவுப் பேருரையை சமர்ப்பித்தார். அதனைத் தொடர்ந்து சாணக்கியன் என்ற நூல் வெளி யிட்டு வைக்கப்பட்டது.

அந்த நூலின் முதல் பிரதியை ஒய்வுபெற்ற பயிர் செய்கை உத் தியோகத்தர் க.திரவியம் வெளியிட்டு வைக்க தமிழரசுக் கட்சியின் உப செயலாளர் சி.வி.கே.சிவஞானம் பெற்றுக் கொண்டார். நூலின் வெளியீட் டுரையை விரிவுரையாளர் எஸ். லலீசன் நிகழ்த்தினார்.

தொடர்ச்சியாக நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன. புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழரசுக்கட் சியின் மானிப்பாய் கிளை குழு வின் செயலாளரும் பாடசாலை ஆசிரியருமான எஸ். கஜதீபன், தமிழரசுக் கட்சியின் உப செயலா ளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் அந்த உரைகளை நிகழ்த்தினர்.

நிகழ்வுக்கு சமுகமளித்தி ருந்த கோப்பாய் கோமானின் புதல்வியார் டாக்டர் திருமதி ஹோமாவதி பாலசுப்பிரமணி யத்துக்கு நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவி திருமதி சோதிமலர் ஆறுமுகநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அத்துடன், கோப்பாய் கோமான் நூற்றாண்டு விழா குழுவின் உறுப்பினரும் யாழ். மாநகர சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினருமான எ.பரஞ் சோதி கோப்பாய்க் கோமானின் புதல்வியாருக்கு நினைவுச் சின்னத்தை விழாக் குழு சார் பாக வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் உப தலைவர் எஸ். தர்மலிங்கம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ள வடக்கின் சில உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (6-14-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
26 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

# வடமாகாணத்தில் வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு விரைவில் நியமனம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

வடமாகாணத்தில் வேலையற்று நீண்ட காலமாகக் காத்திருக்கும் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு விரைவில் உடற்கல்வி ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனால் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் உடனடிக் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதே மேற்கண்ட உறுதிமொழியை கல்வி அமைச்சர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

வடக்கு மாகாணத்தில் 2005 இல் இருந்து வெளியேறிய டிப்புளோமா பட்டதாரிகளில் 95 பேர் இதுவரை ஆசிரியர் நியமனத்தில் உள்வாங்கப்படவில்லை.

மேற்படி ஆசிரியர் நியமனத்துக்கு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை மூலமும் கல்வித் தகைமை மூலமும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டு வடமாகாணத்தில் 3-11 ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படும்.

இதேவேளை தற்போது வேலையற்று இருக்கும் உடற்கல்வி டிப்புளோமா பட்டதாரிகளின் விவரங்களைத் தயாரித்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரை அமைச்சர் கேட்டுள்ளார். (வ-302)



நல்லூர் செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையினால் இரண்டாம் கட்டமாக சுற்றுமதில் அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மதில் கட்டுவதற்கான அத்திபாரக் கல்லை கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.உதயகுமார் நடுகிறார். அருகில் மயான அபிவிருத்திச் சபைத் தலைவர் சி.இலட்சுமி காந்தன் மற்றும் சபையின் உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் நிற்கின்றனர்.

# வடக்கில் 165 பாடசாலைகளில் அடுத்த வருடம் அபிவிருத்திப் பணி

யாழ்ப்பாணம், செப். 26

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் அடுத்த வரு டம் 165 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ். பொது நூலகத்தில் கடந்த 21 ஆம் திகதி நடை பெற்ற வடமாகாணக் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்களினால், பாடசாலைகளில் உள்ள வளப்பற்றாக்குறை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதன்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் அமைச்சர் மேலும் கூறுகையில்:-

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 400 ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இவற்றில் அடுத்த வருடம் மட்டும் 125 ஊட்டப் பாடசாலைகள் அபி விருத்தி செய்யப்படுகின்றன. இவை தவிர தேசியப் பாடசாலைகள் உட்பட 40 முதனிலைப் பாடசாலைகளும் அடுத்த வருடம் அபி விருத்தி செய்யப்படவுள்ளன. ஏனையவை அடுத்து வரும் ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த ஆயிரத்தி 29 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் சில பாடசாலைகள் இந்த வருடம் ஆயிரம் பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டம் மற்றும் இசுறு திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. இந்த வருடம் இசுறு திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் பாடசாலைகளினது அபிவிருத்திப் பணிகளை இந்த வருட இறுதிக்கு முன் நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் தொடக்கம் இசுத் திட்டம் தனித்து இயங்காது ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# கைப்பேசிகளை கடத்தியவர் சிக்கினார்

இலங்கைக்கு கையடக்கத் தொலை பேசிகளைக் கடத்தி வந்த இலங்கை நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த நபரிடம் இருந்து 764 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யபட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 4.6 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# கனடா இணுவில் திருவூர் ஒன்றியம் இரு கல்லூரிகளுக்கு நிதியுதவி

அளவெட்டி, செப். 26

கனடாவில் உள்ள இணுவில் திருவூர் ஒன்றியம் இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பரிசளிப்பு நிகழ் வுக்காக ரூபா 15லட்சத்தை நிரந்தர வைப்பாக வழங்கியுள்ளது.

இதில் இணுவில் மத்திய கல்லூரிக்கு 9 இலட்சம் ரூபா வும் இணுவில் இந்துக் கல்லூரிக்கு 6 இலட்சம் ரூபாவும் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்படி இரு பாடசாலைகளின் பரிசில் தின நிகழ்வுக்கான செலவை குறிப்பிட்ட வட்டித்தொகைப் பயன்படுத்தப்படவுள்ளதாக கல்லூரி அறக் கட்டளை நிறுவகம் பணித்துள்ளது. செல்வர் ஆறு. திருமுருகன் ஊடாக நிதியை வழங்கிமை குறிப்பிடத்தக்கது. (வ-36)


## அஞ்சலி நிகழ்வு



**திருமதி சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம்**
இளைப்பாறிய ஆசிரியை, பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

இடம்: பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
காலம்: 28.09.2011 புதன்கிழமை, பி.ப. 1 மணி

அஞ்சலி நிகழ்வில் கலந்து ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போம்.

கல்லூரிச் சமூகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

## மணமகன் தேவை

1978 இல் பிறந்தவிசாகம் 1ஆம் பாதம் கிரக பாவம் 55 உள்ள அழகிய யாழ். இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த நன்குபடித்த தொழில் புரியும் மணமகனைத் தேடுகின்றனர்.
தொடர்பு-0773597310 399-1ஆம் கட்டை, மானிப்பாய்வீதி, உடுவில்.

## வேலை ஆள்கள் தேவை

பேக்கரிவேலை தெரிந்தவர்கள் விரும் பத்தக்கது தொடர்புகளுக்கு :-
இடம்:-றொலெக்ஸ் பேக் மார்ட்
நேரம்:-9.00-4.00 மணிவரை
விலாசம்:-118,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.இல-0212229402

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு, 2ஆம்ஒழுங்கையில் (கவர்னர் அலுவலகத்துக்கு அருகில்) 1¼ பரப்புக்காணி நியாயவிலையில் விற்பனைக்கு உண்டு. T.P: 0752126703



வாகனங் களுக் கான
DC காத்தடிக்கும் இயந்திரம்
ரூபா 6950/-இருந்து
டயிரஸ் ஸ்டோர்ஸ்
புரக்கோட்டை, லிபட்டி பிளாசா
2439422

## ஆண்டு பதினொன்றில் நினைவலைகள்





அமரர்
**கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**
மண்மகிழ
05★11★1948

செல்வி
**தமிழரசி யோகலிங்கம்**
மண் மகிழ
23★05★1975

கண்நெகிழ
26★09★2000

திதி: சதுர்த்தசி (26.09.2011)

நெக்குருகி நாம் வருந்த
ஷெல் வடிவில் காலன்
உமைக் கவர்ந்து பதினோராண்டும்
பறந்தோடிச் சென்றதுவோ?
நல்லீசன் தாளினில் உம் ஆத்மா
சாந்தி பெற நாளும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்தை வீதி,
கொடிகாமம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

## கலைமணி இராசதுரை

மண்ணில் 22 . 10 . 1954

விண்ணில் 26 . 09 . 2000



பத்து மாதம் சுமந்து பெற்ற தெய்வமே
பண்புடன் எமை வளர்த்த அன்னையே
பாதி வழியில் எமைப் பரிதவிக்க விட்டுச் சென்று
பதினொரு ஆண்டுகள் பறந்ததம்மா
ஒருமுறையேனும் எமைக்காண
ஓடோடி வரமாட்டீர்களா? அம்மா
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

குடமியன், வரணி.

உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

முதன் முறையாக யாழ் மண்ணில்!
City & Guilds UK
SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
முழுமையான விபரங்கள் மிக விரைவில்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## "டெங்கு"வுக்கு நன்றியும் சொல்ல வேண்டியுள்ளது....!

டெங்கு நீ வாழ்க என்று குரலெடுத்துப் பாட வேண்டும் போலுள்ளது. ஆனால் சுகாதாரத் திணைக்களத்தார் துப்பாக்கி போன்ற புகையடிக்கும் கருவியுடன் என்னைத்தேடி வந்து விடுவார்களோ எனப் பயமாக இருக்கிறது. எந்தத் தீமைக்குள்ளும் சில நன்மையுண்டு என்பார்கள். அது டெங்கு நோய்க்கும் பொருந்தும்.

பல காணிகள் உரிமையாளர்கள் இங்கில்லாத நிலையில் உள்ளன. சிலவற்றுக்கு 'இரவல் சீலையில் இது நல்ல கொய்யகம்' போடுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் காணியை வந்து பார்த்து அதில் கிடைக்கும் பயன்களை எடுத்துக்கொண்டு சென்று விடுவார்கள். அந்தக் காணிகளையும் சுத்தப்படுத்தி அழகு பார்க்கும் எண்ணம் அவர்களிடம் இருப்பதில்லை. பல காணிகள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக உள்ளன. கறிவேப்பிலை போல யாரும் அவற்றைப் பயன்படுத்திவிட்டுச் செல்வர்.

இப்படித்தான் ஒரு பெரிய காணி உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ளது போல எங்கள் வீட்டுக்கு அருகிலும் இருந்தது. உரிமையாளர் கொழும்பில் இருக்கிறார். எப்போதாவது வந்தால் காணியைப் பார்த்து விட்டுச் செல்வார். மலிந்த விலைக்கு யுத்த காலத்தில் வாங்கிய காணி. இன்று நல்ல விலைக்கு விற்கலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறாராம். அந்தக் காணியில் ஒரிரு தென்னைகளும், பனைகளும் பயன் தரும் மரங்கள் சிலவும் நிற்கின்றன. கடுகு நாவல் பற்றைகளே அதிகமுள்ளன.

இந்தக்காணி பலதரப்பட்டவர்களையும் ஆதரித்து வந்துள்ளது. வீதியை ஒட்டி அமைந்திருப்பதால் பலரது இயற்கை உபாதைகளைப் போக்கும் இடமாக இது இருந்து வந்தது. இடையிடையே காதலர்களின் காவலரணாகவும் இது திகழ்ந்தது. ஒசிப் படம் பார்க்கும் பேர்வழிகளின் குறுக்கோட்டமும் அவ்வப்போது நடக்கும். மாலையிலும், சில வேளைகளில் பகலிலும் மதுப்பிரியர்களின் புகலிடமாகவும் இது விளங்கியது. குறிப்பாக பதின்ம வயதில் ஒளித்து மதுவருந்துவோரை இங்கு தாராளமாகக் காணலாம். வீதியால் போவோர் வருவோரைக் கேலியும் கிண்டலும் செய்து மதுப்பிரியர்கள் மகிழ்ந்ததும் இந்த இடத்தில் தான்.இந்த இடத்தைக் கடந்து போவதென்றால் 'பெண்புரசு'களுக்குக் கலக்கந்தான்! கழுத்தில் காதில் இருப்பதை யார் அபகரிப்பானோ என்ற பயம் ஒரு புறம். கையைக் காலைப் பிடித்திழுப்பார்களோ என்ற பயம் மறுபுறம். அவர்களைப் பொறுத்தவரை கண்ட கடிய பரலயங்கள் வாழும் ஒரு இடமாகவே இதனைப் பார்த்தனர்.

வேட்டைக்காரர்கள் இடையிடையே முயலும்,உடும்பும் தேடி வருவார்கள்.மேய்ச்சல் மாடுகள் கட்டுவோர், சுள்ளித் தடிகள் முறிப்போரின் பிரசன்னமும் இங்கு இருக்கும். இவ்வாறு பலருக்கும் நன்மையாகவும், தீமையாகவும் அந்தக்காணி அமைந்திருந்தது.

காணிக்காரருக்குப் பல தடவை பலரும் எடுத்துச் சொல்லியும் ஆள் மசியவில்லை. பார்க்கிறேன் என்ற சொல்லுடன் தொலைபேசியைத் துண்டித்து விடுவார். சற்று யாராவது இறுக்கிக் கதைத்தால் வாற மாதம் வருகிறேன். காணியை விற்கப் போகிறேன் என்று சொல்லிச் சமாளித்து விடுவார். ஊரில் உள்ளவர்களும் காணிக்காரனைத் திட்டுவதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை.

காலநீட்சியில் கொத்திப்பேய்,முனி ஆகியவற்றுடன் கிறீஸ் பூதங்கள் எனப்படும் மர்ம மனிதர்களும் இந்தக் காணிக்குள் இரவுகளைக் கழிப்பதாக மக்கள் அச்சப்பட்டனர். இந்தக் காணிக்கு அயலிலுள்ள வீடுகளை இத்தகைய பிறப்புக்கள் எட்டிப் பார்த்ததாகவும், ஆள்கள் திரள குறித்த காணியை நோக்கி ஓடியதாகவும் மக்கள் பேசிக் கொண்டனர்.

சூரபத்மனையும்,அவனுடன் சேர்ந்த அரக்கர்களையும் அழிக்க முருகப் பெருமான் வீரவாகு தேவருடன் புறப்பட்டது போல, யாராவது அரக்கர்கள் போலிருக்கும் இந்தப் பற்றைகளை அகற்றி மேற்சொன்ன பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தர மாட்டார்களோ? என இறைநம்பிக்கை உடைய மக்கள் எதிர்பார்த்தனர். இந்த வேளையில்தான் டெங்கு அரக்கனை ஒழிக்கச் சுகாதாரப் படையினர் புறப்பட்டனர்.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களெங்கும் துப்புரவுப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அவர்கள் சாம,பேத, தான, தண்ட அடிப்படையில் செயற்பட்டனர். பற்றைகளை வெட்டித் துப்புரவாக்காத காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கைகள் ஒட்டப்பட்டு, அதற்கும் மசியாதவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இப்போது காணி துப்புரவு செய்யப்பட்டுவிட்டது. வெளவால்கள் வந்து பழமற்ற மரங்களைச் சுற்றிவிட்டுச் செல்வது போல் பலரும் வந்து அலைகின்றனர்தான்! ஆனால் ஊர் மக்களுக்கோ வலு புளுகம். எட பொடியள் பின்னேரத்திலை உந்தக் காணிக்கை விளையாடினீங்கள் எண்டால் சன பிரச்சினைகள் தீரும். காணியும் துப்புரவாயிருக்கும் என்று கிராமத்து வாத்தியார் பெடியளுக்கு ஆலோசனை கூறியுள்ளார். நான் டெங்குவுக்கு நன்றி சொன்னது பிழையோ, சொல்லுங்கோ?

விழிச்சான் குஞ்சு.

# தமிழர்களை ஆதிக்கம் செய்யும் சிங்களவரால் வடக்கு, கிழக்குப் பகுதியில் வன்முறைகள் அதிகரிப்பு

## பியூலா ஆசாரிய தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் யுத்தத்தின் விளைவால் அடையாளப்படுத்த முடியாத பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழர்களைச் சிங்களவர்கள் ஆதிக்கம் செய்யும் அளவுக்கு மாறிவிட்டது. இதனைச் சர்வதேச தளங்கள் இதற்கான தீர்வைக் கொண்டு வருவதுடன் போர்க் குற்றங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் நாட்டின் மனித உரிமை ஆர்வலரும் பால் நிலைப் பயிற்றுவிப்பாளருமான பியூலா ஆசாரிய.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை திருநெல்வேலியிலுள்ள விழுது அலுவலகத்தில் இடம் பெற்ற கருத்தமர்வு நிகழ்வில் கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தென்னாசிய நாடுகளில் பால் நிலை எண்ணக்கரு பற்றிய புரிதல்" எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்தக் கருத்துப் பகிர்வு நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

பெண்களின் கல்வி நிலை உலகளாவிய நிலையில் உயர்ந்து காணப்பட்டாலும் தெற்காசிய நாடுகளில் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகமாகவே காணப்படுகின்றது. இது மனித உரிமைகளை மீறும் செயலாகவே காணப்படுகின்றது.

பெண்கள் மீதான வன்முறைகள் அதிகம் வயதின் அடிப்படையிலும் மாற்றுத்திறன் கொண்ட பெண்கள் மீதும் கணவரை இழந்த பெண்கள் மீதும் இடம்பெறுகிறது. இவ்வாறான பெண்கள் மீதான வன்முறைச்சம்பவங்களைக் குறைப்பதற்கு சுயகுழுக்களை கிராமங்கள் தோறும் பெண்களுக்கிடையில் உருவாக்கி பெண்களின் மேம்பாடு தொடர்பாகவும் பாலியல் தொடர்பான உணர்வூட்டல் நடவடிக்கைகளையும் ஆண்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

தற்போது வடக்கு, கிழக்கில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவமாக மர்ம மனிதன் அட்டகாசத்துக்கு மகளிர் அமைப்புகள் வெறும் கண்டனங்களை வெளியிட்டு எந்தவிதப் பயனும் கிடையாது. இதற்கு என்ன தீர்வினைப் பெற முடியும் என்பது தொடர்பில் உடனடியாக ஆராயப்பட வேண்டியது அவசியம் - என்றார்.(ச-313)

# மக்கள் சுதந்திரமாக வாழும் சூழலை வடக்கு-கிழக்கில் உருவாக்க வேண்டும்

## ஆசிரிய சங்க மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.26

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய சூழல் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 54 ஆவது பேராளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு அனுராதபுரம் புதிய நகர் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத் தில் இடம் பெற்றது.

ஆசிரியர் சங்கத் தலைவர் சீ.ஜெயசிங்க தலைமையில் இடம் பெற்ற இந்த மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட மட்ட தலைவர், செயலாளர் உள்ளிட்ட ஆயித்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் முன்னிலையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

* நாட்டிலுள்ள 9,662 அரச பாடசாலைகளில் 1000 பாடசாலைகளை மட்டும் தெரிவு செய்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக 60 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசு பீற்றிக் கொள்கிறது. ஆனால் எஞ்சியுள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி பற்றி அரசு வாய் திறக்கவில்லை.
* வலயக் கல்வி ஆலவலகத்தில் இருந்து கல்வி அமைச்சுவரை பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆசிரியர்களைப் பழிவாங்குவது நிறுத்தப்பட வேண்டும்.
* இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் குறைபாடுகள் இல்லாமல் பரீட்சைகளை நடத்த முடியாத நிலையில் உள்ளது. இது திருத்தப்பட வேண்டும். பெறுபேறுகளில் உள்ள குளறுபடிகளும் நிறுத்தப்பட வேண்டும்.
* இலங்கை அதிபர் சேவை, இலங்கைக் கல்வி நிர்வாக சேவை என்பவற்றுக்கு உள்வாங்குவதற்கான வாய்ப்பு அந்தச் சேவைகளின் யாப்புகளுக்கு முரணாக நடைபெறக்கூடாது.
* ஆசிரியர் உதவியாளராக 3000 ரூபா கொடுப்பனவில் சேவை ஆற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.
* மன்னார் ஆசிரியர் கலாசாலையின் எவ்வித பதவிகளுக்கான நியமனங்கள் எவ்வித பத்திரிகை விளம்பரங்களும் இல்லாமல் வழங்கப்படுவதை உடன் தடை செய்ய வேண்டும்.
* அரசியல்வாதிகள் ஊடாக அரசு கல்வி நடவடிக்கையில் ஏற்படுத்தும் தலையீடுகளை நிறுத்த வேண்டும்.
* ஆசிரியர்களுக்கு இலவசமாக உயர்கல்வி வழங்கப்பட வேண்டும்.
* அகதி முகாமில் வாழும் மக்களை விரைவில் மீளக் குடியமர்த்த வேண்டும்.
* பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.என்பவை உட்படப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (த-14)

# கல்விச் செயற்பாடுகள் இராணுவமயம்; நிறுத்தக் கோருகிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், செப்.26

கல்விச் செயற்பாடுகள் இராணுவமயப்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் சீ.ஜெயதுங்க.

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 54 ஆவது பேராளர் மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது கல்விச் செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப் பட்டு வருகின்றது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

சட்ட திட்டங்களை மீறும் வகையில் கல்வி அமைச்சின் செயற்பாடுகள் தற்போது அமைந்துள்ளன.

அத்துடன் சகல ஆசிரியர்களும் எமது சங்கத்துடன் இணைந்து உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டிலுள்ள ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற, ஆசிரியர்களது பிரச்சினைகளுக்குக் குரல் கொடுத்து தீர்த்து வைக்கக் கூடியது இலங்கை ஆசிரியர் சங்கமே ஆகும்- என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட மட்ட தலைவர், செயலாளர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ச-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
26 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

## முதல் மரியாதை...



திறமைக்குப் பாராட்டு: மன்னாரிலுள்ள பிரபல கல்வி நிலையத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் வவுனியா நகரசபையின் உப தலைவரும் பிரபல ஆசிரியருமான எம்.எம்.ரதன் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார். (601)

# மாந்தையில் பாலைப்பாணி கிராம வீதியை புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாலைப்பாணிக் கிராம வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னி விளாங்குளம் மூன்று முறிப்புச் சந்தியிலிருந்து பாலைப்பாணி என்னும் கிராமத்துக்குச் செல்லும் வீதி பற்றைக் காடுகள் மண்டிய நிலையில் குண்டும் குழிகளும் நிறைந்து மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. மேலும் இந்த வீதியின் சுமார் 10 கிலோ மீற்றர் பகுதி மக்கள் பயணிக்க முடியாத வாறு காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மிகவும் பின்தங்கிய பாலைப்பாணிக் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலையும் உள்ளது. இதில் தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்கள் உள்ளன. இதனால் உயர் வகுப்புக்களில் கல்வி கற்கும் ஏனைய மாணவர்கள் இந்த வீதியூடாகவே வெளியிடங்களுக்குச் சென்று தமது கல்வியைத் தொடர்கின்றனர். இவர்கள் தினமும் அனுபவிக்கும் அவலங்கள் சொல்ல முடியாதவை.

மேலும் மழைகாலங்களில் இந்த வீதியூடாகப் பயணம் மேற்கொள்வதை எண்ணிப் பார்க்கக் கூட முடியாது. இதனால் கிராம மக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையே உள்ளது. அத்துடன் இரவு வேளைகளில் இந்த வீதியூடாகப் பயணம் செய்வது பயங்கரம் மிகுந்த ஒன்றாகவே இருக்கின்றது.

எனவே இனியும் தாமதிக்காது பாலைப்பாணிக் கிராம மக்களுக்கு முக்கியமான இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு கிராம மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-426)

# ஆசிரியர் பற்றாக்குறையால் சிரமத்துடன் இயங்கிவரும் ஒலுமடு அ.த.க.பாடசாலை

வவுனியா, செப்.26

ஒலுமடு அ.த.க.பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

வவுனியா ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்போது 380 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றார்கள். இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அதிபரையும் சேர்த்து இங்கு எட்டு நிரந்தர ஆசிரியர்கள் மட்டுமே கற்பிக்கின்றார்கள். இவர்களுடன் 4 தொண்டர் ஆசிரியர்களும் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் தமிழ்மொழி போன்ற பிரதான பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் பெரிதும் சிரமப்படுகின்றார்கள்.

யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நெடுங்கேணிக் கோட்டத்துக்குக் கீழ் இயங்கும் இந்தப் பாடசாலைக்கு மாணவர்களின் கல்விக்குத் தேவையான ஆசிரியர்களை உரிய அதிகாரிகள் முன்வந்து நியமித்து உதவ வேண்டும் என மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-426)

# வீதியில் கிடந்த பணத்தையும் நகைகளையும் எடுத்து ஒப்படைத்த ஒட்டுசுட்டான் மாணவி



முல்லைத்தீவு, செப்.26

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவியொருவரின் நேர்மையான செயலை இங்குள்ள பலரும் பாராட்டியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்று வருபவர் யோ.மோகனப்பிரியா. இவர் பாடசாலை முடிந்து வீட்டுக்குச் செல்லும்போது வீதியோரமாகக் கிடந்த பையொன்றைக் கண்டார். பையைத் திறந்து பார்த்த போது பணமும் நகைகளும் இருப்பதைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்தார். என்ன செய்வதென்றே இவரால் முடிவு செய்ய முடியாத நிலையில் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளை இவரது கண்களில் தென்பட்டது. உடனடியாக அங்கு சென்று பாதுகாவல் கடமையில் இருந்த உத்தியோகத்தரிடம் விடயத்தைக் கூறினார். அவர் முகாமையாளரிடம் இவரை அழைத்துச் சென்று விடயத்தைக் கூறியதுடன் பையிலிருந்த பணமும் நகையும் ஒப்படைக்கப்பட்டன.

பின்னர் பணத்தையும் நகையையும் தவறவிட்டவர் அழைக்கப்பட்டு இவை ஒப்படைக்கப்பட்டன.

இவரது இந்த நேர்மையான செயலைப் பாராட்டிய வங்கி முகாமையாளர் சில பரிசில்களை வழங்கியதாகத் தெரிகின்றது. பையைத் தவறவிட்டவர் தன்பாட்டில் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பாடசாலை அதிபர் இந்த மாணவியின் இந்தச் செயலை வெகுவாகப் பாராட்டியுள்ளார். வறுமையான நிலையில் இருந்தாலும் இந்த மாணவியின் நேர்மை ஏனையோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டுமெனப் பலரும் தெரிவித்தனர்.

(க)

## கல்விக் கண்காட்சி

அக்கராயன், செப்.26

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாவையொட்டி கல்விக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் துணுக்காய் உதவி அரச அதிபர் கருணாபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(410)


## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
### பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்

வேம்பிராய் நீர் விநியோகத் திட்டத்துக்காக மீசாலை புத்தூர் வீதியிலுள்ள மீசாலை சந்தியிலிருந்து வேம்பிராய் வரையும் மற்றும் ஏ- 9 பிரதான வீதியிலுள்ள புத்தூர் சந்தியிலிருந்து இராமாவில் வரைக்கும் 90/110 மில்லிமீற்றர் அளவுடைய PVC (1000 கனம்) நீர்க்குழாய்களைப் பதிப்பதற்குரிய கிடங்கு வெட்டுதல் மற்றும் வரும் கற்களை/ பாறைகளை உடைப்பதற்கும் மீண்டும் வெட்டப்பட்ட இடங்களை மண்ணால் நிரவுவதற்குமாகக் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்வி இல: RDA/DGM/N/JAF/VEMPIRAI/2011/184

01. வரைக்கும் 90 / 110 மில்லிமீற்றர் அளவுடைய PVC (1000 கனம்) நீர்க் குழாய்களை பதிப்பதற்கு பக்கோ (Backhoe) இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்துவதற்கு இத்தால் கேள்வி கோரப்படுகின்றது.
02. கேள்விப் பத்திரங்களை கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
03. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம்,கேள்வி முடிவு நேரம் மற்றும் கேள்வி முடிவு திகதி ஆகியன குறிப்பிடப்பட்டுப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித் தனியான தபாலுறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். கேள்விகள் பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம் அல்லது கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் 10.10. 2011, மு.ப.10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினமே உடனடியாக திறக்கப்படும்.
04. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து ஒரு (01) மாத காலத்துக்குச் செல்லுபடியாகும்.
05. வேலைகள் ஏழு (07) நாள்களுக்குள் தொடங்கப்படல் வேண்டும்.
06. இந்தக் கேள்வி அறிவித்தல் இதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகும்.
07. கேள்வி கோரல் தொகை ரூபா 100,000 தொடக்கம் ரூபா 500,000 வரைக்கும் இடையில் இருந்தால் கேள்வி கோரல் தொகையில் மூன்று (03) வீதம் கேள்வி பிணைப்பணமாக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து பெற்றுத் தரப்பட வேண்டும்.
08. கேள்வி பிணைப்பணம் கேள்வி பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். இல்லையேல் அந்தக் கேள்வி நிராகரிக்கப்படும்.
09. ஒவ்வொரு அலகு விலையிலும் போக்குவரத்துக் கூலி உள்ளடங்கப்படல் வேண்டும்.
10. பக்கோ (Backhoe) இயந்திரத்தை ஏற்றி இறக்குவதற்கான போக்குவரத்துச் செலவும் கேள்வியில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
11. கேள்வி மனுதாரர்கள் கேள்வி கோரமுன் குறிப்பிட்ட பிரதேசத்தைப் பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

பிரதிப் பொதுமுகாமையாளர் (வ), வவுனியா.



## ஹாட்லிக் கல்லூரி
## தரம் 6 அனுமதி 2012

ஹாட்லிக் கல்லூரியில் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து 15.10.2011 க்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்.
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு .திருமதி விமலேந்திரன் நிசந்தினி
தம்பதியரின் புதல்வன்
வி.திலக்சன்
(யா/யாழ்இந்து ஆரம்பப்பாடசாலை)

2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் எதிர்வரும் பரீட்சைகளிலும்சித்தியடைந்து சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சீனியர்லேன் கலட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
தெய்வேந்திரன் பெரியப்பா
குடும்பத்தினர்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

செல்வராஜா கௌசிக்

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்து கல்வியில் சிறந்து விளங்கி இட்சியத்தில் வெற்றியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இவரது வெற்றிக்கு உறுதுணையான அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு.

வாழ்த்துவோர்:
உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளையில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளை ஆஸ்திரேலியத் தூதுவர் நேரில் பார்வையிட்டார்

கிளிநொச்சி, செப்.26

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் டாஷ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் திருமதி கதிகுளுக்மன் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



கிளிநொச்சி, ஆனையிறவு, கண்டாவளை, தர்மபுரம், புளியம்பொக்கணை, முரசுமோட்டை போன்ற பகுதிகளில் வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் அவற்றை அகற்றும் பணிகளை டாஷ் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இதில் ஆனையிறவுப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வருடத்தில் மேற்படி பொருள்களை அகற்றி மாவட்ட அரச அதிபரிடம் அந்தப் பகுதிகளை உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி, கண்டாவளைப் பகுதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வெடிபொருள்கள் அகற்றும் பணியை ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கதி குளுக்மன் மற்றும் எட்வேட் ஆர்சிபோல்ட் ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான முதலாவது செயலாளர் சலி மக்கேய் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த 21 ஆம் திகதி இந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்து வெடிபொருள்கள் அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன் பணியாளர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். கடந்த காலத்தில் வெடி பொருள்களை அகற்றும் பணிகளை நவீன கருவிகளின் உதவியுடன் மேற்கொள்ள முடியவில்லை. கம்பிகளால் உருவாக்கப்பட்ட முட்கள் என்பவற்றையே பயன்படுத்தி வந்தோம். இது அதிக நேரத்தை எடுத்து வந்ததுடன் ஒரு பாதுகாப்பற்ற முறையாகவும் இருந்தது.

தற்போது ஆஸ்திரேலிய அரசால் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நவீன கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்கள் மூலம் மிகவிரைவாக வேலைகளை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாகவுள்ளது.

இதனால் மிகக் குறைந்த காலத்தில் கூடிய பகுதிகளில் வெடிபொருள்களை அகற்ற முடியும் எனப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# கிளிநொச்சி வலயம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும்

## ஆசிரிய சங்க மாநாட்டில் கிளிநொச்சிக் கிளை பிரேரணை

கிளிநொச்சி, செப்.26

கிளிநொச்சி கல்வி வலயம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கல்வி அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அனுராதபுரத்தில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 54 ஆவது பேராளர் மாநாட்டில் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 54 ஆவது பேராளர் மாநாடு கடந்த 23 ஆம் திகதி அனுராதபுரம் புதிய நகர கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் போதே சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் தனியொரு கல்வி வலயமாக இயங்கி வருகின்றது. நான்கு பிரதேச செயலர் பிரிவுகளையும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளையும் கொண்ட இந்தக் கல்வி வலயம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-405)

# மாணவருக்கான உணவுப் பொருள்கள் சில பாடசாலைகளில் துஷ்பிரயோகம்

மன்னார், செப்.26

மன்னார் மாவட்டத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக வழங்கப்படுகின்ற உலர் உணவுப் பொருள்கள் இதற்குப் பொறுப்பான சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக இங்குள்ள சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் போசாக்கை அதிகரிக்கும் பொருட்டு சத்துணவுகள் உலர் உணவுப்பொருள்களாக வழங்கப்பட்டு வருகின்றன. அந்த உலர் உணவுப் பொருள்கள் பாடசாலைகளில் வைத்துச் சமைத்து வழங்கப்படுகின்றமை வழக்கமாகும்.

இந்தநிலையில் குறித்த உலர் உணவுப் பொருள்கள் சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகத் தெரிகின்றது. இந்த நடவடிக்கைகளைச் சிலர் அவதானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சில பாடசாலைகளில் தரமற்ற முறையில் உணவுகள் சமைத்து வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்துமாறு இங்குள்ள பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-601)

# கணித பாடத்துக்கு ஆசிரியர் இல்லை கிராம மாணவரின் கல்வியில் வீழ்ச்சி

கிளிநொச்சி, செப்.26

முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் கணித பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாதமையால் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகப் பெற்றோர்களாலும் மாணவர்களாலும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசதி வாய்ப்புக்கள் ஏதும் அற்ற அதிகஷ்டப் பிரதேசமான கோட்டைகட்டியகுளம் கிராமத்தில் இருக்கும் கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையிலேயே அம்பலப்பெருமாள், உயிலங்குளம், தெணியன்குளம், கோட்டைகட்டியகுளம், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களில் இருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றார்கள்.

மேற்படி கிராமங்கள் காட்டுப் பிரதேசங்களை அண்டியும் வசதி வாய்ப்புக்கள் அற்றனவாகவும் காணப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் கணித பாடத்தைக் கற்பிப்பதற்கான தனியார் கல்வி நிறுவனங்கள் கூட இல்லை.

இதனால் இந்தப் பகுதி மாணவர்கள் கணித பாடத்தைக் கற்க முடியாத நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலைக்கு மீள்குடியமர்வு இடம்பெற்றுப் பாடசாலை இயங்க ஆரம்பித்த காலம் முதல் கணித பாட ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் கடந்த காலங்களிலும் ஜி.சீ.ஈ. சாதாரணதரம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஏனைய பாடங்களில் சித்தி பெற்ற போதும் கணித பாடத்தில் சித்திபெறுவதற்குப் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் சிலர் சித்திபெறவில்லை எனவும் கூறப்படுகின்றது.

நீண்டகாலமாகக் காணப்படும் கணித பாட ஆசிரியர் இல்லாத குறையைப் போக்கி இந்தப் பகுதி மாணவர்களின் கல்விக்கு உதவுவதற்கு உரியவர்கள் முன்வரவேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பும் வேண்டுதலுமாகவும் உள்ளது. (க-426)

# மானிய அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள்

கிளிநொச்சி, செப்.26

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு றொபின் நீர் இறைக்கும் இயந்திரங்களை 50 வீத மானிய அடிப்படையில் வழங்க விருப்பதாக கிளிநொச்சி மாவட்டப் பிரதி விசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் முதற்கட்டமாக 200 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. ஆகவே இவற்றைப் பெறவிரும்பும் விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இத்தகைய றொபின் வகை நீரிறைக்கும் இயந்திரங்கள் ஆழமான கிணறுகளிலிருந்து நீரைப் பெறுவதற்கும் தூர இடங்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கும் மிகவும் உபயோகமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# மாந்தை உப்பு நிறுவனத்துக்கு 25 லட்சம் ரூபா நிதியுதவி

மன்னார், செப்.26

மீள்குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் மன்னார் மாந்தை உப்பு நிறுவனத்துக்கு 25 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக இந்த நிறுவனத்தின் முகாமையாளர் எம்.நாகமுத்து தெரிவித்துள்ளார்.

இந்த நிதிமூலம் உப்பளத்தின் பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருவதாகத் தெரிவித்த அவர் உப்பளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தற்போது பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.



மேலும் இந்த உப் பளத்தின் மூலம் வருடமொன்றுக்கு 6 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை அறுவடை செய்துகொள்ள முடியு மெனவும் உப்பளத்தின் பணிகளில் அதிகமான பெண்கள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-601)

# கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

கிளிநொச்சி, செப்.26

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தவர்கள் பலர் கலந்து கொண்டிருந்த னர்.

மேலும் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டுப் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்ம நாதனும் செயலாளராக வே.இறைபிள்ளையும் பொருளாளராக சி.ஜீவநாயகமும் தெரிவு செய்யப்பட்டதுடன் 11 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப் பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்வரும் ஆண்டுகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

தமிழ் மொழியை வளர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது. (க-425)

# பனை அபிவிருத்திச் சபையால் வன்னியில் அபிவிருத்திப் பணிகள் பல முன்னெடுப்பு

## சபையின் தலைவர் சீவரத்தினம் கூறுகிறார்

நாவற்குழி, செப்.26

பனை அபிவிருத்திச் சபையால் வன்னிப் பிரதேசத்தில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கெனத் தலா 4 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் அடுத்த ஆண்டில் பனங்கள்ளைப் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலைகள் இந்தச் சங்கங்களின் கீழ் இயங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வன்னி விளாங்குளம் என்னும் பிரதேசத்தில் சபைக்குச் சொந்தமான காணி மீளப் பெறப்படவுள்ளது.

இதில் சபையின் தொழிற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் பேசாலையில் வினாகிரித் தொழிற்சாலையொன்று 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் புளியங்குளத்தில் சபைக்குச் சொந்தமான 50 ஏக்கர் காணியில் கைத்தொழிற்பேட்டை ஒன்று 40 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. [illegible] தொழில்கள் [illegible] படுவதுடன் வேலை வாய்ப்புப் பெறவும் பொருள்களைச் சந்தைப் படுத்தவும் வாய்ப்பு ஏற்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்றுப்புலம் என்னும் இடத்தில் 20 ஏக்கர் காணியிலும் பூநகரி கவுதாரி முனையில் 5 ஏக்கர் காணியிலும் வேலைத் தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் பரந்து காணப்படும் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொண்டு தொழில் வாய்ப்புக்களையும் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புக்களையும் தொடர்ச்சியாக ஏற்படுத்தச் சபை உதவுமெனவும் அவர் மேலும் கூறினார். (க-121)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் த.வரதராஜா தனது 56 ஆவது அகவையில் 33 வருட ஆசிரிய சேவையில் ஓய்வுநிலை எய்தியபோது கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக் கப்பட்டார். கல்லூரி அதிபர் சி.க.எழில்வேந்தன், பிரதி அதிபர் ய.ஜெயசீலன் ஆகியோர் சேவையைப் பாராட்டி விருது வழங்குகின்றனர். (ம)



அரியாலை மேற்கு வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம் பெற்ற பெருந்திருவிழாவின் போது 10 நாள்களும் பெரிய புராணம் என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்திய சொல்லிசைவாரி எஸ்.கே.என். தவராஜா கௌரவிக்கப்படுகிறார். (ம)



நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக் குட்பட்ட சிறுவர்களுக்கு பாதணிகள் யாழ். வை.எம்.சீ.யால் வழங்கப்பட்டன. ஆசிரிய ஆலோசகர் திருமதி எ.ஜெ.புத்திரசிகாமணி பாதணிகளை வழங்குகிறார். அருகில் பாடசாலை அதிபர் கே.புஸ்பராஜா மற்றும் வை.எம்.சீ.ஏ. தலைவர் சு.புத்திரசிகாமணி ஆகியோர் உள்ளனர். (ம-302)



யாழ். வை.எம்.சீ.ஏ. இன் கீழ். இயங்கும் மூன்று முன்பள்ளிகளின் விளையாட்டு விழா யாழ். பரியோவான் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் பாண்ட் வாத்திய இசையுடன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். இளம்பிறையன் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வருப் படுகின்றனர். (ம-302)



சரவணை கிழக்கு முன்பள்ளி விளையாட்டு விழாவில் சிறார்கள் போட்டியில் ஈடு படுகின்றனர். (ம-167)



தென்மராட்சிக் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வலய மட்ட ஆங்கில தினப் போட்டியில் சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை குழுப்பாடல் (தரம் 4, 5) போட்டியில் முதலிடம் பெற்றது. முதலிடம் பெற்ற மாணவர்களுடன் அதிபர் திருமதி த.பாலசுப்பிரமணியம், நெறிப்படுத்திய திருமதி பி.பிரதீபன், திருமதி உ.சாள்ஸ் றொபேட் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்களும். (ம-207)



செம்பியன்பற்று வடக்கில் யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் சமாதானக் கல்விச் செயற்பாட்டின் போது பங்குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ் நாதன் அடிகள் பணியாளர் சோபனா மற்றும் சிறுவர், சிறுமிகள் கூடி நிற்கிறார்கள். (ம-160)



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழா வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உபசெயலாளர் க.சிவகரன் வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் மற்றும் விருந்தினர்கள் அயற்பாடசாலை அதிபர்கள் சகிதம் மக்கள் இசையுடன் விழா மேடைக்கு அழைத்து வரப் படுகின்றனர். (ம-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்தின் உரிமைக்காகவே எமது போராட்டம் தொடர்கிறது

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்

மண்டூர், செப்.26

''தமிழ்த் தேசியம் என்பது அபிவிருத்தியை நோக்கிய தல்ல; அதற்கு மாறாக அது இனத்தின் உரிமையைக் பெற்றுக் கொள்வதேயாகும். இதனைப் பெறுவதற்கு 62 வருடங்களாகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனை - 02இல் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தேர்தலானது விகிதாசார முறையில் இடம்பெறுவதனால் அனைத்து மக்களும் உரிய நேரத்திற்கு வாக்குப் பதிவு செய்யும் இடங்களுக்குச் சென்று வாக்குகளை தமிழ்த் தேசியத்தின் வீட்டுச் சின்னத்திற்கு இட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே எமது இனத்தின் இருப்பு ஏனைய உலக நாடுகளுக்குத் தெரிய வரும்.

எமது உரிமை முழுமையாகக் கிடைக்கும் பட்சத்தில் நாம் அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்கலாம். அது வரைக்கும் எமது இனத்தின் விடிவிற்காகப் போராடவேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது நாட்டின் ஜனாதிபதி தமது பரிவாரங்களுடன் மூன்று நாள்கள் முகாமிட்டிருந்தார். அதுபோன்று நாங்களும் அங்கு நின்றிருந்தோம். இறுதியில் என்ன நடந்தது? தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே ஆதரித்தார்கள்'' - என்றார். (ச)



# வெள்ளப் பாதிப்புப் பட்டியலில் திருகுதாளம்

## நஷ்டஈடு வழங்கலை நிறுத்துமாறு அறிவுறுத்து

பாலமுனை, செப்.26

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ள நஷ்டஈட்டை உடனடியாக இடைநிறுத்துமாறும், தகுதியான அனைவரையும் உள்ளடக்கி விரைந்து புதிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன அறிவுறுத்தியுள்ளார்.

திருக்கோவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில்கிழக்குமாகாண அமைச்சர் ரி.நவரெட்ணராஜா முன்வைத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளத்தால் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் பாதிப்படைந்துள்ளன.

வெறும் 20பேர் மாத்திரம் தான் இந்தப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் என்று பிரதேச செயலக நிவாரணக் குழுவினால் பெயரிடப்பட்டிருப்பதையும், பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டிய கிழக்கு மாகாண அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா. இதற்கு கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பை வழிமொழிந்து பேசினார்.

இதனை ஏற்றுக்கொண்ட அவர் இந்தப் பட்டியலை ரத்துச் செய்யுமாறும், இது தொடர்பாக மீள்பரிசீலனை செய்து பாதிப்படைந்த அனைவருக்கும் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

# பொறுப்புணர்ந்து வாக்களியுங்கள்!

மூதூர், செப்.26

கல்முனை மாநகரசபைத் தேர்தல் முக்கியத்துவம் கொண்டதாக அமைந்துள்ள இக்காலகட்டத்தில் தமிழ் மக்கள் பொறுப்புணர்ந்து தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்திற்கு ஏகோபித்து வாக்களிப்பதுடன் காலத்தின் தேவையறிந்து உறுப்பினர் தெரிவுகளையும் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

-இப்படி கல்முனை மாநகரசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் குலசேகரம் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். கல்முனை மாநகர வாக்காளர்களுக்குத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் தேவைகளும், விருப்பு, வெறுப்புகளும் மலிந்து கிடக்கின்றன. குறிப்பாக கல்முனை மாநகரசபைப் பிரிவில் பல வழிகளிலும் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவும், நசுக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவற்றைப் பெரிய அளவில் சீர்செய்ய முடியாவிட்டாலும் நம் மக்களின் அத்தியாவசியக் குறைகளை இனங்கண்டு அதற்கான பரிகாரங்களை மாநகர சபை மூலம் முடிந்தவரை செய்து முடிக்க வேண்டுமென்ற திடசங்கற்பத்துடன் தேர்தலில் களமிறங்கியுள்ளேன்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



'ஈஸ்ட் எக்ஸ்போ - 2011' மாபெரும் வர்த்தகக் கண்காட்சி திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டு மைதானத்திலும், திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில்ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ச)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 25 பேர் கைது

காத்தான்குடி,செப்.26

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 25 பேரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்ததாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபையின் கொழும்பிலுள்ள சில புலனாய்வு அதிகாரிகள் மட்டக்களப்பிலுள்ள அதன் உத்தியோகத்தர்களுடன் இணைந்து காத்தான்குடி பொலிஸ் நடத்திய திடீர் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நிரந்தர கட்டட வசதி இல்லாததால் டயகம பொலிஸ் நிலையத்துக்கு மூடுவிழா

மஸ்கெலியா, செப். 26

முறையான கட்டட வசதி இல்லாமல் தற் காலிகக் கட்டடத்தில் கடந்த எட்டு வருடங்களாக இயங்கிவரும் டயகம நகரிலுள்ள பொலிஸ் நிலையம் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பொலிஸ் நிலையம் தற்போது டயகம பஸ் நிலையப்பகுதியிலுள்ள கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகின்றது. அவ்வாறாக இயங்கும் பொலிஸ் நிலையத்திற்கு கழிவறைவசதி கூட இல்லை. அங்கு கடமையிலுள்ள உத்தியோகத்தர்கள் பொதுக் கழிவறைக்குச் செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

டயகமவைச் சுற்றியுள்ள பெருந்தோட்ட கிராமத்தில் சுமார் ஏழாயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் பெருந்தோட்ட மக்கள், வர்த்தகர்கள் மற்றும் அரச உத்தி யோகத்தர்கள் ஆகியோர் இந்தப்பகுதியில் நிரந்தர பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

# தாயின் சித்திரவதையைப் பொறுக்க முடியாமல் ரயில் ஏறி தப்பிச்சென்ற 14 வயதுச் சிறுமி

## ரயில்வே ஊழியரால் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் ஒப்படைப்பு

கொழும்பு, செப். 26

தாயின் தொடர்ச்சியான அடிகளையும், சித்திரவதைகளையும் தாங்க முடியாத 14 வயதுச் சிறுமிபொருவர் தனியாக ரயில் ஏறி கொழும்புக்கு வந்த சமயம் அவர் மீது சந்தேகப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள், இறுதியில் அவரை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் ஒப்படைத்தனர்.

பரக்கடுவ, வெட்டுப்பன பிரதேசத்தைச் சேர்ந்த சஜித் சந்திக்க ஆரியரத்ன எனும் இந்தச் சிறுமி கண்டி ரயில் நிலையத்தில் கொழும்பு, கோட்டைக்கு பயணச்சீட்டு ஒன்றை எடுத்துள்ளார். அவரது நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட ரயில் நிலையப் பொறுப்பதிகாரி அவரிடம் வினாத்தொடுத்தார். எனினும், சிறுமியிடமிருந்து மழுப்பலான பதில்களே கிடைத்துள்ளன.

அதனையடுத்து, ரயில் பாதுகாவலரிடம் இந்தச் சிறுமி மீது ஒரு கண் வைக்குமாறும் கொழும்புக் கோட்டையில் அவர் இறங்கும்போது உரிய பாதுகாப்பைக் கொடுக்குமாறும் கேட்டுள்ளார்.

பிரயாணத்தின் முடிவில் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ரயில் பாதுகாவலர் தகவல் கொடுத்தார். அதனையடுத்து, கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கிய சிறுமியை ரயில் நிலைய அதிபர் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவர் உண்மையைக் கூறினார். பின்னர் அவர் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச-5)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 412 திட்டங்களுக்கு நிதி

மட்டக்களப்பு,செப்.26

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 2011ஆம் ஆண்டுக்காக 31 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் தலா ஐந்து மில்லியன் ரூபாவையும், பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, பசீர் சேகு தாவூத்,விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் தலா ஐந்து மில்லியன் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதேவேளை, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர குமார திஸநாயக்க 8 லட்சத்து 75ஆயிரம் ரூபாவையும், டி.எம்.சுவாமிநாதன் 3லட்சம் ரூபாவையும், ஏ.எச்.எம்.அஸ்வர் 50ஆயிரம் ரூபாவையும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 412 திட்டங்களுக்காக இந்த நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
சிறு தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குப் பயணம் செல்லலாம். சில பண்டங்களை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு, அவதிப்படலாம்.



**இடபம்:**
மற்றவர்களை நம்பி உங்கள் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். பெண்கள் குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, முன்பின் பார்த்திராத ஒருவர் உதவி செய்யலாம். வரவேண்டிய கடன் மிகுதி ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள்.



**மிதுனம்:**
எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சில மணி நேரங்களில் முடிவடையும்.



**கடகம்:**
மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்குவீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றைச் செய்ய முடியாமல், ஏதோ ஒரு வழியில் தடை ஏற்படலாம். சில வேலைகளை தப்பும் தவறுமாகச் செய்து விட்டு, மீண்டும் செய்யலாம்.



**சிங்கம்:**
பெண்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். உங்களின் திறமையான செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். அடுத்த சில நாள்களுக்கு பின் வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம்.



**கன்னி:**
சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். நீங்களே சில தவறுகளைச் செய்து விட்டு, அது தெரியாமல் மற்றவர்களை விமர்சிக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம்.



**துலாம்:**
உறவினர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள்.



**விருச்சிகம்:**
இழுபறியாக இருந்த காரியம் ஒன்று திடீரென முடிவுக்கு வரும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர்கள் சிலர் வீட்டிற்கு வரலாம். எதிர்பாராத பணவரவுகள் உண்டு. நேற்று செய்யாமல் விட்ட சில வேலைகளால் இன்று அவதிகளுக்கு ஆளாகலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும்.



**தனுசு:**
வீண் செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். உங்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி சிலர் காரியம் சாதிக்கலாம். சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். நண்பர்கள் தொடர்பான நல்ல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத ஒரு நபர் உங்களைத் தேடி வரலாம்.



**மகரம்:**
எந்த காரியமும் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். சிலரை பரிகாசம் செய்து பேசி அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலரை சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம். கணவன், மனைவி இடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம்.



**கும்பம்:**
மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் ஒருவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். ஆனந்தமான நாள்.



**மீனம்:**
சொல்வாக்கைப் காப்பாற்றி செல்வாக்கை அதிகரிப்பீர்கள். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பெரிய மனிதர் ஒருவரின் நட்பு கிடைக்கலாம். அரசியல்வாதிகள் வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

# சர்வதேசத்து சிக்கித் தவி இலங்

லங்காதீப பத்திரிகையில் வசந்தபிரிய ராமநாயகா எ

ஐக்கிய நாடுகள் சபை உலகின் சகல இனங்களுக்கும் நியாயம் கிட்டச் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பே. இரண்டாம் உலக மகா யுத்தம் போன்ற பயங்கர யுத்தமொன்று இனியொரு தடவை உலகில் ஏற்படாது தடுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைப்பு எனவும் அதனைக் குறிப்பிட இயலும். அத்துடன் வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவதையும் இந்த அமைப்புத் தனது ஒரு குறிக்கோளாகவும் கொண்டுள்ளது. மொத்தத்தில் இந்தச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் சகல நாடுகளுக்கும் நியாயம் கிட்டும் வகையில் செயற்படுவதே ஐ.நா. சபையின் குறிக்கோளாகும். ஐ.நா. சபை குறித்து மேற்குறிப்பிட்ட தகவல்களையே நாம் கீழ் வகுப்புகளில் வரலாற்றுப் பாடத்தில் கற்றிருந்தோம்.

### ஐ. நாவின் பொதுவான விதிகள்

ஐ. நா. பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஐ.நா. சபையில் ஆரம்பம் முதல் அங்கம் வகிக்கும் அமெரிக்காவுக்கும் அண்மையில் சபையில் உறுப்புரிமை பெற்றுக் கொண்ட தென்சூடானுக்கும் மிகக் கடைசியாக உறுப்புரிமை பெற்ற லிபியாவின் இடைக்கால அரசுக்கும் சரி ஐ.நா. சபையின் பிரகடன விதிகள் பொதுவானவையே.

ஐ.நா. சபை பிரகடனத்தின் பல தரப்பட்ட செயற்பாடுகளை முறையாகக் கைக்கொள்ளும் நோக்கில் அவற்றுக்கு அமைவான வகையில் பல உப சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஐ.நா. உணவு நிறுவனம், மனித உரிமைகள் குழு, உலக சுகாதார நிறுவனம் என்பவை இவற்றுள் சிலவாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவுவதே இந்த அமைப்புகளின் முக்கிய செயற்பாடாகும். அந்த நாடுகளின் மக்களுக்கான மனித உரிமைகளைப் பேணல், பொருளாதார மற்றும் சுகாதாரத் தரத்தை உயர்த்தல் என்பவற்றில் ஐ.நா. சபையின் இந்த உப சபைகள் அக்கறை செலுத்திச் செயற்படும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் ஐ.நா. சபையில் அங்கத்துவம் வகித்து வருகின்றது. ஐ.நா. சபையுடனான இலங்கையின் தொடர்பு முக்கியத்துவம்மிக்கது. ஐ.நா. சபையில் அங்கத்துவம் வகிக்கும் எந்தவொரு நாட்டினதும் சுயாதீனமும் குறிப்பிட்ட ஓர் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட நேர்கிறது. இது இலங்கைக்கும் பொருத்தமுடையதே.

ஐ.நா. சபைகளில் அங்கத்துவம் பெறும் வேளை முதல், எம்மால் நாம் விரும்பும் எதையும் நினைத்தபடி நிறைவேற்றிக் கொள்ள முடிந்த சுதந்திரமான நாடு என எமது நாட்டைக் கூறிக் கொள்ள இயலாது. ஆதலால் எம்மால் ஐ.நா. செயலாளரை எமது நாட்டின் விவகாரங்களில் தலையிட வேண்டாம் எனப் பேச்சுக்குக் கூறிக் கொள்ள இயலுமேயல்லாது ஜம்பம் அடித்துக் கொள்ள இயலுமேயல்லாது- அது செல்லுபடியற்ற கருத்தேயாகும்.

உண்மையில் இந்த நாட்டின் விவகாரங்களில் அவர்கள் தலையீடு மேற்கொள்கிறார்களேயான போதிலும் ஐ.நா. சபையில் ஓர் உறுப்பு நாடாக இலங்கை இருக்கும்வரை அந்தத் தலையீடு சட்டப்படி செல்லுபடியானதாகவே கருதப்படும்.

### ஐ. நாவின் செயற்பாடு

ஐ.நா. சபையில் அங்கத்துவம் வகிப்பின் நாம் அந்தச் சபையின் பிரகடனங்களுக்கு மதிப்பளித்து செயற்பட்டாக வேண்டும். ஐ.நா. சபையின் வேலைத் திட்டங்களின் மூலம் எமது நாடு பலதரப்பட்ட உதவி ஒத்தாசைகளைப் பெற்று வருகின்றது. அந்த வகையில் நாம் தற்போது எந்த வகையிலும் ஐ.நா. சபையிலிருந்து விலகிக் கொள்ள இயலாது. அவ்விதம் அந்த அமைப்பிலிருந்து விலகித் தனித்துச் செயற்படத்தக்கது வாய்ப்போ சுயபொருளாதாரத் தன்னிறைவே எம்மிடம் தற்போது கிடையாது.

உண்மையில் இன்று ஐ.நா. சபையில் உறுப்புரிமை கொண்டிராத பல நாடுகள் அத்தகைய உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள முயற்சித்து வருகின்றன. அவ்வாறின்றி சுயாதீனத்துக்குக் கட்டுப்பாடு ஏற்படுவதாகக் கருதி ஐ.நா. சபையிலிருந்து விலகிக் கொள்வது நூலறுந்த பட்டத்துக்கு நேரும் கதிக்கே வழிவகுக்கும். அந்த அளவுக்கு உலகமய சூழலின் கீழ் உலக நாடுகள் பலவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புகளைப் பேணவேண்டிய நிலை இன்று நிலவுகிறது.

தனது பிரகடனத்தில் எத்தகைய விதிகள் அடக்கப்பட்டிருப்பினும் இன்று ஐ.நா. சபை அத்தகைய விதிகளை முறைப்படி கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொள்ள இயலாது. நெத்தலி [illegible] களின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் போக்கிலேயே இன்று ஐ.நா. சபை செயற்பட்டு வருகின்றது. வல்லரசு நாடுகளின் விருப்பு வெறுப்புகளுக்கு அனுசரணையாகவே அது செயற்பட்டு வருகிறது. அந்தப் போக்கிலிருந்து தன்னை மாற்றிக் கொள்ள ஐ.நா. சபைய[illegible] இயலவில்லை. அதற்காக ஐ.நா. சபை இன்று பயனற்ற ஓர் அமைப்பெனக் கருதிவிட முடியாது. ஆயினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது பலம்மிக்க நாடுகள் செலுத்தும் அழுத்தங்களைத் தடுத்து நிறுத்தும் கடமையை ஐ.நா. சபையால் நிறைவேற்ற இயலவில்லை.

பலம்மிக்க நாடுகளின் அத்தகைய செயற்பாடுகளை பலாத்காரப் போக்கைத் தடுத்து நிறுத்த இயலாத ஐ.நா. சபை எம்மீது குற்றம் குறை கண்டுபிடிக்க முயல்கிறது.

இத்தகையதொரு பின்னணியிலேயே அமெரிக்காவின் தென்கிழக்காசிய நாடுகளுக்கான உதவிச் செயலாளர் எமது நாட்டின் உள்ளக விடயங்கள் குறித்துக் கேள்வி எழுப்பி வருகிறார்; குற்றம்சாட்டி வருகிறார்.

தமக்குத் தனிப்பட்ட வகையில் ஆலோசனை வழங்கவெனத் தாம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. செயலாளர் பான்கீ மூன், ஐ.நா. சபையின் மனித உரிமைச் சபைக்குச் சமர்ப்பிப்பதும் இத்தகைய பின்னணியிலேயே.

இது தொடர்பாக இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனிவாவில் வைத்து எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் ஐ.நா. செயலர் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. தற்போது அந்த அறிக்கை ஐ.நா. சபையின் மனித உரிமைச் சபையின் உத்தியோகபூர்வ ஆவணமாக ஆக்கப்பட்டுள்ளது.

### ஐ.நாவின் விசேட பிரதிநிதி

அது மட்டுமல்லாது இலங்கையில் இடம்பெற்ற கடைசி யுத்தத்தின் போது இங்கு கடமையாற்றிய ஐ.நா. சபையின் அதிகாரிகள் சரியான விதத்தில் சேவையாற்றியுள்ளனரா எனக் கண்டறிவதற்காக ஐ.நா. செயலர் தனது விசேட பிரதிநிதியொருவரை நியமித்துள்ளார். தமது ஐ.நா. சபை அதிகாரிகள் யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் முறைப்படி செயற்பட்டுள்ளனரா எனக் கண்டறியும் போர்வையில் ஐ.நா. செயலாளர் அவ்வேளையில் இலங்கை அரச படைகள் செயற்பட்ட விதம் குறித்துத் தோண்டித் துருவி அறிய முற்படுகிறார். ஆகக் குறைந்தது கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்கக் குழுவின் அறிக்கை வெளியாகும் வரையாவது அவரால் பொறுமை காக்க இயலவில்லை.

ஐ.நா. செயலாளரின் மேற்குறிப்பிட்ட செயற்பாடு குறித்து மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் எமது அண்டைய நாடான இந்தியாவோ இந்த விடயத்தில் மௌனம் காத்து வருகிறது. இந்த விடயம் குறித்து இந்தியா வாயே திறக்கவில்லை. இது ஒரு வகையில் கசப்பு மருந்து குடித்த ஊமையின் நிலையை ஒத்ததாகும். இதனிடையே ஐ.நா. செயலரின் செயற்பாடுகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் வரவேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளார். சாதாரணமாக ஒரு நாட்டின் அரசு தனது நாட்டின் செயற்பாடுகள் குறித்துச் சர்வதேசத்துக்கு விளக்கமளிக்கும் சந்தர்ப்பத்தில் என்னதான் உள்ளக கருத்து வேறுபாடுகள் நிலவினாலும் எதிர்க்கட்சியாயினும் சரி அரசின் கருத்து விளக்கம் குறித்து விமர்சிப்பதில்லை.

இந்த விடயத்தில் ஐ.தே.கட்சி கூட நாட்டின் கௌரவம் குறித்துச் சிந்தித்ததால் மௌனம் காத்தது. ஆனால் தமிழ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்துக்குள் தவிக்கும் ங்கை

மநாயகா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

**நாட்டின் அரசியல் எதிர்காலம் ஆரோக்கியமானதாக இல்லை. மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் ஐ.நா. சபையின் அடையாள முத்திரையின் பின்னால் மறைந்து நின்று கொண்டு இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதில் உற்சாகம் காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். இன்று சமவலுவற்ற நிலையிலுள்ள சர்வதேச போட்டித் தரப்புக்களின் சிறுமீன்களை விழுங்கி ஏப்பமிடும் பெருமீன்களின் நிலைப்பாட்டுக்குள் சிக்கித் திணற வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த யதார்த்தத்தை உணர்ந்து அதனை எதிர்கொண்டாக வேண்டியுள்ளது.**

தேசியக் கூட்டமைப்பின் தலைவரோ தமது குரலை உரத்து ஒலிக்கச் செய்துள்ளார்.

**மௌனம் காத்த இந்தியா**

இந்தியாவோ கருத்தேதும் வெளியிடாது மௌனம் காத்தது. இது ஐ.நா. செயலருக்குப் பெரும் வாய்ப்பாக ஆகிவிட்டது. அந்த வகையில் இலங்கை குறித்த ஐ.நா. செயலாளரின் நடவடிக்கைகளுக்கு ஆதரவானதொரு அலை இந்த நாட்டில் தலையெடுத்துள்ளது. நாம் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் கட்சியின் தலைவரே.

நாட்டின் அரசியல் எதிர்காலம் ஆரோக்கியமானதாக இல்லை. மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் ஐ.நா. சபையின் அடையாள முத்திரையின் பின்னால் மறைந்து நின்று கொண்டு இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதில் உற்சாகம் காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். இன்று சமவலுவற்ற நிலையிலுள்ள சர்வதேச போட்டித் தரப்புக்களின் சிறுமீன்களை விழுங்கி ஏப்பமிடும் பெருமீன்களின் நிலைப்பாட்டுக்குள் சிக்கித் திணற வேண்டியநிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த யதார்த்தத்தை உணர்ந்து அதனை எதிர்கொண்டாக வேண்டியுள்ளது. இத்தகைய நிலை இலங்கைக்கு இன்று நேற்று ஏற்பட்ட தொன்றல்ல. நாட்டில் ஸ்திரமான நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையில் இத்தகைய சவால் இதற்கு முன்னரை விட இன்று பெரிய அளவில் இந்த நாட்டை அச்சுறுத்தி வருகிறது. கடந்த காலத்தை விட எதிர்காலத்தில் இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்துச் செயற்பட வேண்டியது மிக அத்தியாவசியமாக ஆகியுள்ளது. இதனை வெளிவிவகார அமைச்சு அவதானத்துடன் கையாளாது, அந்தந்த வேளையில் ஏதோ வகையில் தற்காலிகமாகச் சமாளிக்கும் போக்கையே கைக்கொண்டு வருவதாகக் கருத வேண்டியுள்ளது.

அதேசமயம் ஐ.நா. சபையின் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் போக்குக் காரணமாக உள்நாட்டில் அரசுக்கு ஆதரவு அலை உயர்வடைவதை அவதானிக்க முடிகிறது. இதனால் அரசியல் ரீதியில் மக்கள் மத்தியில் அரசுக்குத் தேர்தல்களில் வெற்றிகள் கிட்ட வாய்ப்பு உருவாகின்றது. இது ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு வலுவை உயர்த்தக் கூடும்.

அது அண்மைக்கால தேர்தல் முடிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. தற்போது இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் உள்நாட்டு அரசியல் வர்த்தகத்தில் அரசுக்குச் சாதகமான வாய்ப்பை வழங்கிவருவது புலப்படுகிறது. ஆயினும் அரச நிர்வாகத்தில் அதனைத் தனக்கான பெருவாய்ப்பாக அரசு கருதிச் செயற்படு வது அரசுக்கு நன்மை பயக்கப் போவதில்லை.

அரசு தனது தற்போதைய உள்நாட்டு ஆதரவு நிலையை மட்டும் காரணம் காட்டி தனது எதிர்கால அரசியல் ஸ்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது. சர்வதேச முகாமைத்துவம் குறித்து அரசு அக்கறையுடன் செயற்பட வேண்டியது அவசியமான தொன்று. இத்தகைய சிக்கலான சூழ்நிலையொன்றின்போது இலங்கை குறித்த சர்வதேச நிலைப்பாட்டைக் கருத்தில் எடுத்து அரசு அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் தனது செயற்பாடுகளை தீர்மானங்களை முன்னெடுத்தல் அவசியமாகும். அந்த வகையில் தற்போது எமது வெளிநாட்டுத் தூதராலயங்கள் அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு இலங்கை அரசின் இன்றைய நிலைப்பாட்டை விளக்கிக் கூறி வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அத்தகைய செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு அவர்களால் திருப்திகரமான அளவில் முன்னெடுக்கப்படுவதில்லை என விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**பெருமை பேசும் அரசியல் பண்டிதர்கள்**

1970 ஆம் ஆண்டுகளில் ஏகாதிபத்தியத் தரப்புகளின் தலையீடுகளுக்கு எதிராக நாட்டில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பை நினைவுபடுத்திப் பெருமை பேசிக் கொள்ளும் இந்த நாட்டின் அரசியல் பண்டிதர்கள் சிலர் அண்மைக்கால மத்திய கிழக்கு நாடுகளின் அரசியல் சம்பவங்கள் இலங்கைக்கு முன்னுதாரணம் எனக் கருத்து வெளியிட்டு வருகின்றனர். ஆனால் நிலைமை அத்தகைய பாரதூரமானதாக இல்லை என்பதே யதார்த்தமாகும். ஏனெனில் அதற்கு இரு காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம், அரசு தற்போது கொண்டுள்ள உள்நாட்டு அரசியல்வலு.

இரண்டாவது ஆசிய வட்டகையின் பொலிஸ்காரனாக இந்தியா இந்தப் பிராந்தியத்தில் வலுமிக்கதொரு நாடாக இருப்பதாகும். சீன நாட்டை விட இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள அண்டை நாடு இந்தியாவே.

இந்தியா சர்வதேச ரீதியில் வலுவுள்ளதொரு அண்டை நாடாக அமைந்திருப்பது எமக்கு இலாபகரமானதொன்றே - வாய்ப்பானதே. இலங்கை குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை மீறி, புறக்கணித்து மேற்குலக நாடுகளோ அல்லது ஐ.நா. சபையோ நடவடிக்கைகளில் இறங்கத் தயாரா யில்லை. இலங்கை தொடர்பான தற்போதைய பிரச்சினை குறித்து விவாதிக்க ஆறுமாத கால அவகாசம் அளிப்பதென இவை தீர்மானிப்பதற்கு இந்த விடயத்தில் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாடே பின்னணிக் காரணமாகும். இலங்கை குறித்த தற்போதைய பிரச்சினையில் இந்தியா மௌனம் காத்து வருகின்ற போதிலும், எமது பிரச்சினையை வெளியார் தலையீடின்றி நாமே தீர்த்துக் கொள்ள கால அவகாசம் வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே இந்தியா இருப்பதாகக் கருத முடியும். இந்தியாவின் இத்தகைய நிலைப்பாடு காரணமாகவே இலங்கைக்கான தற்போதைய சவால் பெரும் பாதிப்பெதனையும் ஏற்படுத்தவில்லை. இந்தியாவுடனான தொடர்புகளை சாதகமான விதத்தில் முகாமைத்துவம் செய்து கொள்வதன் மூலமே இலங்கை தன் மீது விழுந்துள்ள அவதூறைத் துடைத்து எதிர்காலத்தில் சர்வதேச அரங்கில் நற்பெயரை ஈட்டிக்கொள்ள வாய்ப்புக் கிட்டும். *

**வியெஸ்ரி**

## கனவு கண்டது யார்?



அடர்ந்த காடு. அங்கே ஓர் ஆச்சிரமம் இருந்தது. ஒரு நாள் காலை நேரத்தில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த குருவின் தூக்கம் கலைகிறது. எழுந்து உட்கார் கிறார். ''எல்லோரும் வாருங் கள்!'' என்று சீடர்களை அழைக் கிறார். சீடர்கள் அனைவரும் ஓடிவருகிறார்கள். குருவின் அழைப்பில் ஓர் அவசரம் தெரிந்தது. அது சீடர்களுக்குப் புரிந்தது. '' என்ன வேண்டும் உங்களுக்கு ?'' என்கிற பாவனையில் குருவைப் பார்க்கிறார்கள்.

குரு சொல்கிறார்;

''சீடர்களே! இப்போது நான் ஒரு சிக்கலான விவகாரத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்! நீங்கள் அதைத் தீர்த்து வைத்தால் நல்லது!''என்றார்.

சீடர்கள் திகைத்துப் போனார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

'' என்ன இது... நமக்கு ஏற்படுகின்ற எல்லா விவகாரங்களையும் தீர்த்து வைக்கிறவர் நம் குருநாதர். அவருடைய விவகாரத்தை நாம் தீர்த்து வைப்பதா? எல்லாம் அறிந்த நம் குருநாதருக்கே குழப்பமா?

சீடர்கள் குழம்பிப் போனார்கள்.

என்றாலும் மிகவும் பணிவாகக் கேட்டார்கள்.

''சுவாமி! உங்களுக்கே சிக்கலா? இந்த உலகத்துச் சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் அப்பாற்பட்டவர் அல்லவா நீங்கள்? அப்படிப்பட்ட உங்களுக்கே சிக்கல் என்றால்... அது எப்படி?''

''எனக்கு ஏற்பட்டிருக்கிற சிக்கல் அவ்வளவு பெரிதானது மிகவும் பெரிய விவகாரம் அது....!'' என்றார் குரு.

''சுவாமி, எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது விவரமாகச் சொல்லுங்களேன்!''

குரு சொல்ல ஆரம்பித்தார்.

'' அதாவது, நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் ஒரு பட்டாம் பூச்சியாக மாறிவிட்டேன். அப்படி மாறி,ஒவ்வொரு மலராகப் பறந்து போய் உட்கார்ந்து தேன் சாப்பிட்டேன்'' என்றார்.

சீடர்கள் யோசித்தார்கள்....

'என்ன இது? இது ஒரு பெரிய பிரச்சினையா? ஒரு சாதாரண கனவு கண்டதற்காகவா இந்தக் காலை வேளையிலே நம்மையெல்லாம் குருநாதர் இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டிருக்கிறார்?'

இப்படி யோசித்த சீடர்கள் மறுபடியும் கேட்டார்கள்:

''இதிலே என்ன சிக்கல் சுவாமி? கனவு எல்லோருக்கும் வரத்தானே செய்கிறது!''

''சீடர்களே! பிரச்சினை அது இல்லை. நான் இன்று காலையில் கண் விழித்துப் பார்த்தவேளை,நான் நானாக மறுபடியும் மாறிட்டேன் என்பதை தெரிந்துகொண்டேன். இதில் சிக்கல் என்னவென்றால்... இப்ப அந்தப் பட்டாம் பூச்சிதான்தான் நானாக ஆயிட்டதாக கனவு கண்டிருக்கிறேன் என்பதுதான். ஒரு மனிதன் பட்டாம் பூச்சியாக ஆகிறதாகக் கனவுகாண முடியும் என்பதைப்போல் அந்தப்பட்டாம் பூச்சியும் மனிதனா ஆகிறதா கனவு காண முடியும்-இல்லையா? இப்போது எனக்கு யதார்த்த நிலை தெரியவேண்டும். எது நிஜம் என்று தெரிய வேண்டும்... நேற்று நான் கண்டது கனவா? அல்லது இது பட்டாம் பூச்சி கண்டுகொண்டிருக்கிற கனவா?''

இது தான் குரு கேட்ட கேள்வி.

இதைக் கேட்ட சீடர்கள் இப்போது உண்மையாகவே குழம்பிப் போனார்கள்.

''சுவாமி! இதுவரைக்கும் நாங்கள் தூங்கும் போது பார்க்கிறது கனவு என்றும் விழித்துக்கொண்டு இருக்கிறபோது பார்க்கிறது நனவு என்றும் நம்பிக் கொண்டிருந்தோம்... இப்போது எங்களை நீங்கள் குழப்பிவிட்டீர்கள்! இதற்குப் பதில் சொல்ல எங்களுக்கு சக்தி இல்லை..!'' என்றனர் சீடர்கள்.

இப்போது குரு பேச ஆரம்பித்தார்...

''நினைவுதான் முக்கிய அம்சம்-அதாவது முடிவுக் கட்டம் என்றால், பகலில் நினைவுகளை விட இரவின் கனவுகளே மிகவும் உண்மை. ஒருவன் தூங்கப்போனால் தூங்கிக்கொண்டே இருந்தால் அவன் காணும் கனவு பொய் என்பதை அவன் உணரமாட்டான். ஒவ்வொரு கனவும் காணுகிறபோது மிகவும் உண்மையாகத்தான் தெரிகிறது. ஒரு கனவு கூட, 'உண்மை இல்லை' என்று கனவில் தோன்றுவதே இல்லை என்றார் குரு.

'அகில வாழ்வு அத்தனையும் சொற்பனம் கண்டாய்' என்கிறார் தாயுமானவர்.

எனவே-எமது கனவிலிருந்து நாம் எப்போது விழித்துக்கொள்ளப்போகிறோம் என்பதுதான் முக்கியம். இது ஒரு பக்கம் இருந்தாலும்,இன்றைக்கு நாம் காணும் கனவுகளும், அதன் விளைவுகளும் வேறு மாதிரியாகத்தான் இருக்கின்றன.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிவால்களுக்கு பயந்து நடந்தால் மக்களின் ஆதரவை இழப்பது நிச்சயம்

## எச்சரிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

புலி வால்களுக்கும், சர்வ தேசத்துக்கும் அடிபணிந்து 13ஆவது அரசமைப்புத் திருத் தத்தை அரசு நடைமுறைப் படுத்துமாயின் நாட்டு மக்க ளின் ஆதரவை இழக்கவேண் டிய நிலை ஏற்படும் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்தக்கூடாது என்பது எமது நிலைப்பாடு மட்டுமல்ல, நாட் டிலுள்ள பெரும்பாலான மக்க ளின் உறுதியான கருத்தும் கூட என்பதைத் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் எனத் தேசப்பற்றுள்ள தேசிய இயக் கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர உதயனுக் குத் தெரிவித்தார்.

13ஆவது அரசமைப்புத்திருத் தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவதில் அரசுக்குள் இன்று முரண்பாடு ஏற்பட்டுள் ளது. இதனை அமைச்சர் ஒரு வர் அண்மையில் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

ஆட்சேபனை தெரிவிக்கும் கடும் போக்குடைய அமைச்சர் களை சரி செய்வதற்கு மூத்த அமைச்சர்கள் சிலர் முயற்சிப் பதாகத் தகவல்கள் வெளியாகின.

இது தொடர்பாக குணதாச அமரசேகரவின் கருத்தைக் கேட்க முற்பட்ட வேளையி லேயே அவர் மேற்கண்ட தக வலை வழங்கினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கும் விடயத்தில் அரசுக்குள் முரண்பாடு உள் ளதா, இல்லையா என்பது முக்கி யமானது. அந்த விடயம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனி னும், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்தக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. ஆரம்பம் முதலே நாம் அதனையே வலியுறுத்தி வருகின்றோம்.

நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களின் நிலைப்பாடும் அதுவே. இவை அனைத்தை யும் மீறி அரசுநாட்டைகூறு போடமுனையு மானால் மக்களின் ஆதரவை இழக்கவேண்டிய நிலை ஏற் படும் என்பதைப் புரிந்துகொண் டால் நல்லது. இல்லையேல், விளைவுகள் பாரதூரமாக அமை யும். - என்றார் அவர்.

# திருமலை கண்காட்சிக்கு வந்த பஸில் மேடையில் பேசுவதற்கு பின்னடிப்பு

## சனக் கூட்டம் இல்லாததே காரணமாம்

திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்ற ஈஸ்ட் எக்ஸ்போ 2011 கண்காட்சிக்கு வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வருகை தந்த பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேடையில் ஏறிய நிலையில் மீண்டும் மேடையைவிட்டு இறங்கி யதை அவதானிக்க முடிந்தது.

இது தொடர்பாக மிக முக் கிய அரசியல்வாதி ஒருவரிடம் வினவியபோது, பொதுமக்க ளின் வரவு குறைவாகக் காணப் பட்டதால் மேடையில் பேசு வது பொருத்தமில்லையெனக் கருதி அவர் இறங்கியதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மீன்பிடித் துறை பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, பௌத்த சாசன பிரதியமைச்சர் குணவர்தன, கிழக்கு மாகாண ஆளுநர் அட் மிரல் மொகான் விஜயவிக்ரம, கிழக்கு மாகாண சபைத் தவி சாளர் எச்.எம்.பாயிஸ், கிழக்கு சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர், கிழக்கு விவசாயத் துறை அமைச்சர் துரையப்பா நவரட்னராஜா மற்றும் ஆரிய வத்தி கலப்பத்தி, ஆர்.அன்வர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வழமையாக மேடைகள் அமைக்கப்பட்டால் அரசியல் வாதிகள் பேசுவது வழக்கம். இருந்தும் கண்காட்சிகளில் மேடைகள் அமைக்கப் பட்டிருந் தும் உரையாடுவதற்கு அரசி யல்வாதிகள் யாருமில்லை. காரணம், போதி யளவு பொது மக்கள் கண் காட்சியை பார்வை யிடுவதற்காகவருகைதரவில்லை. அங்கு அரச திணைக்கள அதி காரிகள் மாத்திரமே பார்வை யாளர்களாகக் குழுமியிருந்தனர்.

உட்கட்சிப்பூசல் காரணமாக ஜே.வி.பிக்குள் இன்று பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் கூறியுள்ள கருத்துக்கள்

# வன்முறையுடன் வளர்ந்த கட்சி நெடுந்தூரம் செல்ல முடியாது

## அஸ்வர் எம்.பி.



வன்முறை கலாசாரத்தில் நம்பிக்கையுள்ள அரசியல் கட்சி நெடுநாள் நீடிக்காது. இதற்கு ஓர் உதாரணமே ஜே.வி.பி.

ஜனநாயகம், சோஷலிஸம் என்பன அக்கட்சியில் தடை செய்யப்பட்ட வார்த்தைகளா கவே உள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ சமாதான முனைப்பு களை மேற்கொண்டு வந்த போது, முதல் முட்டுக்கட்டை இட்டவர்கள் ஜே.வி.பியினரே. சமாதான முயற்சிகளுக்கு எதி ராகச் சந்திக்குச் சந்தி, சுவர்க ளுக்குச் சுவர்சென்று பெரிய கறுப்பு எழுத்துகளால் தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத் தினர்.

இதனால் இலங்கைத் தமிழ ரதும், இந்தியாவினதும் கோபங் களையே இவர்கள் சம்பாதித் துக்கொண் டனர். ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ஸ அமர சிங்கவுக்கு சோஷலிசம், ஜன நாயகம் என்பன தெரியாது. அடிதடி, கொலை, மிரட்டல், உடைத்தல், போராட்டம் என்ப வையே நன்கு தெரியும்.

தனித்து கொலை, வன் முறை கலாசாரத்தில் செயற் பட்ட ஜே.வி.பி. கட்சி இன்று பிளவுபட்டிருக்கிறது. வன் முறையுடன் ஒட்டிவளரும் கட்சி நெடுந்தூரம் பயணிக் காது என்று தெரிவித்தார் ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

# இது ஆச்சரியமான விடயமல்ல

## குமரகுருபரன்



தமிழ் மக்களுக்கான அரசி யல் தீர் வுக்கு முட் டுக்கட்டை இட்ட கட்சியே தற்போது சின்னா பின்னமாகியுள்ளது. இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. தனது சுயநலத்துக் காகவும், சில சலுகைகளுக்காக வும் அரசு டன் இருந்து சுத்தமான இன வாதத்தைத் தூண்டி வந் தது ஜே.வி.பி.

தற்போதைய அரசு ஆட் சிக்கு வரக் காரணமாக இருந்த ஜே.வி.பி கட்சி, ஆட்சிக்கு வந்த அரசினால் புறந்தள்ளி விடப் பட்டபோதே அக்கட்சிக் குள் பிளவு ஏற்பட ஆரம்பமாகிவிட் டது. ஜே.வி.பி. ஆரம்பத்திலிருந்த இனவாத கொள்கையிலிருந்து இன்று மாறிய காரணத் தால் சிங்கள மக்களின் செல்வாக்கை இழந்தது. அத்துடன், அரசிடமிருந்து பிரிந்து சென்றபோது அனைத்து பலத்தையும் அக்கட்சி இழந்தது.

இன்று கட்சிக்குள் ஏற்பட் டுள்ள பிளவு காரணமாக எதிர் காலத்தில் எவற்றையெல்லாம் இழக்கப்போகிறது எனத் தெரி யாது. எனினும், இது ஒன்றும் ஆச்சரியமல்ல.

- இப்படித் தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணி யின் பொதுச் செயலாளர் குமர குருபரன்.

# இது மக்களின் சாபம்!

## கலாநிதி விக்கிரமபாகு



ஜனா திபதிக்கு வால் பிடித்துக் கொண்டு, சிங்கள மக்கள் மத்தியில் பிரசித்தி பெற இனவாதங்களைத் தூண்டி அரசியல் செய்த இவர்கள் தற் போது நிலை தடுமாறி உள்ள னர். இவர்களின் கதி அந்தோ பரிதாபம்.

கடந்த காலங்களில் ஜனாதி பதி மஹிந்த அரசுடன் இணைந்து செயற்பட்ட ஜே.வி.பியினர், ஜனாதிபதி செல்லும் இடமெல் லாம் குளிப்பதற்காகக் கூட்டிச் செல்லும் நாய்களைப் போன்று அவர் பின்னால் ஓடினர்.

யுத்தத்தின்போதும், கடந்த கால சம்பவங்களிலும் முன் னின்று அரசின் சார்பில் உழைத்தவர்கள், சிங்கள மக்க ளின் வாக்குகளையும், மனங் களையும் வெல்வதற்காகப் பல்வேறு தந்திரோபாய நட வடிக்கைகளைக் கையாண்ட னர். குறிப்பாக ஆர்ப்பாட்டங் கள், கலகங்களை மேற்கொண் டனர். அரசின் கைப்பொம்மை களாகச் செயற்பட்டு வீணாய்ப் போனார்கள்.

அரசுடன் இருந்த காலத் தில் ஜே.வி.பியினர், எங்களை யும், சில கட்சிகளையும் சிங் களப் புலிகள் என்றும் கூறித் திரிந்ததை மறக்க முடியாது. அத்துடன், எமது சுயாதீன செயற்பாடுகளைக் கண் காணித்து பொலிஸாருக்கும், உயர் நிலைப் பிரிவினருக்கும் புறங்கூறினர் ஜே.வி.பியினர்.

இவ்வளவு செய்த இவர் களுக்கு மக்களின் சாபம் கிடைத்துள்ளது. இதனாலேயே திண்டாட்டமடைந்து வீதியி லிறங்கும் நிலைக்கு நிலை குலைந்து போயுள்ளனர். - என்றார் நவ சமசமாஜக்கட்சி யின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

# இவர்களின் பிளவு அரசுக்கே சாதகம்

## ரங்கேபண்டார எம்.பி

ஊர் இரண்டானால் கூத் தாடிக்குக் கொண்டாட்டம் என் பதுபோல, எதிர்க்கட்சிகளில் பிளவுகள் ஏற்பட்டால் அது அரசுக்கு இலாபமாகிவிடும். எனவே, எதிர்க்கட்சிக்குள் காணப்படுகின்ற பிரச்சினை களை அமைதியாகத் தீர்த்துக் கொண்டு அரசின் அடாவடித் தன ஆட்சியிலிருந்து மக்களை மீட்க திடசங்கற்பம் பூண வேண்டும்.

கட்சிகளுக்குள் உட்பூசல் கள் மற்றும் பிரச்சினைகள், பிளவுகள் ஏற்படுவது சகஜம். இந்த நிலைமை எதிர்க்கட்சி யிலும் உள்ளது போன்று ஆளுங் கட்சியிலும் வெளியில் வரா மல் காணப்படுகிறது.


குறிப்பாக ஜே.வி.பிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிளவு இன்று அல்ல, தற் போது வீடமைப்பு அமைச்சராக உள்ள விமல் வீரவன்ஸ, ஜே.வி.பியி லிருந்து விலகியது முதல் அக்கட்சிக்குள் பிளவு என்ற காய்ச்சல் தொற்றிவிட் டது.

ஜே.வி.பியில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையை உடன் தீர்த் துக்கொள்ள வேண்டும். ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள மற்றும் நாடா ளுமன் றத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் ஜே.வி.பிக்குள் ஏற் பட்டுள்ள இப்பிரச்சினை யானது ஆரோக்கிய மானஎதிர் காலத்தைப் பாழாக்கி விடும்.

இதன் ஊடாக அரசுக்கே அதிக இலாபம் கிடைக்கும். எனவே, இதனையாவது உணர்ந்து கொண்டு ஜே.வி.பி யினர் தமது கட்சிக்குள் ஏற் பட்டுள்ள பிரச் சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார கூறினார்.

# தமிழருக்கு செய்த துரோகங்கள்தான் ஜே.வி.பியினருக்கு இந்த நிலைமை

## அரியநேத்திரன் எம்.பி.



தமிழர்களுக்கு ஆதரவுஅளிப்போம் என்றபோர்வையில் ஜே.வி. பி. அரசியல் பிழைப்பு நடத்தி வருகிறது. ஆனால், யுத்தத்திற்கு முன்ன ரான காலத்தில் வெறும் இன வாதத்தையே ஜே.வி.பி. கக் கியது. வாக்குகளுக்காக இன வாதத்தைத் தூண்டியவர் களின் கட்சிக்குள்ளேயே ஒரு இனவாதம் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியினர் என்னதான் தமிழர்களுக்கான உரிமைக்காக வும், அரசியல் தீர்வுக்காகவும் குரல் எழுப்பி வந்தாலும், தமி ழர் மீது உண்மையான பற்று, அக்கறை அவர்களிடம் இல்லை.

அவர்கள் தமிழர்களுக்காக தற்போதுதான் குரல் கொடுக் கின்றனர். ஆனால், யுத்தத்துக்கு முன்னர் தமிழர்களைப் பற்றிப் பேசும்போது எதிர்ப்பையே வெளியிட்டனர்.

வெறும் அரசியல் இலா பத்துக்காகத் தமிழர்களைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி வருகின்ற கட்சி ஜே.வி.பியா கும். தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினைத் தீர்வு, அதிகாரம், உரிமை வழங்கும் விடயத்தில் ஜே.வி.பியினர் போலியாகவே ஆதரவுவழங்குகின்றனர். உண்மை நிலையானது, ஜே.வி.பி. அவற்றை எதிர்க்கிறதாகும்.

தமிழர்களுக்கு சுயநிர்ண யம் வழங்கக்கூடாது என்று குரல் எழுப்பினால்தான் உண்மை யான சிங்களவன், தேசப்பற் றாளன் என்ற நிலையை கடந்த காலங்களில் ஜே.வி.பி. உரு வாக்கியிருந்ததை எவராலும் மறக்க முடியாது. இலங்கையில் இவ்வாறு தமிழர்களுக்குச் செய்த துரோ கங்களும், சூழ்ச்சிகளுமே ஜே.வி. பியை இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் காத்திருக்கும் பயணிகளின் அவலநிலை

ஏ-9 வீதி போக்குவரத்துக்கு திறக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து சகல இடங்களுக் குமான இ.போ.ச பேருந்து மற்றும் தனியார் பேருந்துகள் மினிபஸ்கள் சேவைகள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில் 769 மார்க்கத்தில் தினமும் வீதிகளில் மக்கள் பஸ்ஸுக்காகக் திருக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் -கொடிகாமம் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் அதிக அளவு பயணிகளை ஏற்றும் வாகனமாகவே காணப்படுகின்றன. இந்த மார்க்கத்தில் 10 நிமிடங்களுக்கு ஒரு மினிபஸ் 30 நிமிடங்களுக்கு இ.போ.ச பேருந்து சேவைகள் இடம் பெற்று வருகின்றன. இவற்றை விட தூர இடங்களிலிருந்து வரும் அரச, தனியார் பேருந்துகள் ஐந்து நிமிடங்களுக்கு ஒன்று என்ற ரீதியில் இவ் வீதியில் செல்கின்றன.



இவ்வளவு பயணிகள் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற போதிலும் தென்மராட்சி பிரதேச மக்கள் மினி பஸ்களில் நின்றவண்ணம் பயணிக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் , கொடிகாமம் ஆகிய பஸ் நிலையங்களில் ஆசனங்கள் நிறைந்த நிலையில் மினி பஸ்கள் புறப்படுவதால் வீதிகளில் நிற்கும் பயணிகள் நின்ற வண்ணமே பயணிக்கின்றனர். தமது தேவையின் அவசியம் கருதி பஸ்ஸில் பயணிக்க வேண்டியதால் பயணிகள் வாகனத்தில் நின்று கொண்டு பயணிக்கின்றனர். இதனால் மினி பஸ்களில் பெரும் இடநெருக்கடிக்கு மத்தியில் பயணத்தை மேற்கொள்கின்றனர். சில மினி பஸ்களில் பயணிகளுக்கும் நடத்துநருக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெறும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. அளவுக்கதிகமான பயணிகள் ஏற்றக் கூடாது என்று போக்குவரத்து விதிமுறைகள் உள்ள போதிலும் அதனைக் கவனிக்க வேண்டியவர்கள் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி , சிறியரக வாகனங்கள் போன்றவற்றைப் பரிசீலிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

தமது வாகனத்துக்குப் பின்னால் வேறொரு பயணிகள் வாகனம் வருவதை அவதானித்தால் முந்திச் செல்ல வேண்டுமென்ற நிலையில் பயணிகள் வாகனம் என்பதை மறந்து வாகனத்தை வேகமாக செலுத்துவதும் பயணிகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

அதிக பயணிகள் ஏற்றுவது, வேகக் கட்டுப்பாடு போன்றவை சகல வீதி களிலும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு மணித்தியாலத்தில் இரு சில்லு மோட்டார் சைக்கிள் தொடக்கம் 16 சில்லு கொன்ரைனர் வாகனம் வரை 100 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

வேகம் விவேகமல்ல. வேகம் மரணத்தைத் தரும் என்னும் விளம்பரப் பலகைகள் வீதியில் காணப்படுகின்ற போதிலும் இதில் கவனம் எடுப்போர் எவருமே இல்லை. குறிப்பாக பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கட்டாயம் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

ஏ-9 வீதியில் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு பயணிகள் வாகனம் போகின்ற போதிலும் தூர இடங்களிலிருந்து வரும் தனியார் பேருந்துகள் 769 மார்க்கத்தில் மிருசுவிலுக்கும் கச்சேரிக்கும் இடையில் உள்ள புஸ் நிலையங்கள் , பஸ் தரிப்பிடங்கள் ஆகியவற்றில் நிற்கும் பயணிகளை ஏற்றுவதில்லை. தூர இடங்களிலிருந்து வரும் இ.போ.ச பஸ்கள் கூட பஸ் தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளை ஏற்றுவதில்லை.இதே போன்று தூர இடங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் தனியார் பேருந்துகள் மிருசுவில் வரையான பயணிகளை ஏற்றுவதில்லை.

இதனால் பயணிகள் 769 மார்க்க இ.போ.ச பஸ் தனியார் பேருந்து மற்றும் மினிபஸ்களை நம்பி காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.தூர இடங்களிலிருந்து வரும் தனியார் பேருந்துகள் பயணிகளை ஏற்றாதது தொடர்பாக விசாரித்த போது தனியார் பயணிகள் வாகன தலைமையகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் தென்மராட்சி தனியார் சங்க பயணிகள் வாகனங்களின் நலன் கருதி இப் பகுதி பயணிகளை ஏற்றுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கங்களின் ஒற்றுமையை அதாவது அனைவரும் உழைக்க வேண்டும் என்ற கருத்திதை வரவேற்கும் வேளையில் பயணிகளின் போக்குவரத்து கஷ்டங்களை எவ்வகையில் தீர்ப்பது என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

தென்னவன்.



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
01.01.1957

மறைவு:
13.08.2011

### நவரட்ணம் புண்ணியமூர்த்தி

(மின் பாதையாளர் - தரம் 1, இலங்கை மின்சார சபை)

கடந்த 13.08.2011 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனை இன்று (26.09.2011) திங்கட்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்.
அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய
போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

37, புங்கங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



நவாலியூர் **திரு. திருமதி காந்தகுமார்-ஜமுனாதேவி**
தம்பதியரின் செல்வப்புதல்வனும்,
**மானிப்பாய் ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை**
மாணவனுமாகிய செல்வன் **சங்கரன்**

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை நாம் மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல பரீட்சைகளில் சித்தி பெறவும், பெற்றவர்கள் மகிழ்ந்திட, பெரியோர்கள் புகழ்ந்திட, வாழ்த்திட மேலும் பட்டங்கள் பல பெற்று, உயர் பதவி வகித்திடவும், இவருடன் கல்வி பயின்று சித்தியடைந்த ஏனைய சக மாணவர்களையும் வாழ்த்தி எல்லாம் வல்ல கிருஷ்ண பகவானை வேண்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவருக்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர், வகுப்பாசிரியை செல்வி பவித்தா அவர்களையும் இந்தத் தருணத்தில் வாழ்த்துகின்றோம், பெருமையடைகின்றோம்.

அட்டகிரி வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனதார வாழ்த்துவோர்:
மாமா (கனடா), பெரியப்பா (கனடா), குடும்பத்தினர்.


## தேர்த் தரிப்பிடம் அமைக்க நிதி

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய புதிய தேர் தரிப்பிட மண்டபத்தை லண்டனில் வாழும் அம்பாளின் அடியவர் ஒருவர் முழுச் செலவையும் வழங்க முன்வந்துள்ளார்.

இந்த முழுச் செலவையும் மதிப்பீடு செய்து வழங்க சபையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். புதிய தேர் ஏற்கனவே திட்டமிட்ட படி 2012 ஆம் ஆண்டு ஆனி மாத திருவிழாவின் போது இழுக்கப் படவுள்ளது. ஆலய பரிபாலன சபையார் இதற் கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2011 இல் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி ம.கீர்த்திகா** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவ துடன் அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அவர்களுக்கும் மற்றும் அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா,
அங்கிள்மார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்.
விநாயகர், பல்பொருள் வாணிபம், 11, பழம் வீதி, கந்தர்மடம்.

## 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த
திரு.திருமதி மல்கம் பிறைசர் - யஸ்மின்
தம்பதியரின் செல்வப் புதல்வி

**மவ்றினா**

தனது 2 ஆவது பிறந்த நாளை
இன்று (26.09.2011)
திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு
சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்புமிகு அப்பா, அம்மா, பப்பா,
அம்மம்மா,சித்திமார், மாமாமார், அத்தைமார்
மற்றும் உற்றார், உறவினர் அனைவரும்
இறையருளால் பல்கலையும்
கற்றுப் பல்லாண்டு
காலம் நலமுடன் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

2 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்

மாமன் - யதீபன்

## உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

**மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL**

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் **திருமுருகன்கொம்நெற்**

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :-0212227835




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி பாலரஜனிதரன்-நவநீதா
தம்பதியரின் அன்பு மகன்
செல்வன் **பா.கவியரசன்**
(அச்சுவேலி மத்திய கல்லூரி)

2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றமைக்கு அவரை வாழ்த்துகின்றோம்." அத்துடன் கற்பித்து வழி காட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும், வழிநடத்திய பெற்றோர்க்கும் எமது நன்றிகள்.

இவர் கல்வியில் மேலும் பல வெற்றிகளைப் பெற
**எல்லாம் வல்ல புதுவை ஆலடி முருகன்**
துணை நிற்கப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா,
சித்தப்பா (பிரான்ஸ்), சித்தி.
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

## மனம் நெகிழ்ந்த பாராட்டுக்கள்



கு.கஜானி-190
(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)



ர.சுஜாஜினி-176
(யா/கல்வியங்காடு இ.த.க. பாடசாலை)



ம.தர்சிகா-173
(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)



கு.சௌமியா-162
(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

நடைபெற்று முடிந்த 2011 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இந்த மாணவச் செல்வங்கள் மேன்மேலும் பல பெருமைகளையும் உயர் நிலைகளையும் அடைந்து சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**மணிவர்ணன்-சோபினி குடும்பம்**
கல்வியங்காடு, நல்லூர்

**வாணி றெக்ஸ்**
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

## புலமைச்சுடர் பிரதியை சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே..........




இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்தமாக ரூபா 1000 ஐ காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை

| காசுக்கட்டளையாயின்- | வங்கி வைப்பாயின் - |
|---|---|
| (கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக் கூடியவாறு) | (126-1-001-0-3452799)என்றமக்கள்வங்கிஇலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.,'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

புலமைச்சுடர் சந்தாப்படிவம்

1. பெயர் : ..............................
2. விலாசம் : ..............................
..............................
3. தொ.பேசி இலக்கம் :..............................
4. பிரதிகளின் எண்ணிக்கை:..............................
5. செலுத்தப்பட்ட பணம் : .............................. ரூபா
6. வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716850005/ 0115738855

(இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒரே உலகம் ஒரே ஆள்' என்னும் கொள்கையுடன் சேவையாற்றும் யாழ். சிவதொண்டன் நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சிவதொண்டன் நிலையத்தில் உள்ள தொண்டர்கள் அதிகம் சிவபக்தர்களாக இருப்பதால் நிலையத்தின் புனிதத் தன்மை பெருமைமிக்கதாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இளம் சமூகத்தினர் மட்டுமல்லாது. முதியோர்களும் பயன் பெறக் கூடிய வகையில் சபையினால் தொண்டுகள் நிறை வேற்றப்படுகின்றன.

ஒவ்வொரு அமைப்புக்கும் யாப்புகள் அமைக்கப்படுவது போன்று சிவ தொண்டன் நிலையத்துக்கும் யாப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த யாப்பு நிலையத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

அதுவே தற்போதிலுள்ள சிவதொண்டன் சபையாகப் பரிணாமம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சபையில் உள்ளவர்கள் சபையின்யாப்புக்கு ஏற்பவும், சமூக நோக்குடனும் சிறந்த சிவதொண்டர்களாக விளங்குகின்றனர்.

உயர்ந்த நலத்தை லட்சியமாகவும். பூசை விழாக்களை செயற்பாடுகளாகவும் செம்மையாக ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப நிகழ்த்தி வருவதால் யாழ். மாவட்டத்தில் மட்டு மல்லாது நாடளாவிய ரீதியிலும் சிவதொண்டன் நிலையத்தின் கிளைகள் அதிகரிக்கத்தொடங்கின.

எந்தப் பிரதேசத்தில் சிவதொண்டன் நிலையம் தனது சேவையை வழங்கினாலும் செல்லப்பா சுவாமிகளின் வழிகாட்டலின்படி ஒழுங்குமுறையாக சிவ பக்தர்களுக்கான பூரணமான சேவையை வழங்கி வருகின்றது.



இது தனியொருவர் பயன் பெறக்கூடிய வகையில் அமையாது அதிகமான பக்தர்கள் பயன் பெறவேண்டும் என்பதே இந்த சேவையின் நோக்காக அமைந் துள்ளது.

"ஒரே உலகம் ஒரே ஆள்" என்ற செய்தியை உலகுக்கு உணர்த்தும் உயர்ந்த நோக்குடன் உருவாகியதே சிவதொண்டன் நிலையமாகும்.

இந்த நிலையத்தை உருவாக்க மூல காரணமாக இருந்த யோகசுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவரை நினைவு கூறுமுகமாக சிவதொண்டன் நிலைய விழாக்களில் திங்கட்கிழமைகளில் வரும் ஆயிலிய நாள்களில் ஆயிலிய பூசையும், ஆண்டுக்கொருமுறை குரு பூசைதினமும் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுவாமியின் காலத்தில் வெளியிடப்பட்ட வெள்ளி விழா மலரைப் போன்று பொன்விழா மலரை சிவதொண்டன் நிலையம் வெளியிட்டது. யோகசுவாமிகள் தனது அன்பர்களுக்குக் கூறிய அருள் மொழிகள் புத்தகங்களில் பேணப்பட்டு வருகின்றன.

சிவதொண்டன் நிலையத்தினால் வெளியிடப்படும் இத்தகைய நூல்கள் யாவும் இந்து மதம் சார்ந்த அடியார்களுக்கு பெரிதும் கைகொடுத்து உதவுகின்றன.

குறிப்பாக வீடுகளில் இடம்பெறும் சமய விழாக்கள், கோயில்களில் இடம் பெறும் பூசைகள், பொது இடங்களில் நடைபெறும் சமய விழாக்கள் என்பவற்றுக்கு இந்த நூல்களில் உள்ள பதிகங்கள், தேவாரங்கள், நற்சிந்தனைகள் என்பன பக்தர்களுக்கு பயன்னுடையதாக அமைந்துள்ளன.

யோகசுவாமிகளின் 12 ஆவது குரு பூசைதினமான 1972 ஆம் ஆண்டில் "ஆசான் அருள்மொழிகள்" எனும் மலர் தமிழில் வெளிவந்தது. யோகசுவாமிகளின் அன்பர்கள் சுவாமியின் திருச் சரித்திரத்தை நூல்களாகவும் வெளியிட்டனர்.

"என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார் யோகசுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்" எனும் நூலை சிவ தொண்டன் நிலையம் வெளியீடு செய்தது. சுவாமி களின் மறைவுக்குப் பின்னர் உத்தம சீடராக இருந்த சாந்த சுவாமிகள் நிலையத்தைப் பொறுப் பேற்று நடத்திவந்தார்.

### சோபனா

இந்த நிலையம் மகளிர் சேவைக்காக கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்தை நிறுவியது எனினும் இதன் நடவடிக்கைகள் சற்று பின்னடைவாகவே நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் சைவ மரபுகளையும் விழுமியங்களையும் அடிப்படையாகக்கொண்டு தொண்டு வழங்கிவரும் சிவதொண்டன் நிலையம் பல்வேறு பிரதேசங்களிலும் தனக்கென தொண்டர் குழாமைக் கொண் டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இது போன்ற பாரம்பரிய பண்பாடுகளை வழங்கும் நிலையங்களின் பணிகள் என்றுமே இடைவிடாது செயற்பட வேண்டும் என்பதை அனைவரது எதிர்ப் பார்ப்பாகும்.


(முற்றும்

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சுப்பிரமணியம்
யதீஸ் (பிரபா)

திதி: 26.09.2011



மலர்வு
10.04.1985

உதிர்வு
06.10.2010

ஓராண்டு ஆனதையா பிரபா
ஓயவில்லை எம் கண்களில் விழி நீர்
சொரிந்து விம்முகின்றோம் ஐயா!
நீ டோகா சென்று உன் குடும்பத்தை
உயர்த்தி நீயும் நிமிர்ந்து நடந்து வருவாய்
என்று நினைத்தோம் நீ டோகாவில் இருந்து நீட்டி நிமிர்ந்து உறங்கி
எங்களிடம் வந்தாய் ஐயா! உன் ஆசைகள் வேறு மொழி கற்க வேண்டும் என்று
கற்றாய், சாரதி ஆகினாய், பிறருடன் சிரித்துப் பழகினாய், தொழிலைக் கற்றாய்,
நல்லவன் எனப் பேர் கேட்டாய், எல்லாமே நீ விழும் பொழுது கை கொடுக்கவில்லையே
பிரபா! உன் உயிர் பிரியும்போது என்ன வேதனைப் பட்டாயோ? - எம்
இதயம் குமுறுதடா, தாய், தந்தையை மறந்தாய், உன் சோதரர்களைப் பிரிந்தாய்,
பாசமாய் கதைக்கும் உன் மைத்துனரையும், மருமகனையும்,
உற்றார், உறவினரையும் பார்க்க மறந்து விட்டாயே நீ?
மணக்கோலம் பார்ப்போம் என எண்ணியிருந்தோம்
இள வயதில் உன் பிணக்கோலம் கண்டோம் ஐயா
எங்கள் மனம் படும்பாட்டைச் சொல்ல முடியாது
உன் பிரிவு எங்களால் தாங்க முடியவில்லை பிரபா
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உமை மறவோம்.

குடும்பத்தினர்
அம்மா, அப்பா, அக்கா,
அண்ணா, தம்பி,
தங்கை, அத்தான், மருமகன்.

ஸ்ரீ அம்பாள் வீதி, மல்வம், உடுவில்

---

## வானுயர வளர்க கல்வி

யாழ்.நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சில ஆண்டுகள் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் இவ்வாண்டு [2011] பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் இவர்களுக்கு கல்வியூட்டுவதில் அக்கறையுடன் அரும்பங்காற்றிய அதிபர், ஆசிரிய குழுமத்துக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.



செல்வி அமலதாஸ் மேரிதனிஸ்லா
புள்ளி 163



செல்வன் யூட்கிங் பிறின்ஸ்
புள்ளி 162



செல்வி மரியதாஸ் குரூஸ் பிரியதர்சினி
புள்ளி 153

இவர்களுடன்
யாழ்.நெடுந்தீவு சிக்கிரியாம்பிள்ளை
அ.த.க. வித்தியாலய
மாணவனையும்
மனதார வாழ்த்துகின்றோம்.



செல்வன் யூட் நிக்ஷன் ஒறிஸ்ஜேம்ஸ்
புள்ளி 153

**குறிப்பு:** இவர்களுக்கு நிலையான வைப்பில் ஒரு தொகைப் பணம் நெடுந்தீவு பிரதேச சபை நிகழ்வில் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் வழங்கப்படும்.

கல்வி வளர்ச்சியில் தொடர்ந்து பங்குகொள்ளும் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
நெடுந்தீவுக் கிளை, நெடுந்தீவு. 0776624121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுதந்திர ஊடகக் குரல்' அமைப்பின் உருவாக்கம் பெரிதும் வரவேற்கத்தக்கது

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தெரிவிப்பு



கொழும்பு, செப்.26

ஒரு பிரதேசத்தின் அல்லது நாட்டின் வளர்ச்சிக்கு சங்கங்கள், பொது அமைப்புகள் என்பனவற்றை உருவாக்க வேண்டும். அந்த அமைப்புகள் காலத்தின் தேவை கருதி முழுமையான செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

அந்த வகையில் ஊடகவியலாளர்களின் வளர்ச்சி அபிவிருத்திக்கும் சுதந்திர ஊடகக் குரல் எனும் அமைப்பு யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டது வர வேற்கத்தக்க விடயமாகும்.

இவ்வாறு வட இலங்கை பத்திகையாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ சங்கங்கள், பொது அமைப்புகள் என்பன மக்களின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்குமாக அரும்பாடுபட்டு உழைக்கின்றன. சில சங்கங்கள், பொது அமைப்புகள் மட்டும் வலுவிழந்து செயற்படுகின்றன. சில முற்றாக வினைத்திறனற்றுச் செயற்படுகின்றன. இந்த வகையில் புதிய பரிமாணத்தில் சகலரது ஒத்துழைப்புடன் சுதந்திர ஊடகக் குரல் அமைப்பு உருவாக்கப்பட்டதை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வரவேற்கிறது.

இந்த அமைப்பின் தலைவராக சிரேஷ்ட பத்திரிகையாளர் இரா.புத்திரசிகாமணி தெரிவு செய்யப்பட்டுள்ளார் -என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-302)



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற வாராந்த நிகழ்வில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வு இடம்பெறுகின்றது. (ச)

## மகனை அழைக்கச் சென்றவர் பலி

கொழும்பு, செப். 26

காலி வீதி பலபிட்டிய, மொஹொட்டிவத்த பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மாலை காரொன்றும் பவுசரொன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் காரில் பயணித்த பெண்ணொருவர் மரணமடைந்தது டன் அவரது கணவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

## சிறுமியின் உயிரைக் காத்த மரண தண்டனைக் கைதிகள்

கொழும்பு, செப். 26

இருதயநோயால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருக்கும் வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமி ஒருவரின் சிகிச்சைக்குத் தேவைப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மரண தண்டனைக் கைதிகள் சேகரித்து சிறுமிக்கு வழங்கியுள்ளனர். இந்தச்சிறுமியின் பரிதாபநிலை பற்றி ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சியொன்றின் மூலம் செவிமடுத்திருந்த இக் கைதிகள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மூலமாக இந்தப்பணத்தைத் திரட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவச் சிப்பாயான அந்தச் சிறுமியின் தந்தையும், தாயும் குறிப்பிட்ட வானொலி நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் பகல் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு வைத்து சேகரிக்கப்பட்ட பணம் அவர்களுக்கு வழங்கப்பட்டபோது தாய் கண்ணீர் மல்க தரையில் மண்டியிட்டு, அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். எனினும், பணம் வழங்கும் வைபவத்துக்கு செல்வதற்கு எந்தக் கைதிக்கும் வாய்ப்பளிக்கப்படவில்லை. (ச)

## பிரயோக இலத்திரனியல் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.26

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் பிரயோக இலத்திரனியல் சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கற்கை நெறிக்கு ஜி.சீ.ஈ உயர்தரத்தில்விஞ்ஞான அலகினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், இலத்திரனியலை தொழிலாக மேற்கொள்பவர்கள் மற்றும் இலத்திரனியல் துறையில் ஆர் வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

ஆறுமாத கால பயிற்சி நெறியானது சனிக்கிழமை யாழ். பிராந்தியத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்ப படிவத்தினைப் பூர்த்தி செய்து நேரிலோ, தபால் மூலமோ இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ். பிராந்தியம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ச-311)


## பிறந்ததின வாழ்த்து




அகவை எழுபத்தைந்தில் அடியெடுத்து வைக்கும்
இருபாலை, கோப்பாயைச் சேர்ந்த
திரு. வெற்றிவேலு செல்லையா குணரத்தினம் அவர்கள்

26.09.2011 இல்

பவளவிழாக் காணும் தாங்கள்
பல்லாண்டு காலம் நீடூழி வாழ
பாசத்துடன் வாழ்த்துகின்றோம்.

இவ்வண்ணம்
மகன்மார் குணரஞ்சன் (ஜேர்மனி)
ஞானரஞ்சன் (அமெரிக்கா)
மகள்மார் இரத்தினேஸ்வரி (ஜேர்மனி)
இராஜேஸ்வரி (கொழும்பு)
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
அனைத்து குடும்பத்தினரும்.

### வீடு விற்பனைக்கு

பயன்தரு மரங்கள், சுற்றுமதில் ஆகியவற்றுடன் கூடிய 1½பரப்பளவுக் காணியில் அமைந்த புதிய வீடு கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0779633993

### சிவபார்வதி ஜோதிட நிலையம்



பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044
வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.
Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

### விசேட சேவை



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவச் செல்வங்களுக்கு அவர்களின் புகைப்படம் பதித்த விருதுப் பொருள்களையோ, தங்க மெடலையோ பரிசாக வழங்கி ஊக்குவியுங்கள்.
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
இல.381, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

### வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்
செல்வன் சிவகுமார் பிருந்தன்
2011 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததைப் பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் கந்தவேள் திருவருளினால் மேன்மேலும் கல்வியில் சிறப்படைய பிரார்த்திக்கின்றோம்.
அவரின் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள், பிரத்தியேக ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

45, பேரம்பலம் வீதி,
பெரியமாவடி, சாவகச்சேரி.

அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்,
சித்திமார், தம்பிமார்.

### மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்



உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
மாணவன் வல்வெட்டித்துறையை
இருப்பிடமாகக் கொண்ட
செல்வன் யோகதுரை ரஞ்சித்குமார்
2011 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில்
155 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் கல்வியிலும் பல
துறைகளிலும் சிறந்து விளங்க வல்லை
முத்துமாரி அம்மன் அருள்வேண்டி வாழ்த்துகிறோம்.

மாதர்வளவு,
மல்லி ஓடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, தம்பி,
சின்னமாமா குடும்பத்தினர் (ஆஸ்திரேலியா),
குட்டி மாமா குடும்பத்தினர் (லண்டன்).

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் மாணவர்களும், திரு. திருமதி கோபீஸ்வரன் சறோஜா தம்பதியரின் செல்வப் புதல்வர்களுமான

(யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி)



கோ.அனுஷன்
2011 இல் 178 புள்ளி



கோ.மலரவன்
2010 இல் 153 புள்ளி



கோ.விந்தகன்
2009 இல் 171 புள்ளி

மேற்படி மூவரும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் வாழ்வு வளம்பெற மீசாலை நடராச வீரகத்தி விநாயகர் அருள் வேண்டுகின்றோம். இவர்களுக்குக் கல்வி கற்பித்து ஊக்குவிப்பு வழங்கிய பாடசாலை அதிபர், ... அன்பொளி கல்வி நிலைய ஆசிரியர்கள் திரு. வே. அன்புழகன், திரு எஸ். ... ஆசிரியர், திருமதி குமுதா இராசேந்திரனுக்கும் ஏனைய வழிகளில் ஊக்குவிப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியையும் நவில்கின்றோம்.

மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தவர், உறவினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றங்கள் புரிந்த மஹிந்த மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

### மதுரை வந்தடைந்தது தமிழர் ஆதரவு ஊர்திப் பயணம்

மதுரை, செப்.26

இலங்கை ஜனாதிபதி ராஜ பக்ஷ போர்க் குற்றங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய அரசு உடனே நிறை வேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி, கன்னியாகுமரி யில் ஆரம்பமாகிய இலங்கைத் தமிழர் ஆதரவு ஊர்திப்பயணம் நேற்று முன்தினம் மதுரையை வந்தடைந்தது.

தஞ்சை தமிழ்த்தாய் அறக் கட்டளை, தமிழக தமிழ் அமைப்புகள் ஆகியவை இணைந்து இலங்கை தமிழர் ஆதரவு ஊர் திப் பயணத்தை ஆரம்பித்துள்ளன.

இலங்கைத் தமிழர்களை படுகொலை செய்தமைக்காக, அந்த நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்து நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று தமி ழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. இந்தத் தீர்மானத்தை செயற்படுத்த, மத்திய அரசு உட னடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்பதே இந்த ஊர் திப் பயணத்தின் நோக்கமாகும்.

இவர்கள் தமது பயணத்தை கன்னியாகுமரியில் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பித்தனர். அங் கிருந்து, நாகர்கோவில், நெல்லை, கோவில்பட்டி, விருதுநகர், திரு மங்கலம் வழியாக மது ரையை வந்தனர்.

இந்த பயணக்குழுவின் தலை வராக முன்னாள் சட்ட பேரவை உறுப்பினர் கோமுகி மணியன், செயலாளராக உடையார் கோயில் குணா (தமிழ்த்தாய் அறக் கட்டளை), ஒருங்கிணைப்பா ளர்களாக பனப்பாக்கம் சீத்தா, ப.கோ. நாராயணசாமி, எசு.கே. மணி, செந்தில்தஞ்சை, புண் ணியமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் பயணம் குறித்து உடையார் கோயிலைச் சேர்ந்த குணா கூறுகையில்:

இலங்கைத் தமிழர் நலன் காக்கவும், தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்ஷ மீது போர்க் குற்றவாளி என்று குற்றம் சுமத்தி நடவடிக்கை எடுக்க வும், இலங்கை மீது பொருளா தாரத் தடை விதிக்க இந்திய அரசை வலியுறுத்தியும், கச்சத்தீவை இந்திய அரசு மீட்க வேண்டும் என்ற நோக்கத்திலும் இந்த ஊர் திப்பணத்தை ஆரம்பித்துள்ளோம்.

நாம் ஒவ்வொரு பகுதியாகச் செல்லும் போது அங்குள்ள தமிழ் ஆதரவாளர்களைச் சந் தித்து இலங்கை தமிழருக்காகப் போராட வேண்டும் என்று தெரி வித்தோம். எமது பயணம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி சென்னை யில் முடிவடைகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (வ)

# விமானியின் சாதுரியத்தால் தடுக்கப்பட்ட விமான விபத்து

### 318 பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்

சென்னை, செப்.26

சென்னையில் நேற்று முன் தினம் பெரியளவில் இடம்பெற இருந்த விமான விபத்து விமா னியின் சாமர்த்தியமான செயற் பட்டால் தவிர்க்கப்பட்டுள் ளது.

சென்னையில் இருந்து டில் லிக்குச் செல்லும் ஜெட் ஏர் வேய்ஸ் விமானம் நேற்று முன் தினம் காலை 9.15 மணி அள வில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து புறப் பட்டது.

விமானத்தில் 147 பயணிக ளும், 5 சிப்பந்திகளும் இருந்த னர். ஓடுபாதையில் விமானம் சென்று கொண்டு இருந்த போது திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டு அங்கேயே நின்றுவிட்டது. அந்த நேரம் டில்லியில் இருந்து வந்த ஏர் இந்தியா விமானத்துக்குத் தரை இறக்க அனுமதி அளிக்கப் பட் டது.

அந்த விமானத்தில் 160 பயணிகளும், 6 சிப்பந்திகளும் பயணம் செய்தனர். தரை இறங்க விமானம் முயன்ற போது ஓடு தளத்தில் மற்றொரு விமானம் நிற்பதை விமானி கவனித்து விட்டார்.

தரை இறங்கினால் மோதும் சூழ்நிலை ஏற்படும் என்பதால் உடனடியாக விமானி விமா னத்தை உயரத்தில் செலுத்தி னார். பின்னர் விமானக் கட்டுப் பாட்டு அறைக்கு தகவல் தெரி வித்தார். ஓடு தளத்தில் இன் னொரு விமானம் நிற்பதால் தரை இறக்க முடியவில்லை.

உடனடியாக அதை அப்புறப் படுத்துங்கள் என்று கூறினார். அப்போது தான் இயந்திரக் கோளாறு காரணமாக டில்லி விமானம் ஓடு தளத்தில் நிற்பதை அதிகாரிகள் கவனித் தனர்.

உடனடியாக தள்ளு வாக னம் மூலம் டில்லி விமானம் அப்புறப்படுத்தப்பட்டு புறப் பட்ட இடத்துக்கே கொண்டு வரப்பட்டது. இதன்பின் டில் லியில் இருந்து வந்த விமானம் தரை இறக்க அனுமதிக்கப் பட்டது.

25 நிமிடங்கள் தாமதத்துக்கு பின்னர் விமானம் தரை இறங் கியது. விமானியின் சாமர்த் தியமான முயற்சியால் பெரியள விலான விபத்து தவிர்க்கப் பட்டது. 318 பயணிகள் உயிர் தப்பினார்கள்.

இதனையடுத்து ஒரு தளத் தில் விமானம் நிற்கும் போது இன்னொரு விமானம் இறங்க அனுமதி அளித்தது ஏன்? இந்த தவறு நடப்பதற்கு காரணம் என்ன என்பது குறித்து விமா ன தள அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். (வ)

## காஷ்மீரிலும் நில அதிர்வு

ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தின் காஷ்மீர் பகுதியில் நில அதிர்வுகள் உணரப்பட்டது.


கடந்த சில வாரங்களாக இந் தியாவில் வடகிழக்கு, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் நில அதிர்வுகள் ஏற்பட்டு வரு வதால் மக்கள் பெரும் சிரமப் பட்டு வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 08.52 மணி யளவில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தின் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் 4.3 ரிக்டர் அளவில் நில அதிர்வுகள் உணரப் பட்டன.

## பாடகர் சௌந்தரராஜன் மருத்துவமனையில்

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் உடல் நலக்குறைவு காரணமாக சென்னை தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் திரையுலகின் பழம் பெரும் பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் கடந்த சில நாள்களாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த சௌந்தரராஜனுக்கு நேற்று முன்தினம் மாலை திடீரென கடு மையான குளிருடன் காய்ச்சல் ஏற்பட்டது. இதையடுத்து, அந்தப் பகுதியில் உள்ள தனியார் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார்.



ஒரிசாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஒரிசா முதல் வர் நவீன் பட்நாயக், ஹெலி கொப்டரில் இருந்து பார்வையிடுகிறார்

# ஒரிசாவில் வெள்ளப்பெருக்கு இதுவரை 11 பேர் உயிரிழப்பு

ஒரிசா மாநிலத்தில், நான்கு முக்கிய ஆறுகளில் வெள்ளப் பெருக்கால் 11 பேர் பலியாகினர், ஆறு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன. அங்கு மீட்புப் பணிகள் தீவிரப்படுத் தப் பட்டுள்ளன.

ஒரிசா மாநிலத்தில், கடந்த சில நாள் களாக, கனமழை பெய் கிறது. அங்குள்ள பிராமணி, பாய்டாராணி, புதாபாலாங், சுபர்ண ரேகா உள்ளிட்ட ஆறுகளில், வெள் ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஜாஜ்பூர், கியோன்ஜிகார், பாத்ராக், கேத்திர பாரா, பாலா சோர், மாயூர்பியாஜ் உள்ளிட்ட மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளன. ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக், அரச உயர் அதி காரிகளுடன் ஆலோசனை நடத்தி, மீட்புப் பணிகளை துரிதப் படுத்தியுள்ளார். தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த, 5 குழுக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இரண்டு ஹெலி கொப்டர்கள் மீட்புப் பணி யில் ஈடுபட்டுள்ளன. மேலும், நான்கு ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

# நடிகை ரம்யாவுக்கு நோட்டீஸ்



தேர்தல் நடைபெறும் இந்த நேரத்தில் செய்தி யாளர்களைச் சந்தித்துப் பேட்டி அளித்தது ஏன்?'' என்று நடிகை ரம்யா வுக்கு, விளக்கம் கேட்டு இளை ஞர் காங்கிரஸ் தேர்தல் அதி காரி நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

அதிகமாக சர்ச்சைகளில் சிக் கும் இவர், அரசியலில் குதித்து உள்ளார். இதன் முதல் கட்ட மாக கடந்த ஏப்ரல் மாதம் அவர் தன்னை இளைஞர் காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டார்.

இளைஞர் காங்கிரஸ் உறுப் பினராகத் தன்னை பதிவு செய்து கொண்ட அவர், கடந்த வாரம் நடந்த பூத் அளவிலான தேர்தலில் போட்டியிட்டு பெங் களூர் சாந்திநகர் பூத் இளைஞர் காங்கிரஸ் தலை வராக வெற்றி பெற்றார்.

இந்த நிலையில் அவர் இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவி மீது ஒரு கண் வைத்துள் ளார். தலைவர் பதவியைப் பிடிக்க வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக உள்ளார். இந்த நிலையில் சமீப காலமாக ரம்யா, பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேட்டி அளித்து வந்தார்.

இதற்கு இளைஞர் காங்கிர ஸார் இடையே கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதையொட்டி காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அதிகாரியிடம், ரம்யாவுக்கு எதிராக முறைப்பாடு கொடுக் கப் பட்டது. பத்திரிகையாளர் களுக்குப் பேட்டி கொடுக்க ரம் யாவை அனுமதிக்கக் கூடாது என்று அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

முறைப்பாடு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நடிகை ரம்யாவுக்கு, இளைஞர் காங்கிரஸ் தேர்தல் அதிகாரி நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்.

# பஞ்சாப்பில் மனித உரிமை மீறல்களில் இந்திய ராணுவத்தினர்

### விக்கிலீக்ஸ் தகவல்

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பொலிஸ் மற்றும் ராணுவத்தினரால் மேற்கொள் ளப்பட்ட பெரியளவிலான மனித உரிமை மீறல்களை விக்கி லீக்ஸ் வெளிப்படுத்தியுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட தந்தியிலே இது தொடர்பான விவரங்கள் அடங்கியிருந்ததா கவும் இந்தத்தந்தி, குல்பிர் சிங் பரபிந்த்தை அமெரிக் காவிலிருந்து இந்தியாவிடம் ஒப்படைப்பது தொடர்பிலான விடயங்களை உள்ளடக் கியிருந்ததாகவும் விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது.

குல்பிர் சிங் பரபிந்த்தை 1988 ஆம் ஆண்டு சித்திரவதை செய்த பொலிஸ் அதிகாரி யொரு வருக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டதாகக் கூறப் படும் தகவல்கள் இந்த தந்தி யில் உள்ளடக் கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலப் பொலிஸில் தற்போது மேலதிக நிர்வாகப் பணிப்பாளர் நாயக மாக விளங்கும் இஸார் ஆலம், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகராக விளங்கிய காலப் பகுதி யில், கிளர்ச்சியை அடக்குவ தற்கு ஆலம் சேனா எனப்படும் சுமார் 150 பேரைக் கொண்ட ராணுவ துணைப்படை ஒன்றை அமைத்து பஞ்சாப் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான மோதல்கள் மூலம் கொலை களைப் புரிந்ததாக அமெரிக்க தந்தியில் தெரிவிக்கப் பட்டுள் ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பன்ச் பர்தானி யின் செயலாளர் நாயகம் ஹர்பல் சிங் சீமா:

பஞ்சாப் பொலிஸால் உரு வாக்கப்பட்ட இந்தத் துணைப் படை, பஞ்சாபில் பெரியளவி லான துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டதுடன், சீக்கிய தீவிர வாதிகளையும், அவர்களது அப் பாவிக் குடும்ப அங்கத்தவர் கள், பொதுமக்களை போலி எதிர்ப்புகள் மூலம் கொலை செய்தது.

இந்தக்கொலைகளைப் புரிந்த இஸார் ஆலம், சுமேத் சாய்னி போன்றவர்களைத் தண் டிப்பதற்குப் பதிலாக பஞ்சாப் அரசு அவர்களுக்குப் பதவி உயர் வுகளை வழங்கியுள்ளதாக வும் அவர் சாடியுள்ளார். மனித உரிமைகள் அமைப்புகளும் இந்த விடயத்தில் தமது கட மைகளைச் செய்ய தவறிவிட் டதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

ஆலம் சேனாவின் சட்ட விரோதமான நடவடிக் கைகள் குறித்து விசாரணை நடத்தப் பட்டு உண்மைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டு மென கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. எதிர்வரும் பஞ்சாப் மாநிலத் தேர்தலில் இஸார் ஆலம் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடவுள்ளமை குறிப் பிடத் தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பில் இருக்கும்போது பதிவு செய்த போராளிகளுக்கு மட்டுமே உதவிகள்

## ஐ.ஓ.எம் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படும் முன்னாள் போராளிகள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் உதவிகள் வழங்கப்படுவதில்லை. தடுப்பில் இருக்கும்போது எம்மால் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஐ.நா வின் முகவர் நிலையங்களில் ஒன்றான ஐ.ஓ.எம் பிரதிநிதி ஜனகராஜ் தெரிவித்தார்.

ஐ.நா அமைப்பினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் செயலமர்வு ஞானம்ஸ் விடுதியில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புனர்வாழ்வளிக்கப்படுபவர்களை விடுதலை செய்ய உள்ளதாக எமக்கு அரசினால் அறிவுறுத்தல் தரப்பட்ட பின்னர் அவர்களை நாங்கள் நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடுவோம். அதன்போது எமது அமைப்பினால் அவர்களுக்கு ஒரு பதிவுத் துண்டு வழங்கப்படும்

இதன் பின்பு அவர்கள் தடுப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கான உதவிகளை நாம் வழங்குவோம். குறிப்பாக அவர்கள் எத்தகைய தொழிலை ஆரம்பிக்க உள்ளார்கள் என்பதன் அடிப்படையில் அதற்கான தொழில்சார் உபகரணக் கொள்வனவுக்கான உதவிகளை எமது அமைப்பு மேற்கொள்கின்றது.

இருப்பினும் எம்மிடம் பதிவு செய்யாமல் விடுதலையாகும் முன்னாள் போராளிகளுக்கு உதவிகளை வழங்க முடியாது உள்ளது. அவ்வாறு உதவிகளை வழங்கமுடியாது போனவர்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பில் இதுவரை திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை - என்றார். (த-15)



யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா நேற்றுக்காலை நடைபெற்றது.
யாழ்.மாவட்ட ஆயர் இல்ல நிதிப் பொறுப்பாளர் அன்ரனிதாஸ் அடிகள் தலைமையில் நடைபெற்ற திருவிழாக் கூட்டுத் திருப்பலியில் வைத்தியசாலை மருத்துவர்கள், தாதிகள், பணியாளர்கள், குருக்கள், நோயாளர்கள் பக்தர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றினர். ஆரோக்கிய அன்னையின் திருச்சொரூபம் நோயாளர்கள், பக்தர்கள் மத்தியில் கொண்டுவரப்பட்டு ஆரோக்கிய ஆசீர் வழங்கப்பட்டது. வைத்தியசாலை ஆலய ஆன்மகுரு பற்றிக் அடிகளார் திருவிழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (ம-135)

# 4 லட்சம் பெறுமதியான நகைகளை கண்டெடுத்து ஒப்படைத்த சிறுமி

4 லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பென்ரன் மற்றும் சங்கிலி, 7 ஆயிரம் ரூபா பணம் அடங்கிய கைப்பையொன்றைக் கண்டெடுத்த மாணவியொருவர், அதனை உரிமையாளரைத் தேடிப் பிடித்து ஒப்படைத்த சம்பவம் ஒன்று ஹிக்கடுவையில் நடந்துள்ளது.

ஹிக்கடுவ ஜயந்தி வித்தியாலயத்தில் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் டீ.எச். தருஷி சந்தரேக்கா தனது தந்தையுடன் பாடசாலை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். அந்தச் சமயம் பாதையில் விழுந்து கிடந்த இந்தப் பையை கண்டெடுத்து தனது தந்தையிடம் கொடுத்தார். அவர் அருகில் இருந்த நம்பிக்கை யான கடையொன்றில் அந்தப் பையைக் கொடுத்து உரிமையாளரைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டார். (எ-)

# அரச ஊழியரின் ஓய்வூதிய கொடுப்பனவில் மோசடி

## ஓய்வூதியத் திணைக்களம் தகவல்

கொழும்பு, செப்.26

அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவின் போது வருடாந்தம் பத்துக்கோடி ரூபா வரையிலானதொகை மோசடி செய்யப்படுவதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியம் பெற்று வந்த ஒருவர் மரணமடைந்தால், அது குறித்து அறிவிக்கத்தவறுதல், கூட்டுக்கணக்கொன்றை வங்கியில் பேணுதல், உயிர் வாழ்தல் குறித்த பிரகடனத்தை வருடாந்தம் அனுப்பிவைக்கத் தவறுதல், வசிப்பிட முகவரியில் அடிக்கடி மாற்றம் செய்தல் மூலம் இரு இடங்களிலிருந்தும் ஓய்வூதியம் பெறுதல் உட்பட வேறு பல தவறான செயற்பாடுகள் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவில் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மோசடிகளுக்கு பிரதேச செயலர் அலுவலகங்களில் ஓய்வூதியக் கிளைகளில் பேணப்படும் கணினித் தொழில்நுட்பக் கணக்கீடுகளில் உருவாகும் கோளாறுகளும் காரணமாக அமைகிறது.

இத்தகைய வழிகளில் மோசடி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்விதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மேலதிகத் தொகையைச் சம்பந்தப்பட்டோரிடம் இருந்து அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது அரசசேவையிலிருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெற்று வருவோர் தொகை 4 லட்சத்து 86 ஆயிரம் எனவும், அவர்களுக்கான ஓய்வூதியக்கொடுப்பனவுக்கென வருடாந்தம் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாவை அரசு செலவிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஓராண்டு நினைவுகள்

மலர்வு 14 03 1955 — உதிர்வு 06 10 2010



அமரர்

**குமாரசாமி நவரத்தினம்**

(சிற்பக் கலாமணி)


பண்பின் உறைவிடமாய் பாசத்தில் நிறைகுடமாய்
பரிவுடனே தொழில் புகட்டி பாரினிலே உயர வைத்தீர்
அன்பின் திருவுருவே ஆண்டு ஒன்று சென்றிடினும்
"ஆசானே" நீர் எமக்கு அணையாத தீபம் தான்

அராலி தெற்கு,
அராலி.

உங்கள்
தொழிலாளர்கள்.

## கண்ணீர்க் காணிக்கை

அருட்பணி அ.பிரான்சிஸ் சூலாஸ் (அ.ம.தி)



வங்கத் திருமகனாய் அவதரித்து
அமலமரித் தியாகியாய் மிளிர்ந்து
பணிக் குருவாய் மலர்ந்து
இளமைத் துடிப்புடன் பணியாற்றி
இசையில் மறைப்பொலிவு கண்டு
உரமாய் பக்தி தந்தாய்
பணியில் உயர்வு கண்டு
மறவாது உறவுகள் பேணி
மணிவிழா நாயகனாய் பவனிவர
இறையவன் குரல் கேட்டு
புகழ்பாட விண்ணகம் சென்றாய்
உளத்தில் நினைவை சுமக்கின்றோம்

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்,
தூய செபமாலை அன்னை ஆலயம், உடுவில்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறந்தது:
19.12.1940

இறந்தது:
26.09.2007

திருமதி **வனஜலோஜினி வேலாயுதபிள்ளை** (பவா)

திதி:
புரட்டாதி மாத
பூரணை

அம்மா! அம்மம்மா!
நீங்கள் மறைந்து
ஆண்டு நான்கு ஆனாலும்
அழியாது உங்கள் பாசம்
ஆழ் மனதில் குடியிருந்து
அரவணைத்துக் காத்திடுங்கள்

"திருவதிகை",
அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு மகளும்
ஆசைப் பேரன்களும்.

ONE YEAR DIPLOMA
MULTIMEDIA



Coreldraw, R.A.V.E
Photoshop, Morph
Flash, Sound Forge
Premiere, Combustion
3D Studio Max
Charactor Studio
Director, Project.

CSC-ASIAN
COMPUTER EDUCATION

யாழ்.நகர் - 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடனான உறவு: விவாதம் நடத்த பாக். முடிவு

இஸ்லாமாபாத், செப். 26

அமெரிக்காவுடனான உறவு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க பாகிஸ்தான் முடிவெடுத்துள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த அல்-குவைதா தீவிரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்கப் படைகள் கடந்த மே மாதம் சுட்டுக்கொன்றனர்.

தங்களுக்குத் தெரிவிக்காமல் தங்கள் மண்ணில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கக்கூடாது எனப் பாகிஸ்தான் கருத்துத் தெரிவித்தது. ஒசாமாவை பாதுகாப்புடன் தங்க வைத்திருந்தது எனப் பாகிஸ்தான் மீது அமெரிக்கா குற்றம் சாட்டியது.

ஹக்கானி தீவிரவாதிகளுடனான உறவைப் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ துண்டித்துக் கொள்ளவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்க இராணுவ உயரதிகாரி மைக் முல்லனின் இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என பாகிஸ்தானின் இராணுவத் தளபதி கயானி கடந்த வெள்ளிக்கிழமை பதிலளித்திருந்தார்.

பிரதமரின் யூசுப் ரஸா கிலானியின் அறிவுரைப்படி, அமெரிக்காவுடனான உறவு குறித்து விவாதிக்க நாடாளுமன்றக் கூட்டம் ஒக்ரோபர் 3ஆம் திகதி ஆரம்பமாகும் எனப் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு, இப்போதைய சூழ்நிலை ஆகியவை குறித்துத் தான் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார் எனச் சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் கூறியிருந்தார்.

ஹக்கானி பயங்கரவாத அமைப்புடனான உறவைத் துண்டித்துக்கொள்ளாவிட்டால், பயங்கர விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த கிலானி, ''பாகிஸ்தானின் பாதுகாப்பு வலுவாக உள்ளது'' என்றார்.

நாட்டின் எல்லையை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் திறன் அதற்கு உள்ளது என்றும், மக்களின் ஆதரவுடன் அவற்றை முறியடிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் 20 இந்திய மீனவர்கள் கைது

இஸ்லாமாபாத், செப். 26

பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என இந்திய மீனவர்கள் 20 பேரை பாகிஸ்தான் அதிகாரிகள் சனிக்கிழமை கைதுசெய்தனர். பாகிஸ்தான் கடலோரப் பாதுகாப்பு நிறுவனத்தினரால் கைதுசெய்யப்பட்ட, அவர்கள் பின்னர் கராச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்களின் நான்கு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவதுதொடர்ந்து நடந்து வருகிறது.

அதேபோல், இந்திய பகுதிக்குள் நுழையும் பாகிஸ்தான் மீனவர்களும் கைதுசெய்யப்படுவர். இப்படி ஒவ்வொரு ஆண்டும் இரு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். இப்படிக் கைதுசெய்யப்பட்டுத் தண்டனைக் காலம் முடிந்த மீனவர்களை விடுவிக்க, சமீப மாதங்களில் இந்திய - பாகிஸ்தான் அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வட கொரியாவைக் கண்காணிக்க ஜப்பான் உளவு செயற்கைக் கோள்

டோக்கியோ, செப். 26

வடகொரியாவின் ஏவுகணைகள், அணுஆயுதங்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக ஜப்பான், உளவு செயற்கைக் கோள் ஒன்றை விண்ணில் ஏவியுள்ளது.

வடகொரியா மீதான தென் கொரியா மற்றும் ஜப்பானின் சந்தேகம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிஹிக்கோ நோடோ பதவியேற்றவுடன், இருதரப்பு உறவுகளைச் சீர்படுத்த முயலும்படி வடகொரியா கோரிக்கை விடுத்தது. அதை ஜப்பான் கண்டுகொள்ளவில்லை.

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி மீதான அமெரிக்க, ஜப்பானின் சந்தேகம் இன்னும் தீரவில்லை. கடந்த 22ஆம் திகதி ஜப்பானின் ககோஷிமா மாகாணத்திலுள்ள டனேகஷிமா விண்வெளி மையத்திலிருந்து, எச் - 2ஏ என்ற உளவு செயற்க்கைக்கோள் ஏவப்பட்டது.

மொத்தம், 470 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்ட இந்தச் செயற்கைக்கோள், ஓகஸ்ட் 28ஆம் திகதியே விண்ணில் ஏவப்படுவதாக இருந்தது.

சூறாவளித் தாக்குதல் இருந்ததால், மூன்று தடவைகள் ஏவும் திட்டம் தள்ளிவைக்கப்பட்டு இறுதியில் கடந்த வாரம் ஏவப்பட்டுள்ளது. வடகொரியாவின் ஏவுகணைகள், அணு ஆயுதங்கள் ஆகியவை இருக்கும் இடங்களை இந்தச் செயற்கைக் கோள் கண்காணிக்கும்.

# தந்தை நலமுடன் இருக்கிறார் கடாபியின் புதல்வி தகவல்

நிகோசியா (சைப்ரஸ்), செப். 26

புரட்சியாளர்களால் விரட்டப்பட்ட லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபி நலமுடன் இருக்கிறார் என அவரது புதல்வி ஆயிஷா கடாபி தெரிவித்துள்ளார்.

லிபியாவின் ஜனாதிபதியாக பல ஆண்டுகாலம் ஆட்சி செய்தவர் கடாபி. கடந்த சில மாதங்களாக கடாபிக்கு எதிராக அந்தப் புரட்சியாளர்கள் கிளர்ச்சி செய்தனர். அரசுக்கு எதிராக நடந்த புரட்சியில், கிளர்ச்சியாளர்கள் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றினர்.

இதையடுத்து நாட்டிலிருந்து தலைமறைவானார் கடாபி. இப்போது அங்கு புதிய அரசு அமைந்துள்ளது. கடாபி இப்போது எங்கு மறைந்து வாழ்கிறார் என்பது மர்மமாகவே உள்ளது. தந்தை கடாபி நலமுடன் இருக்கிறார் என அவரது புதல்வி ஆயிஷா தெரிவித்துள்ளார்.

சிரியாவைச் சேர்ந்த அராய் என்னும் தொலைக்காட்சி நிறுவனத்துக்குத் தொலைபேசியில் வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்ட ஆயிஷா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவரது தொலைபேசிக் குரலை அராய் தொலைக்காட்சி நிறுவனம் தொடர்ந்து ஒளிபரப்பி வருகிறது.

தொலைபேசிச் செய்தியில் ஆயிஷா கூறியுள்ளவை வருமாறு;

மும்மர் கடாபி போன்ற தலைவரைப் பெறுவதற்கு லிபிய மக்கள் பெருமைப்பட வேண்டும். தந்தை நலமுடன் இருக்கிறார். அவர் புரட்சியாளர்களுக்கு எதிராகப் போராடி வருகிறார்.

கடாபிக்கு எதிராகப் புரட்சி செய்த தலைவர்களை மக்கள் விரட்டியடிக்க வேண்டும். அவர்களுக்கு எதிராகப் பொங்கியெழுந்து அவர்களை நசுக்க வேண்டும். புதிதாக ஆட்சியில் அமர்ந்துள்ளவர்கள் தேசத் துரோகிகள் என்றார் அவர்.

லிபியாவில் புரட்சியாளர்கள் முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் ஆயிஷா கடாபி தனது தாய் சபியா, 2 சகோதரர்கள் முகமது, ஹனிபால் ஆகியோருடன் அல்ஜீரியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். மனிதநேயத்துடன் அவர்களுக்கு அல்ஜீரியா நாடு அடைக்கலம் தந்துள்ளது.

# பாகிஸ்தானில் தீவிரவாதி கைது

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் லஷ்கர்-இ-ஜங்வி பயங்கரவாத அமைப்பின் முக்கிய தளபதி குலாம் ரசூல் ஷா பாகிஸ்தான் அரசால் கைதுசெய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

பஞ்சாப் மாகாணத்தில் இன ரீதியான மோதலைத் தவிர்க்கும் பொருட்டு லஷ்கர்-இ-ஜங்வி அமைப்பின் முக்கிய தளபதியான ரசூல் கைதுசெய்யப்பட்டார் என அரசு தெரிவித்துள்ளது. அவர் 30 நாள்கள் சிறையில் அடைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாள விமான விபத்தில் சுற்றுலாப் பயணிகளுடன் 19 பேர் பலி!

நேபாளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ந்த விமான விபத்தில் 19 பேர் பலியாயினர். இவர்களில் 16 பேர் உல்லாசப் பயணிகள் என அதிகாரிகள் தெரிவித்தார்கள் புத்தா விமானசேவையைச் சேர்ந்த இவ்விமானத்தில் இவர்கள் எவரெஸ்ட் மலைச் சிகரத்தையும், இதர சிகரங்களையும் பார்வையிட்டுவிட்டு நேபாள தலைநகரை நோக்கிக் கிளம்பினர்.

அச்சமயம், இவர்கள் பயணித்த இவ்விமானம் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்து, கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படும்போது வழியில் உயிரிழந்துள்ளார்.

சுற்றுலாத்துறைச் செயலாளர் கணேஷ்ராஜ் ஜோசி இது குறித்து பி.பி.சிக்குத் தெரிவிக்கையில், மரணித்துள்ள சுற்றுலாப் பயணிகளில் 10 பேர் இந்தியர், இருவர் அமெரிக்கர்கள், ஒருவர் ஜப்பானியர் எனக் குறிப்பிட்டார். இவர்களுடன் ஆறு நேப்பாளியர்களும், மூன்று விமானிகளும் பலியாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

விமான விபத்து நிகழ்ந்த சமயத்தில், எங்கும் மூடுபனி மயமாக இருந்தது. தலைநகரான காத்மண்டுவிலிருந்து அநேக கிலோ மீற்றருக்கப்பாலுள்ள கோதாவரி பிராந்தியத்தில் இவ் விபத்து சம்பவித்துள்ளது என உள்ளூர் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அமெரிக்காவின் செயலிழந்த செயற்கைக் கோள் கனடாவில் விழுந்தது

## உயிர்ச் சேதம் எதுவும் இல்லை

கேப் கானவரால், செப். 26

அமெரிக்காவின் செயலிழந்த செயற்கைக் கோள் கனடாவில் விழுந்தது. இதில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாநிலம் கேப் கானவரால் நகரிலிருந்து 1991ஆம் ஆண்டு 6 தொன் எடை உள்ள செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. இது, காற்று மண்டலத்தை ஆராயவும், புவியியல் ஆய்வுக்காகவும் அனுப்பப்பட்டது.

இந்தச் செயற்கைக்கோள் தனது 14 ஆண்டு பணிக் காலத்தை கடந்த 2005 ஆம் ஆண்டு முடித்து விட்டது. அதன் பின்னர் அது விண்வெளியில் செயலற்ற நிலையிலிருந்து வந்தது.

இலங்கை நேரப்படி சனிக்கிழமை காலை 8.53 மணிக்கு செயற்கைக்கோள், காற்று மண்டலத்துக்குள் நுழைந்தது. அப்போது ஏற்பட்ட கடுமையான வெப்பத்தால், அந்த செயற்கைக் கோளின் பெரும் பகுதி எரிந்து போய்விட்டது.

எஞ்சிய சுமார் 500 கிலோ அளவிலான பகுதியின் சிதறல்கள் மட்டும், கனடாவின் மேற்குப் பகுதியிலுள்ள கல்காரி நகரையொட்டிய ஒகோடோக்ஸ் என்ற இடத்தில் பரவலாக விழுந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதன் சிதறல்கள் ஆபிரிக்கா, பசிபிக், அட்லாண்டிக், இந்தியப் பெருங்கடல் பகுதிகளிலும் விழுந்தன என விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்தச் செயற்கைக்கோள் தரையில் விழுந்ததில், மனிதர்கள் எவருக்கும் உயிர் இழப்போ, காயமோ ஏற்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை.

ஏற்கனவே 1979ஆம் ஆண்டு 75 தொன் எடை கொண்ட அமெரிக்க செயற்கைக்கோள் ஒன்று தரையில் விழுந்தது. இந்தச் சம்பவத்திலும் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

அதன் பின்னர் 2001ஆம் ஆண்டு 135 தொன் எடை கொண்ட ரஷ்ய செயற்கைக் கோள் ஒன்றும் பூமியில் விழுந்தது. இதிலும் உயிர்ச்சேதம் இல்லை.

இப்போது விண்ணில் ஏவப்படும் செயற்கைக் கோள்களில், அவை தனது பணி காலத்தை முடித்த பின்னர் தரையில் விழும்போது, அதை விஞ்ஞானிகள் கட்டுப்படுத்தும் கருவிகளும் இணைக்கப்பட்டு இருக்கின்றன.

ஆனால், கனடாவில் விழுந்த விமானத்தில் இந்தக் கட்டுப்பாடு கருவிகள் இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 5 வாரங்களில் விழும்; பூமியை நோக்கி வரும் மற்றொரு செயற்கைக் கோள்

வாஷிங்டன், செப். 26

பூமியை நோக்கி வரும் மற்றொரு செயற்கைக் கோள் இன்னும் 5 வாரங்களில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மீண்டும் செயலிழந்த மற்றொரு செயற்கைக்கோள் பூமியை நோக்கி வருகிறது. அது ஜேர்மனியால் விண்ணில் அனுப்பப்பட்டது.

ரொசாத் என அழைக்கப்படும் இந்தச் செயற்கைக்கோள் கடந்த 1999ஆம் ஆண்டிலேயே செயலிழந்துவிட்டது. கடந்த 12 ஆண்டுகளாக இது விண்ணிலிருந்து படிப்படியாக நகர்ந்து பூமியை நோக்கி வருகிறது. 2 முதல் 4 தொன் எடையுள்ள அந்தச் செயற்கைக்கோள் பூமியை நெருங்கி விட்டது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, அது இன்னும் 5 வாரங்களில் பூமியில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது. பூமியை நெருங்கும்போது தூள் தூளாக நொறுங்கி வெப்பத்தில் எரிந்து முழுவதும் சாம்பலாகிவிடும். ஆகவே, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நிறுவன அனுசரணையுடன் நடைபெற்ற

# பளு, வலு தூக்கும் போட்டிக்கான விருது யாழ்.சென்றல் மாணவன் விதனுக்கு



யாழ்ப்பாணம், செப்.26

'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை மூன்றாவது வருடமாக யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய பளு, வலு தூக்கும் போட்டியின் பரிசளிப்பு வைபவம் நேற்று யாழ்.பல்கலைக்கழக மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகின் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்றது.

பளு, வலு தூக்கும் போட்டிகளில் சிறந்த வீரன், பலம் கொண்ட சிறந்த வீரன் ஆகியவற்றுக்கான விருதுகளை யாழ்.மத்திய கல்லூரி மாணவன் அமிர்தலிங்கம் விதன் பெற்றுக் கொண்டார்.

சிறந்த கழகத்துக்குரிய வெற்றிக் கிண்ணத்தை மலாயன் சாண்டோ நடராஜா உடற் பயிற்சிக் கழகம் பெற்றுக்கொண்டது.

பிரதம விருந்தினராக உதயன் நிறுவனத்தின் பொது முகாமையாளர் கே.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் பளுதூக்கு அணியின் முன்னாள் தலைவரும் கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபருமான கே.எழிலழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-23)

# கிளி.சிவநகர் பாடசாலை மாணவிகள் தேசிய மட்ட காலிறுதிக்குத் தகுதி

இன்று பதுளையில் பொல்காவெல அணியுடன் மோதல்

கிளிநொச்சி, செப்.26

உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலை மட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில், கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டி காலிறுதிவரை கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை முன்னேறியுள்ளது.

தேசிய மட்டக் காலிறுதிப் போட்டியில் சிலாபம் மகளிர் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் களுத்துறை மத்திய மகளிர் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கிலும் கம்பஹா உயர்தர மகளிர் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றியீட்டி கிளிநொச்சி, சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்னேறியுள்ளது.

இதேவேளை பதுளை, வின்சன்ட் டயஸ் மைதானத்தில் இன்று இடம்பெறும் காலிறுதிப் போட்டியில் பொல்காவெல மகளிர் கல்லூரியை எதிர்த்து விளையாடவுள்ளது. (ஒ-323)

# பிறிமியர் லீக் உதைபந்தாட்டத்தில் ஏறாவூர் யங்ஸ்ரார் வெற்றி பெற்றது

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பிரிவு III ற்கான ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இந்த ஆட்டத்தில் ஏறாவூர் யங்ஸ்டார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

மேற்படி ஆட்டத்தில் ஏறாவூர் யங்ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஏறாவூர் யங்ஸ்டார் விளையாட்டுக் கழக அணி 7:2 என்ற கோல் கணக்கில் வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (எ-23)

# ஆறு பேர் பங்குபற்றிய கிரிக்கெட்டில் சென். பற்றிக்ஸ் அணி சம்பியன்



நீர்கொழும்பு மரியஸ்ரெலா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆறுபேர் பங்கு கொள்ளும் ஐந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு சென். பெனடிற் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டினை இழந்து 56 ஓட்டங்களை சென்.பெனடிற் கல்லூரி அணி பெற்றது.

57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 4 ஓவர்கள் நிறைவில் 57 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் கடைசி ஓவரில் 2 பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் 5 ஆவது பந்தில் நோபட் 6 ஓட்டங்களைப் பெற்றார்.

சுற்றுப்போட்டித் தொடரில் ஆட்ட நாயகனாக வந்த சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் கிளிங்ரன் 6 விக்கெட்டுகள் எடுத்தும் 136 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத் தொடர் நாயகன் விருதினை பெற்றுள்ளார்.

இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரன் நோபட் ஆட்டம் இழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட நாயகனுக்கான விருதைப் பெற்றார். (எ-23)

# செல்ரனின் அதிரடியால் காலிறுதிக்குள் நுழைந்தது யாழ்.பல்கலை அணி

யாழ்ப்பாணம், செப்.26

செல்ரனின் ஓட்டக்குவிப்பு மூலம் அரை இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது யாழ்.பல்கலைக்கழக அணி. கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தின் வெற்றி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெறும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை இடம் பெற்றது.

இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய்பரீஸ் விளையாட்டுக்கழக அணி 30 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டினை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிதர்சன் 67 ஓட்டங்களையும் வினோத் 64 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் யாழ். பல்கலைக்கழக அணி சார்பாக நிசாந்தன் 6 ஓவர்கள் பந்துவீசி 53 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும், ஜெயறூபன் 6 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 29.3 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டினை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் செல்ரன் பத்து ஆறு ஓட்டம்,ஏழு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டம் இழக்காமல் 99 ஓட்டங்களையும் , பிரணவன் 31 ஓட்டங்களையும் லவன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக வினோத் 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், திலக் 3 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் ஜெயரூபன் 6 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

யாழ்.பல்கலைகழக அணி 2 விக்கெட்டினால் வெற்றி பெற்றது. (எ-23)

# ஹொக்கியில் அதிக கோல்களை போட்டது எமது கல்லூரி என்பதில் மகிழ்வடைகிறேன்

## உடுவில் மகளிர் கல்லூரி அதிபர்



யாழ்ப்பாணம், செப்.26

நாரம்பிட்டிய சாலிகா மைதானத்தில் நடைபெற்ற பெண்கள் ஹொக்கிப் போட்டியில் கொழும்பு விகாரமாதேவி பெண்கள் பாடசாலையை எதிர்த்தாடிய உடுவில் மகளிர் அணி 5.0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

2011 ஆம் ஆண்டிற்கான பெண்கள் தேசிய மட்ட ஹொக்கிப் போட்டியில் அதிக கோல்களை போட்ட அணி உடுவில் மகளிர் கல்லூரி என்ற பெருமையை பெற்றது என உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ் தெரிவித்தார்.

இந்தப்போட்டி தொடர்பாக அதிபர் மேலும் தெரிவிக்கையில் ஹொக்கி பெண்கள் போட்டியில் நடைபெற்ற காலிறுதி போட்டியில் மய மாயா யசோதர பெண்கள் பாடசாலையுடன் மோதிய உடுவில் மகளிர் கல்லூரி நிதானமாக விளையாடிய போதும் 3.0 என்ற கோல் வித்தியாசத்தில் எமது கல்லூரி தோல்வி அடைந்தது.

எனினும் எமது மாணவிகளின் செயல், ஊக்கமான விளையாட்டினை மதிக்கின்றேன்-என்றார். (302)

பருத்தித்துறை ஐக்கியம் வெற்றி

# பருத்தித்துறை ஐக்கியம் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.26

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து, உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (த-23)

அமரர் ஜீ.டபிள்யூ பிரபாகரன் ஞாபகார்த்த

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு யங்ஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம், செப்.26

மட்டக்களப்பு மாவட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட உதை பந்தாட்ட சங்க நிர்வாக செயலாளர் அமரர் ஜீ.டபிள்யூ.பிரபாகரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் மட்டக்களப்பு யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் மட்டக்களப்பு யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புனித இக்னேஷியஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் யங்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வென்றது வாரியர்ஸ்

வாரியர்ஸ் மற்றும் சவுத் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் வாரியர்ஸ் அணி 50 ஓட்டங்களால் வெற்றி கொண்டுள்ளது. வாரியர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிமட்ஸின் சிறப்பான அரைச்சதத்தின் உதவியுடன் சம்பியன் லீக் தொடரில் இரண்டாவது வெற்றியை அந்த அணி பதித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணிக்கும், ஆஸ்திரேலியாவின் சவுத் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான சம்பியன் லீக் ஆட்டம் ஹைதராபாத்தில் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வாரியர்ஸ் அணித்தலைவர் போத்தா முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சிமட்ஸ் - பிறின்ஸ் களமிறங்கினர். முதலாவது ஆட்டத்தில் கலக்கிய பிறின்ஸ் நேற்றைய ஆட்டத்தில் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த இங்கிராம், சிமட்ஸுடன் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். அமைதியாய் சென்று கொண்டிருந்த ஆட்டம் இந்த ஜோடியின் இணைப்புடன் சூடு பிடித்தது. 29 பந்துகளில் அணி 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. 10 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்த பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்து வீச்சிலேயே இங்கிராம் 24 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சிமட்ஸ் 40 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இங்கிராமின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களமிறங்கிய பௌச்சர் முதலாவது ஆட்டத்தில் சாதிக்கத் தவறியதை நேற்று நிறைவேற்றினார். இருவரும் இணைந்து அதிரடியாய் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். அணி 163 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறப்பாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிமட்ஸ் ஆட்டமிழந்தார். 65 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் அடங்கலாக 88 ஓட்டங்களைக் குவித்த நிலையில் டானியல் ஹரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இருபதாவது பந்து பரிமாற்றத்தை வீசிய கிறிஸ்ரெய்ன் இறுதி இரு பந்துகளிலும் இரு இலக்குகளை சரித்தார். பௌச்சர் 26 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்களில் வாரியர்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் டானியல் ஹரிஸ், டானியல் கிறிஸ்ரெய்ன் தலா 2 இலக்குகளைச் சரித்தனர்.

பதிலுக்கு மிகக் கடினமான இலக்கை சவுத் ஆஸ்திரேலிய அணி விரட்டத் தொடங்கியது. டானியல் ஹரிஸ், அணித்தலைவர் மைக்கல் கிளிங்கர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே சவுத் ஆஸ்திரேலியாவின் முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. 4 ஓட்டங்களுடன் ரொஸ் ரோபேயின் பந்து வீச்சில் டானியல் ஹரிஸ் ஆட்டமிழந்தார். ஒரு முனையில் கிளிங்கர் தனித்து நின்று துடுப்பெடுத்தாடினாலும் மறு முனையில் தொடர்ச்சியாக இலக்குகள் வீழ்ந்தன.


ரொம் கூப்பர் 3, பேர்க்குசன் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். பின்னர் இணைந்த கம்ரான் பொர்கஸ் அணித் தலைவருடன் இணைந்து சிறிது நேரம் நம்பிக்கையளிக்கும் விதமாய் துடுப்பெடுத்தாடினர். அணி 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நான்காவது இலக்கு வீழ்த்தப்பட்டது. கிளிங்கர் 29 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாய் 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பொர்கஸ் 13 பந்துகளில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரியுடன் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளிறேினார். 10.3 பந்து பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

இதன் பின்னர் இணைந்த டானியல் கிறிஸ்ரெய்ன், ரிம் லூட் மன் அடக்கமாக துடுப்பெடுத்தாடினர். அதிரடிகள் இல்லாது அடக்கமாய் நகர்ந்தது இவர்களது ஆட்டம். 37 ஓட்டங்களை ஆறாவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் லூட் மன்னின் இலக்கு சரிக்கப்பட்டது. 19 பந்துகளில் 14 ஓட்டங்களுடன் லூட் மன் ஆட்டமிழந்தார். இறுதியில் 6 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களை மட்டும் சவுத் ஆஸ்திரேலிய அணி பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. கிறிஸ்ரெய்ன் 28 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ரொஸ்ரோபே 2 இலக்குகளைச் சரித்தார். ஆட்டநாயகனாக அரைச்சதம் கடந்த வாரியர்ஸின் சிமட்ஸ் தெரிவானார். (15)

# இலங்கை அணிக்குப் புதிய பயிற்சியாளர்

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக ஆஸ்திரேலியாவின் ஜெப் மார்ஷ் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ஜெப் மார்ஷ் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றியதோடு ஆஸ்திரேலிய அணியின் தற்போதைய வீரர் ஜோன் மார்ஷின் தந்தை என்பதும் குறிப்படத்தக்கது. (15)



# பெண்களின் ஆட்டம் தொடரும்

ஐ.பி.எல். தொடரில் நடன பெண்களின் உற்சாக ஆட்டம் தொடரும். நள்ளிரவு ''பார்ட்டிக்கு'' அனுமதி மறுக்கப்படும் - இவ்வாறு புதிய தலைவர் ராஜிவ் சுக்லா தெரிவித்துள்ளார். இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் ஆண்டுதோறும் உள்ளூர் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகின்றது. இந்தப் போட்டிகளின் போது கவர்ச்சி உடையில் களமிறங்கும் நடன மங்கைகள் உற்சாகமாக ஆடி ரசிகர்களைக் கிறங்கடிப்பர். போட்டிகள் முடிந்த பின்னர் நள்ளிரவில் நடக்கும் 'பார்ட்டிகளில்' வீரர்கள் உட்பட பல வி.ஐ.பிக்கள் கலந்து கொள்வர். அதிகாலை வரை 'பார்ட்டிகள்' நடைபெறுவதால் வீரர்கள் சோர்வடைந்து விடுவதாகப் புகார் எழுந்தது.

இது குறித்து ஐ.பி.எல். அமைப்பின் புதிய தலைவர் ராஜிவ் சுக்லா கூறியதாவது:

வெளிநாட்டு நடனப் பெண்களின் ஆட்டம் இடம் பெற வேண்டும் என்பது அணிகளின் உரிமையாளர்கள் விருப்பம். உள்ளூர் நடன கலைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க சில அணிகள் முடிவு செய்துள்ளன. இதற்கு அனுமதி அளிக்கப்படும். அதே நேரத்தில் நள்ளிரவை கடந்து நீடிக்கும் 'பார்ட்டிகளை' எதிர்க்கிறோம். இது வீரர்களைச் சோர்வடையச் செய்கிறது. இதனால் போட்டிகளில் முழுக் கவனம் செலுத்த முடிவதில்லை. வீரர்களுக்கு போதிய ஓய்வு கொடுக்க வேண்டியது ஒவ்வொரு அணி உரிமையாளர்களின் கடமை.

ஐ.பி.எல். தொடரால்தான் வீரர்களுக்கு காயம் ஏற்படுகிறது என்று வீணாகப் பழி சுமத்துகின்றனர். சோர்வாக இருந்தாலோ அல்லது காயம் அடைந்திருந்தாலோ சம்பந்தப்பட்ட வீரர்கள் பி.சி.சி.ஐ.யிடம் தொடர்பு கொண்டு போட்டிகளில் இருந்து விலகிக் கொள்ளலாம். ஒவ்வொரு தொடரிலும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை. உடல் நிலை ஒத்துழைக்காத பட்சத்தில் வீரர்கள் தாராளமாக ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். வீரர்களின் காயம் தொடர்பாக சிறப்பு கவனம் செலுத்தும்படி ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளோம் - என்றார். (15)

# வென்றது ஷோம செட்

ஷோம செட் அணி, கொல்கத்தா அணியை நேற்றைய தினம் 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. மேர்வினின் சிறப்பான அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் நேற்றையதினம் இந்த வெற்றியைப் பதிவு செய்தது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும், இங்கிலாந்தின் ஷோம செட் அணிக்குமிடையிலான சம்பியன் லீக் ஆட்டம் ஹைதராபாத்தில் நேற்று இரவு 8 மணிக்கு நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

பஸ்லா, கலிஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங் கினர். முதலாவது பந்து பரிமாற்றத்தை அணித் தலைவர் தோமஸ் வீசி னார். முதலிரண்டு பந்துகளிலேயே பஸ்லா அதிரடியாக பவுண்டரி விளாசி கொல்கத்தாவின் கணக்கைத் தொடக்கி வைத்தார். இரண்டாவது பந்து பரிமாற்றத்தை முரளி கார்த்திக் வீச அதிரடியாய் சிக்ஸர் அடித்து தொடர்ந்தும் தனது திறமையை பஸ்லா நிரூபித்தார். இந்த அதிரடி ஆரம்பம் 3 ஆவது பந்து பரிமாற்றத்துடன் முடிவுக்கு வந்தது. லூயிஸ் கிரேக்ரி வீசிய பந்து வீச்சில் 12 பந்துகளில் 17 ஓட்டங்களுடன் பஸ்லா ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் கம்பீர் முதலாவது பந்திலேயே அதே பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். திவாரி, கலிஸ் ஜோடி தொடர்ந்து ஆட்டத்தை முன்னெடுத்தது.

ஒரு ஓட்டம், இரண்டு ஓட்டம் என்று அணி அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்காமல் இலக்கு காப்பில் ஈடுபட்டனர். கொல்கத்தா 49 பந்துகளில் தனது அரைச்சதத்தை எட்டியது. 3 ஆவது இலக்குகாக 50 ஓட்டங்கள் இணைப்பாட்டமாய் பகிரப்பட்ட நிலையில் திவாரி 26 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 12.1 பந்து பரிமாற்றங்களில் 71 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து கொல்கத்தா தடுமாறியது.

இதன் பின்னர் இணைந்த யூசுப் பதான், கலிஸ் ஜோடி ஷோம செட் அணிக்கு எமனானது. ஆட்டத்தின் 14 ஆவது பந்து பரி மாற்றத்தை டொக்ரெல் வீச அந்த ஓவரில் ஆறுதலுக்கு ஒரு சிக்ஸர் விளாசி அரங்கை அதிர வைக்கத் தொடங்கினார் கலிஸ். அடுத்த 15 ஆவது பந்து பரிமாற்றத்தை அருள் சுப்பையா வீசினார். எதிர் கொண்டார் யூசுப். தொடங்கியது அதிரடி முழக்கம். தொடர்ச்சியாய் நான்கு இமாலய சிக்ஸர்கள் எல்லைக் கோட்டை தாண்டி ரசிகர்களின் அரங்குக்கு சென்றது. இது போதாதென்று இறுதிப் பந்தில் அகலப் பந்துடன் இலவச பவுண்டரியையும் கொல்கத்தாவுக்கு வழங்கினார் அருள் சுப்பையா. 15 ஆவது பந்து பரிமாற்றத்தில் மட்டும் 30 ஓட்டங்களை கொல்கத்தா அணி பெற்றுக் கொண்டது. அடுத்த பந்து பரிமாற்றத்தை மீண்டும் டொக்ரெல் வீச இறுதிப் பந்தில் அதிரடியாய் சிக்ஸர் அடித்து கலிஸ் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். அத்துடன் 22 பந்துகளில் இவர்களது இணைப்பாட்டம் 50 ஓட்டங்களைத் தொட்டது. தொடர்ந்து கலக்கிய கலிஸ் கொல்கத்தா அணியை 112 பந்துகளில் 150 ஓட்டங்களை எட்ட வைத்தார். இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களின் முடிவில் கொல்கத்தா 3 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் லூயிஸ் கிரேக்ரி 2 இலக்குகளை சரித்தார்.

பலமான இலக்கை விரட்டத் தொடங்கிய ஷோம செட் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியான ஆரம்பத்தை அமைத்தனர். முதல் பந்து பரிமாற்றங்களையும் உரிய வகையில் பயன்படுத்தி ஓட்டங்களைக் குவித்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் ஜோன்ஸ், பீர் ரிக்கோ களமிறங்கினர். லீ வீசிய முதலாவது பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்திலேயே ஜோன்ஸ் பவுண்டரி விளாசினார். முதலாவது பந்து பரிமாற்றம் முடிவில் அணி 15 ஓட்டங்களைக் குவித்தது. இரண்டாவது பந்து பரிமாற்றத்தை சுழற்பந்து வீச்சாளர் இக்பால் அப்துல்லா வீச அழைக்கப்பட்டார். வந்த வேகத்தில் முதலாவது பந்தில் ஜோன்ஸ் இலக்கை கைப்பற்றினார்.

அடுத்து களமிறங்கிய வன்ட மேர்வ் சந்தித்த முதலிரண்டு பந்துகளையும் பவுண்டரிக்கு விளாசி தனது கணக்கை தொடக்கினார். தொடர்ந்து சகலரது பந்து வீச்சுக்களையும் வன்ட மேர்வின் துடுப்பு பதம் பார்த்தது. ஆட்டத்தின் 5 ஆவது பந்து பரிமாற்றத்தை சகிப் அல் ஹசன் வீச வன்ட மேர்வ் றிவேர்ஸ் ஸ்வீப்பில் சிக்ஸர் விளாசினார். அணி 27 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டியது. தொடர்ச்சியாய் அதிரடியாய் ஆடிய மேர்வ், ரிக்கோ ஜோடி 31 பந்துகளில் 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாய் பகிர்ந்தது. கொல்கத்தாவின் பந்து வீச்சை பந்தாடிய மேர்வ் 25 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மேர்வின் அதிரடியை கொல்கத்தா கட்டுப்படுத்த முடியாமல் திணறியது. இறுதியில் ஷோம செட் அணி 57 பந்துகளில் 100 ஓட்டங்களைக் கடந்தது. இரண்டாவது இலக்குக்காக 64 பந்துகளில் 100 ஓட்டங்கள் பகிரப்பட்டது.

ஷோம செட்டின் வெற்றி ஓரளவு உறுதியான நிலையில், 14 ஆவது பந்து பரிமாற்றத்தை வீச சகிப் அழைக்கப்பட்டார். முதலாவது பந்தில் ரிக்கோ ஓங்கி அடிக்க பந்து நேரே மேலே உயர்ந்தது. இருப்பினும் அதை சகிப் பிடியெடுக்கத் தவறவே இரண்டாவது ஓட்டத்துக்கு ரிக்கோ முனைந்தார். நேரே இலக்கை நோக்கி எறிந்து ரிக்கோவை ஆட்டமிழக்கச் செய்தார். 35 பந்துகளில் 28 ஓட்டங்களுடன் வெளியேறினார் ரிக்கோ. அதே பந்து பரிமாற்றத்தின் இறுதி பந்தில் அதிரடியாய் ஆடிய மேர்வ் 43 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்து பரிமாற்றத்தை பகிர்ரா வீச முதலாவது பந்திலேயே ஹில்டர்த் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர் ஆட்டமிழப்புக்களால் கொல்கத்தா அணி மீண்டும் நம்பிக்கை பெற்றது. அதன் பின்னர் களமிறங்கிய கொம்ரன், சுப்பையா ஜோடி சிறப்பாக தடுத்தாடியது. இருந்தும் பகிர்ரா வீசிய 17 ஆவது பந்து பரிமாற்றத்தில் 11 பந்துகளில் 15 ஓட்டங்களுடன் சுப்பையா வெளியேறின்ார். இருப்பினும் இறுதியில் 19.4 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து ஷோம செட் அணி வெற்றி பெற்றது. கொம்ரன் 19, ஸ்னெல் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். பந்து வீச்சில் பகிர்ரா 2 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக ஷோம செட்டின் மேர்வ் தெரிவானார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A New Way for Starting Your Child's Education**

**LITTLE CHUTTYS' MONTESSORI**

A home away from home



**2012 ஆம் ஆண்டுக்கான அனுமதிகள்**

வயது - 3 முதல்

Medium of Instruction - English & Tamil

*Completely Managed under the Montessori Concept with Sensorial Materials Designed by Dr.Maria Motessori along with*

- Exercise for practical life
- Elocution Training
- Educational Videos
- Annual Concert

**Totally a different place for your chutty's placement.**

Transport facility can be arranged.

வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டும்.

**No.5, Broodie front lane, Kandy Road, Ariyalai, Jaffna.**

**Tele phone: 0718262603, 0715357592**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தில்
இருந்து தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சைக்குத் தோற்றி
167 புள்ளிகளைப் பெற்ற



செல்வி அரியரத்தினம் தனுஷா
அவர்களை மனதாரப் பாராட்டி
வாழ்த்துவதுடன்



144 புள்ளிகளைப் பெற்ற
செல்வன் வதனோஜன் றொஷான்
றெயினோல்ட் அவர்களையும்
மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம்

## வயலுக்குள் பாய்ந்தது ஓட்டோ!

யாழ்ப்பாணம், செப்.26

வேலணைசாட்டிக்குச் சென்று ஓட்டோவில் திரும்பிக் கொண்டிருந்த போது அது வயற்காணிக்குள் சரிந்து புரண்டது. அதில் பயணித்த மூவரில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த விபத்து நேற்றுமதியம் இடம்பெற்றது. சம்பவத்தில் பண்டத்தரிப்பு சில்லாலையைச் சேர்ந்தவர்களான அ. சுந்தர்ராஜா (வயது - 49), ச. இம்மானுவேல் (வயது - 45) ஆகியோர் காயமடைந்தனர்.

எதிரே வந்த லொறிக்கு வழி விட்டு வீதியின் கரைக்கு நகர்த்திய போதேஓட்டோதடம் புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி அமிர்தலிங்கம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் **கிருஜன்** (யா/இணுவில் மத்திய கல்லூரி) 2011ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகள் பெற்று சித்தி பெற்றதையிட்டு வாழ்த்துவதுடன் எதிர்வரும் காலங்களில் பல கலைகளிலும் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பான தாத்தா, சித்தப்பா, சித்தி,
லோஜிதன், சுபங்கரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி யோசேப்ஸ்ராலின் தேவமலர் தம்பதியரின் புதல்வி **நிதர்ஷிக்கா** 2011 புலமைப்பரிசில் பரீட்டையில் 156 புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் எதிர்காலத்தில் மேலும் பல சிறப்புகளைப் பெற்று கல்வியிலே சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்,
சித்தி, அத்தை

## யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டம் வியாழனன்று

யாழ்ப்பாணம், செப்.26

யாழ். மாநகர சபையின் 2011ஆம் அண்டுக்கான ஒன்பதாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்துக்கு சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாநகர சபை செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சிவமதி ஏகாம்பரநாதன் அவர்களின் பாசமிகு தந்தை

**செல்லையா சண்முகம்பிள்ளை**

இறைபதமெய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, அவரது உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

கல்லூரிச் சமூகம்
யா/ அராலி இந்துக் கல்லூரி.

## யாழ். ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் மாயம்

யாழ்ப்பாணம், செப.26

யாழ். போதனா வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டிருந்த தமது சைக்கிள் நேற்றுக் காணாமற் போய்விட்டதாக வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர், வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர்களிடம் தெரிவித்துள்ளார்.

மாலை 6மணியளவில் சைக்கிள் விட்ட இடத்துக்குச் சென்று பார்த்த போது அந்த சைக்கிள் காணப்படவில்லை எனவும் பிரஸ்தாப சிற்றூழியர் தெரிவித்துள்ளார். இதுபற்றி யாழ். பொலிஸ் நிலையத்தில் தான் முறையிடப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை ஓரிரு மாதங்களுக்கு முன்னர் அங்குநின்ற மோட்டார் சைக்கிளும் காணாமற் போயிருந்ததாகவும் கூறப்பட்டது. (ஒ-4)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

**நடராஜா கஜமுகன் (கஜன்)**

தோற்றம்: 1992.12.03 மறைவு: 2011.08.12



இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உன்பாச நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிரும். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சாமியன் அரசடி,
முடக்காடு, நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


ஆங்கில மொழிமூலம்
கற்பிக்கக்கூடிய முன்பள்ளி
ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு: 0776184250


## அருள் மிகு ஸ்ரீ மஹா லாவண்ய காளி அம்பாள் திருக்கோயில்

சந்தை வீதி, கொடிகாமம்



அம்பிகை அடியார்களே!

மேற்படி எமது ஆலயத்தில் 33 குண்ட மாபெரும் கும்பாபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் (27.09.2011) செவ்வாய்க்கிழமை அன்று 108 கலச அபிஷேகம் நடைபெற்று, மண்டலப் பூர்த்தி விழா இடம் பெற இருக்கின்றது. அன்று காலை 10 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று விசேட திரவிய ஹோமங்கள் சதுர் ஷஷ்டி உபஷார பூஜை என்பனவும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூஜையும் மகேஸ்வர பூஜையும் இடம்பெறுவதுடன் அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதி வலம் வரும் அருட்காட்சியும் இடம் பெறும்.

அனைவரும் வருக. அன்னை அருள் பெறுக.

சுபமஸ்து

பிரதமகுரு:
பண்டிதர் சிவஸ்ரீ
து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P)
(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)
புன்னாலைக்கட்டுவன்.

க.ஜெயந்திநாத சர்மா
அறங்காவலர்.

ஆலய திருப்பணியில் தர்மகர்த்தா
குடும்பத்தினர்.


## திசை காட்டி

(முன்மாதிரியான ஆலோசனை வழங்கும் நிறுவனம்)

குறைந்த கட்டண விசா ஆலோசனை சட்டத்தரணிகளால் இலவச சட்ட ஆலோசனை IELTS, A1,B1,B2 ஆங்கில வகுப்புகள் (வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு இலவச சேவை)

தினமும் காலை 10.00 மணி - மாலை 5.00 மணிவரை

**37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**


## நெஞ்சம் நெகிழ எம் இதய அஞ்சலி



அருட் தந்தை

**அ. பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி**

அமலமரித்தியாகியாகி அருட்பணி வாழ்வுக்குள் அறுபது ஆண்டுகள் ஒப்பற்ற பணியால் உயர்ந்த செம்மலே, ஆழ்ந்த நன்றியோடு வழியனுப்பி, தங்கள் ஆன்மா ஆண்டவனில் இளைப்பாற அனுதினமும் வேண்டிடுவோம்.

பங்குத் தந்தை, பங்குமக்கள்,
திருநெல்வேலி, கோப்பாய்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரசாமி சோதிமலர்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சோதிமலர் நேற்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
இ. நிர்மலேஸ்வரி (மகள்)

### திருமதி நாராயணபிள்ளை மகேஸ்வரி



மூளாயைப் பிறப்பிடமாகவும், தொல் புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாராயணபிள்ளை மகேஸ்வரி நேற்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாராயணபிள்ளையின் அன்பு மனைவியும், குசலவன், வாசுகி, கண்ணகி, மாதவி, ரமணன் ஆகியோரின் பாசமிகு தாயும், நந்தினி, பாலச்சந்திரன் (அம்முநெற்), பாலச்சந்திரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், எழில், செயோன், மதுவந்தி, ராகுலன், சயன், சிவஜன், மதுசன், மாசிவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையிலும் சிறையில் வாடும் தமிழ்க் கைதியின் பரிதாம்

## விடுவிக்குமாறு மனைவி வேண்டுகோள்

கொழும்பு, செப். 25

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

33 வயதான இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் என்ற அரசியல் கைதியின் நிலையே கவலைக்கிடமாக இருப்பதாக அவரது உறவினர்கள் கூறுகின்றனர். அவரது உடல் நிலை கருதி அவரை விடுவிக்குமாறு அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று அவரது மனைவி ரனிதா ஜெகதீஸ்வரன் கூறினார்.

இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்திற்கு இலக்கான இவர் கப்பல் மூலமாக புல்மோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவரை 2009ஆம் ஆண்டு பிற்பகுதியில் படையினர் கைது செய்து பூஸா முகாமுக்குக் கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து வெலிக்கடை சிறைக்கு அவர் மாற்றப்பட்டார்.

தனது கணவனுக்கு எதிராக இன்னும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவோ வழக்குத் தாக்கல் செய்யப்படவோ இல்லை என்று அவரது மனைவி ரனிதா ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள இவருக்கு சிறைக் கைதியாக இருக்கும் நிலையில் சிகிச்சையளிப்பதும், சிறுநீரக மாற்றம் செய்வதும் கடினமான காரியம் என வைத்தியர்கள் தெரிவித்திருப்பதாக கூறும் ரனிதா, யாரிடம் உதவி கேட்பது என்று தெரியவில்லை என்கிறார் பரிதாபமாக.

இதேவேளை, ஜெகதீஸ்வரனின் விடுதலை தொடர்பான முடிவைச் சட்ட மா அதிபரின் ஆலோசனைப் படி நீதிமன்றமே மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார் இந்த சிறைச்சாலைகளின் தலைமை ஆணையாளர் பீ.டபிள்யூ. கொடிப்புலி.

''இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கும் கைதி ஒருவரை, வைத்தியசாலையிலும் விலங்கு போட்டு வைத்திருக்கிறீர்களே?'' என்று அவரிடம் கேட்டபோது, கைதிகள் தப்பியோடிவிடாமல் இருப்பதற்காக சிறைக் காவலர் ஒருவரின் காவலுடன் அவர்களை விலங்கு போட்டு வைத்திருப்பதுதான் வழமை என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார். (உ)

## சோமவன்ஸவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகள் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளிலும் அரச தரப்பில் இருந்து ஓர் அமைச்சரும் சோமவன்ஸ தரப்பில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஜே.வி.பிக்குள் குழப்பம் ஏற்பட ஆரம்பித்தது முதல் பேச்சுகளை நடத்தி அரசுடன் இணைவதற்கு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜே.வி.பியின் உறுப்பினர்களும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர் என்று அந்த அமைச்சர் மேலும் கூறினார்.

''இருப்பினும், இவர்கள் விமல் வீரவன்ஸவின் கட்சியுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. அநேகமாக ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அரசில் இணையக்கூடிய சாத்தியங்கள் இப்போதைக்கு அதிகமாக உள்ளன'' என்று அந்த அமைச்சு தெரிவித்தது.

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைகளிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட கேணல் ரமேஸின் மனைவி வத்சலாதேவியின் சார்பில் சட்டவாளர் வி.ருத்ரகுமாரன் கடந்த 22 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

கேணல் ரமேஸின் படுகொலை மற்றும் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதை அடுத்து அவர் அவசரமாக நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## ஐ.நா.மன்றலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார். அவர் தனதுரையில், ''ஆபிரகாம் லிங்கனின் துணிவுமிக்க செயலால், அடிமைத்தனத்தை ஒழித்த அமெரிக்க தேசம், இலங்கையில் இராணுவ அடக்குமுறைக்குள் அடிமைகளாக உள்ள தமிழர்களின் நலனைக் கவனத்தில் கொண்டு - இன அழிப்பு, போர்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களை புரிந்தவர்கள் எனக் கூறப்படும் ராஜபக்ஷவையும், அவருக்கு உடந்தையாகச் செயற்பட்ட மற்றைய குற்றவாளிகளையும், அமெரிக்க மண்ணுக்குள் ஒபாமா அரசு அனுமதிகக் கூடாது'' எனக் கேட்டுக் கொண்டார். (உ)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்குமிடையிலான வாய்த்தர்க்கமே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டில் முடிவடைந்து இருவரின் உயிரையும் காவு கொண்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். இது தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

அம்பாறை மஹாஓயா 65ஆம் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றது. (சி)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பான் கீ - மூன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் கடந்தகால மோதல்களுக்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல்தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதியிடம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் வலியுறுத்தியுள்ளார் என்றும் ஐ.நா. செய்திச்சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் வழக்கத்துக்கு மாறாக ஐ.நா. அதிகாரிகளின் பெரியதொரு குழுவும் கலந்துகொண்டது.

சனி இரவு 6.20 மணியளவில் தொடங்கிய இந்தச் சந்திப்புக்கு இருபது நிமிட நேரமே ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால், அதைவிட மேலதிகமாக 10 நிமிடங்கள் சந்திப்பு இடம்பெற்றதால், ஐ.நா. செயலாளர் நாயகத்தை அடுத்துச் சந்திக்கவிருந்த மொன்ரெனிக்ரோ பிரதிநிதிகள் காத்திருக்க நேரிட்டது.

நவநீதம்பிள்ளையின் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் நியூயோர்க் செயலகப் பிரதிநிதியான ஐவன் சிமோனோவிக், மோதல்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான சிறப்பு ஆலோசகர் மாகொற் வோல்ஸ்ரோம், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், பாலித கொஹன்ன, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, அமெரிக்காவுக்கான தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர். (சி)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா குணரத்தினம்



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா குணரத்தினம் 24.09.2011 சனிக்கிழமை கலாமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராமஜெயம் (பிரான்ஸ்), தாரணி, சிவகுமார், ஸ்ரீதாரணி, காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியேரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், நவரட்ணம், அருளானந்தம், யோகலட்சுமி மற்றும் நாகலட்சுமி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசரெத்தினம், அம்பிகைபாலன், யோகராணி (கொலண்ட்), சிவசுப்பிரமணியம் (இந்தியா), அன்னலட்சுமி (இந்தியா), மகேஸ்வரி, சுபத்திராதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான அரியரெத்தினம் (கிளி), சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும், சுதாஜினி, கிருபாகரன், விஜிதா (ஆசிரியை, யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்), உதயகரன் (MPCS, வேலணை) ஆகியோரின் அன்பு மாமனும், கோகுலன் (யாழ்.கனரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), தர்சிகன் (சென்பற்றிக்ஸ்), சாருஜன் (சென்.பெனடிக்ஸ்), நிருசன், நிசாந்தன் (வேலணை மத்திய கல்லூரி), கவிஷானா, நகீர்த்தனா, லக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், யோகராஜா (ஹொலண்ட்), ...கம்மா, தேவி, விசித்திரா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான்.

*தகவல்:*
சிவகுமார் (சிவா-மகன்)
0773545244.

### திருமதி இராசரெத்தினம் செல்லம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,281/11 கண்டிவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இராசரெத்தினம் செல்லம்மா நேற்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு இராசரெத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்.சார்ள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாதசிவம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்னம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற மார்க்கண்டு, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலிங்கம், கதிரவேலு, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செங்கமலம் ஆகியோரின் மைத்துனியும், ராஜ்குமார் (கணக்காளர் - ஆஸ்திரேலியா) ஸ்ரீக்குமார் (பட்டயக் கணக்காளர் - லைபீரியா), கலாதேவி (முன்னாள் ஆசிரியை, கொழும்புத்துறை இந்து ம.வி, ஆஸ்திரேலியா), சத்தியதேவி (ஆசிரியை - யாழ். பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க. ம.வி), பாரதிதேவி (ஆசிரியை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), செல்வகுமார் (ஆசிரியர் மன்/ உயிர்த்தராசன் குளம் றோ.க. தமிழ்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், விஜிதா (முன்னாள் ஆசிரியை - ஆஸ்திரேலியா), சுபாசினி (ஆசிரியை, லைபீரியா), யோகராசா (முன்னாள் சிரேஷ்ட போதனாசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி - ஆஸ்திரேலியா), தயானந்தராஜா (அதிபர், மன்/ சித்திவிநாயகர் இந்துதேசிய கல்லூரி - சிங்கப்பூர்), சற்குணநாதன் (ஆசிரியர் - யாழ். சென்.சார்ள்ஸ் ம.வி), விஜிதா (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வவுனியா வடக்கு) ஆகியோரின் அன்பு மாமியும், ரன்யா, சூர்யா, அபிஷா, வித்தியா, லோசிகா, அபிநயா, வாமனன், ஆரணி, துவாரகன், அபிரா, கஜன், பிருந்தன், அபிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*281/11, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

**ACCA** | **Association of Chartered Certified Accountants**

- ACCA கற்கை நெறிக்கான புலமைப் பரிசில் திட்டம் 2011/2012 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.
- ACCA கற்கை நெறிக்குப் பதிவு செய்து இதுவரை தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் எதிர்வரும் 30.09.2011 இற்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும்.
- Skill modules மாணவர்களுக்குரிய Audit firm training ஆரம்பமாகவுள்ளதால் இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

N.ஜெயபாலசிங்கம்,
இயக்குநர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் நிறுவனம்,
இல.92/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

*அனுசரணை:*
ACCA
Regional Office, Jaffna.
T.P.: 021 5670345
e-mail: jtledurec@gmail.com

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய அங்கத்தவரான

**அமிர்தலிங்கம் விதன்**

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு சபையினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட பளு, வலு தூக்கும் போட்டியில் 85 கிலோ (Weight, Power lift) எடைப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று 2011 ஆம் ஆண்டுக்கான **சிறந்த பளு தூக்கும் வீரர் சிறந்த வலு தூக்கும் வீரர் சிறந்த பலம் மிக்க வீரர்** எனும் சிறப்புப் பரிசில்களைப் பெற்றுள்ள அமிர்தலிங்கம் விதன் அவர்களை மேலும் பல தேர்ச்சிகள் பெற்று சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

**திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சியுள்ள முன்னாள் போராளிகள் மீது கொலைக்குற்ற வழக்குத் தாக்கலாகும்

## நியூயோர்க்கில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

நியூயோர்க், செப்.26

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த அல்லது கைதுசெய்யப்பட்ட 2,000 முன்னாள் போரா ளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட விருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

போரின் முடிவின் போது சுமார் 11,500 போராளிகள் சரணடைந்தார்கள், அல்லது கைது செய்யப்பட்டனர். இவர்களில் சுமார் 3,000 பேர் இராணுவத்தினரால் நடத்தப்படும் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் பேராசிரியர் பீரிஸ், தொடர்ந்தும் முகாம்களில் உள்ளவர்களில் 2,000 க்கும் குறைவானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும், அடுத்த வருடத்தில் இவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகள் இடம் பெறும் எனவும் தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்வதற்காக நியூயோர்க் வந்துள்ள அமைச்சர் பீரிஸ்,செய்தி நிறுவனம் ஒன்றுக்கு இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

போர்க் காலத்தில் இராணுவத்தினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்தார்.

''இருந்த போதிலும் ஜனாதிபதியால் கடந்த வருடத்தில் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்திக் கொண்டிருப்பதாகவும், யாராவது குற்றச்செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்திருப்பின் அவர்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்காக நிறுத்தப்படுவார்கள்'' எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரித்தானிய தொலைக்காட்சி வெளியிட்ட ஒளிநாடாவையும் இந்த ஆணைக்குழு பார்வையிட்டதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நவம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (10)

# யாழ்-கொழும்பு பஸ் உரிமையாளர்கள் வெள்ளவத்தை பொலிஸில் கலந்துரையாடல்

## இன்றும் ஒரு முக்கிய சந்திப்பு

வெள்ளவத்தை பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகளுக்கும் யாழ்-கொழும்பு பொலிஸ் தனியார் பஸ் உரிமையாளருக்கும் இடையே நேற்றுக் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

பஸ் உரிமையாளர் மற்றும் பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

120 க்கும் மேற்பட்ட யாழ்-கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர்களும் அங்கு வருகை தந்திருந்தனர். இவர்களில் முன்னணி தனியார் பஸ் உரிமையாளர்களை உள்ளடக்கிய 5 பேர் கொண்ட குழுவினர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் வெள்ளவத்தைப் பொலிஸ் அதிகாரிகளுடன் முக்கிய நான்கு விடயங்கள் குறித்து விதாதித்தனர்.

அந்த விடயங்கள் வருமாறு:

* முறைகேடான, சட்ட விரோதமான ஆசனப்பதிவை மேற்கொள்வதைத் தடுத்தல்.
* எதிர்வரும் முதலாம் திகதி முதல் பிரயாணிகளுக்கான ஒழுங்கான சேவையையும், குறித்த நேரத்தில் உரிய சேவையை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுத்தல்.
* இதுவரை காலமும் வெள்ளவத்தையில் வைத்து பயணிகள் ஏற்றப்பட்டனர். எதிர்வரும் முதலாம் திகதி முதல் பம்பலப்பிட்டி ரயில் நிலையம் அருகே பயணிகள் ஏற்றப்படுவர்.
* வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களை இனிமேல் சேவையில் ஈடுபடுத்தப் போவதில்லை.

இதேவேளை இன்று முற்பகல் 10 மணிக்கு பொலிஸ் நிலையத்தில் தனியார் பஸ் உரிமையாளர் குழுவுக்கும் பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. (ஒ-323)

# உருமாறுகிறது பயங்கரவாதச் சட்டம்

கொழும்பு, செப். 26

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அமெரிக்காவில் உள்ளது போன்று உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் என்ற புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதாக லக்பிம நியூஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் 2012 மார்ச்சில் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தப் புதிய சட்டத்தை கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் தான், மனிதஉரிமை மீறல்கள் இடம்பெறுவதாக அனைத்துலக சமூகம் கொழும்பு மீது கொடுத்து வரும் அழுத்தங்களைக் குறைப்பதற்காகவே அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ளது போன்று தீவிரவாதத்தை முறியடிப்பதற்கான புதிய சட்டம் ஒன்றை கொண்டு வருவதில்அரசு அக்கறை கொண்டுள்ளதாக சட்டமா அதிபர் ஈவாவனசுந்தர உறுதிப் படுத்தியுள்ளார். (ஒ-10)

# ஜெனிவாவில் இனிவரும் நாள்களும் இலங்கைக்கு சோதனைக் காலமே!

கொழும்பு, செப். 26

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 18 வது அமர்வு இடம்பெற்று வருகிறது. இன்னும் ஐந்து நாள்கள் நடைபெறவுள்ள இந்த அமர்வில் தமக்கு எதிரான பிரேரணை எதுவும் சமர்ப்பிக்கப்படாது என்று உறுதியாக நம்புகிறது-இலங்கை.

கடந்த வியாழக்கிழமையே பிரேரணைகளை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி என்பதன் காரணமாகவே இலங்கை இந்த நம்பிக்கையை கொண்டிருந்தது.

எனினும் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றுக்கு கனடா இறுதிநேரத்தில் முயலக் கூடும் என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ள போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டில் விசாரணைகளை மேற்கொண்ட நல்லிணக்க ஆணைக் குழு வின் அறிக்கை எதிர்வரும் நவம்பரில் வெளியாகும் நிலையில் அதனை எதிர் வரும் 19 ஆவது மனித உரிமைகள் பேரவை அமர் வில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற யோசனையை கொண்டு வர கனேடிய குழு முயற்சித்து வருகிறது.

அதனை தற்போது நடைபெற்று வரும் 18 ஆவது அமர்வின் எதிர்க்கால அட்டவணையில் சேர்க்க கனடா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும் இதனைத் தடுப்பதற்காக இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் மீண்டும் ஜெனீவாவுக்கு சென்று கலந்தாலோசனைகளை நடத்தி வருவதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

(ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் கஜப்பிரியன்



திரு.திருமதி இரவிச்சந்திரன்-நர்மிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் கஜப்பிரியன் நேற்று (25.09.2011) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரிகைள் இன்று (26.09.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலையவீதி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### குணநாயகம் யசோதரன் (யசோ)



உரும்பிராய் தெற்கு, பலாலி வீதி, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் யசோதரன் 22.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 27.09.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் [illegible] மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

அறிவாலயா கல்வியகம்
சூராவத்தை, சுன்னாகம்
விஜயதசமியன்று
தரம் 5 புலமைப்பரிசில்
வகுப்பு – 2012
ஆசிரியர் இ.தேவகுமார்
ஆரம்பம்: 06.10.2011 வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு
இன்றுமுதல் மாலை 4–6 மணிவரை
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு: தரம் 04 - 2012 (தற்போது தரம் 03 கற்பவர்களுக்கான) வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.
நிர்வாகி

காணி விற்பனைக்கு
நீர்வேலி கரந்தன்
சந்தியில்தோட்டக்காணி [கிணறு, பாதை] 35 பரப்பு விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0772367508

தேவை
கணக்குப்பதிவாளர்-பெண் பிள்ளைகள்
முன் அனுபவம், கணினி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
26.09.2011 - 29.09.2011 வரை
காலை 9-12 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
செல்வா எலக்ரிக்கல்,
இல. 21, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
தொ.பே. இல.: 0755776792

DCM
யாழ்.நகர்
A/L 2012,2013 & Paper
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு A.P.பகீரதன்
வணிகக் கல்வி V.முரளி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

IBM
3.2 HT LGA Processor
1 GB DDR2 RAM
DVD Combo
80GB HDD
256 MB VGA
16,500/=
1 Year Warranty
Original Windows XP

IBM
3.0 HT LGA Processor
512 MB DDR2 RAM
DVD Combo
40GB HDD
128 MB VGA
13,500/=
1 Year Warranty
Original Windows XP

ACER
2.8 Ghz PGA Processor
512 MB DDR RAM
DVD Combo
80GB HDD
128 MB VGA
Tower Casing
13,000/=
1 Year Warranty
Original Windows XP

Free : Keyboard, Mouse, Speaker
512MB DDR 1 RAM 1250/=
512 MB DDR 2 RAM 900/=
512 MB SD RAM 1250/=
5MB Web cam 1250/=
7.2 Dongle (E173)4250/=
8 GB Pendrive 1650/=
Head Phone 300/=
சகல விதமான கணினிகளும் உங்கள் வீடுகளுக்கோ அலுவலகங்களுக்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்
Operating System Install/Repair
Hardware Repair,Virus Removal
Networking Setup,Remote support
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
021 222 4692
077 968 9043
077 135 0476
077 053 0566

மாருதி செரமிக்
New Maruthi Ceremic
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரை மாபிள்கள், சுவர் மாபிள்கள், குளியலறைச் சாதனங்கள், பெயின்ற் என்ட் எலக்ரிக்கல்ஸ் மற்றும் pvc பைப் வகைகள் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.
மாருதி செரமிக்
இல. 37 கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P.: 021 3208350, 0775702253

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org